# வேட்டுவர் வேந்தர் மரபினர்




ஆசிரியர் :

**Dr. D. வாழைபரமேஸ்வரன்** MD (C.I.S),

PGCIH, PGDEM, FICM, DIFD(CMC), PG.Endo (UK)
Senior Medical Officer



வெளியீடு :

வேட்டுவர் டிவி

# நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேட்டுவர் வேந்தர் மரபினர் |
| நூல் பொருள் | : | வரலாறு |
| மொழி | : | தமிழ் |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பு ஆண்டு | : | 2025 |
| நூலின் அளவு | : | 14 செ.மீ x 21 செ.மீ |
| பக்கங்கள் | : | 132 |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளி |
| விலை | : | ரூ. 200/- |
| பிரிண்டர்ஸ் | : | குகன் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>12-A, வாமலை வீதி, பிரப் ரோடு,<br>ஈரோடு - 638 001.<br>செல் : 98659 79869 |
| ஆசிரியர் | : | Dr.D. வாழைபரமேஸ்வரன் M.D.,<br>ஒசூர்.<br>செல் : 85858 68632. |
| வெளியீட்டாளர் | : | வேட்டுவர் டிவி |

# சமர்ப்பணம்



இந்நூலை எனது தந்தையார்
தெய்வத்திரு. புலவர். K.**தேவன்** அவர்களுக்கு
சமர்ப்பிக்கின்றேன்.

# உள்ளே . . .


| | | |
|---|---|---|
| தமிழகம் | ... | 1 |
| வேட்டுவர் கோலங்கள் | ... | 7 |
| வேட்டுவர் வேட்டைத்திறன் | ... | 15 |
| கானவரின் விலங்கு வேட்டை | ... | 21 |
| ஆகோள் பூசல் | ... | 34 |
| பெருங்கற்காலம் முதல் சங்ககாலம் வரை | ... | 38 |
| வேட்டை ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பத்திறன் | ... | 40 |
| வில் அம்பு | ... | 42 |
| சங்ககாலம் | ... | 47 |
| தொல்காப்பியம் காட்டும் பண்டைய போர்கள் | ... | 51 |
| படைப்பிரிவு | ... | 53 |
| போர் வகைகள் | ... | 65 |
| நடுகற்கள் | ... | 71 |
| நடுகல்லில் வேட்டுவர் | ... | 75 |
| மன்னன் வெஞ்சமன் | ... | 92 |
| கற்பதுக்கை | ... | 110 |
| நவகண்டம் - அரிகண்டம் | ... | 112 |
| வேட்டுவர் கலிவெண்பா | ... | 119 |

# அணிந்துரை

மானுடவியலில் மனிதன் தோன்றியவிதம் டார்வின் தத்துவம் தெளிவாகக் கூறுகிறது. அப்படிப்பட்ட நிலையின்தான் நம் தமிழகத்தில் வாழ்ந்த ஆதிமக்கள் இனக்குழுக்களை அமைத்து வாழ முற்பட்டவர்கள் வேட்டுவர்களே. சில நேரங்களில் வேட்டையாடும் போது ஒற்றை ஆளால் முடியவில்லை. துணை வேண்டுமென்று நினைத்தார்கள். அதற்காக இணைந்தவர்கள் தான் இனக்குழுக்கள். இப்படிப் பல இனக்குழுக்கள் ஆங்காங்கே தோன்றின. அப்படி இணைந்து வாழ்ந்த இனக்குழுக்களில் ஆகோள் பூசல் நிகழ்ந்ததை நூலாசிரியர் திரு.வாழை பரமேஸ்வரன் சுட்டியுள்ளார். சிறுசிறு சண்டைகள் ஏற்பட்டன.

அந்த இனக்குழுக்கள் அந்தக் காலத்தில் மாடுகளைத் தங்கள் செல்வமாகக் கருதினர். வேறு ஏதோ இனக்குழுவினர் அந்தக் கால்நடைகளைக் கவர்ந்து செல்வர். அப்போது அந்தக்குழுவினர் தடுத்து நிறுத்துவர். அப்போது சண்டை மூலம் தோற்றால் தப்பி ஓடுவர். இன்றேல் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வர். இதை ஆநிரை கவர்தல் (வெட்சி) என்றும் ஆநிரை மீட்டலை (கரந்தை) என்றும் கூறினர்.

வேட்டுவர்கள் கண்ணேணி கொண்டு தேன் எடுத்துள்ளனர் என்பதையும் விவரித்துள்ளார். வேட்டுவர் கால்நடைகளை ஆயர்கள் மேய்த்தார்கள். பின்னாளில் அவர்களே கால்நடைகளை சொந்தமாகக் கொண்டுள்ளனர். அக்கால வேட்டுவர் வேட்டைக்குப் பயன்படுத்திய கருவிகளையும் பட்டியலிட்டுள்ளார் நூலாசிரியர். அந்த வேட்டைக் கருவிதான் பிற்கால போர்க்கருவிகளாக மாறியிருக்கிறது என நூலாசிரியர் கூறுகிறார். தொல்காப்பிய காலந்தொட்டே போர்க் கருவிகளைக் கையாள்வதிலும், அவற்றை வடிவமைப்பதிலும் பழக்கமுள்ளவர்களாக இருந்தனர் வேட்டுவர்கள். வேட்டுவர்கள் முப்போர்க் கருவிகளைக் கையாண்டுள்ளனர். அது வாள், வேல், வில் ஆகும்.

சங்ககாலத் தொடக்கத்தில் பாரி, ஓரி, காரி, அதியன் போன்ற வேட்டுவ சிற்றரசர்களை சேர, சோழ, பாண்டியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து செல்வாக்குப் பெற்றனர். அக்காலப் போர்முறை பற்றியும், ஆட்சிமுறை பற்றியும் எடுத்துக்காட்டுகள் கூறியுள்ளார்.

இந்நூலைப் படிக்கப் படிக்க இன்னும் தெரிந்துகொள்ள வேண்டுமே என்ற ஆர்வம் தோன்றுகிறது. வாழைபரமேஸ்வரன் அவர்களின் முயற்சி பெருகட்டும்.

- ***S.* கைலாசம்** எம்.ஏ.,எம்.எட்.,
ஆசிரியர். கண்ணப்பர் கல்வி மடல்

# முன்னுரை

**வை**யகம் போர்த்த வயங்கு ஒலி நீர் கையகலக் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி புறப்பொருள் வெண்பாமாலை. இதில் கல் என்பது மலையைக் குறிக்கும். அதேபோல் மண் என்பது வயலைக் குறிக்கும் சொல்லாகும்.

மண்ணும் மலையும் அணி நிழற்
காடும் உடையது அரண் (குறள்)

மலைகள் தோன்றி வயல்கள் தோன்றாக் காலத்தே கையில் வாளோடு தோன்றிய மூத்தகுடி வேட்டுவர் ஆவார். இவர்கள் குறிஞ்சிநிலம் மலையும் மலை சார்ந்த பகுதியில் வாழ்ந்தவர்கள். இவர்கள் முதன்முதலில் உலோகங்களைக் கண்டறிந்து அதன் பயன்பாட்டில் வில், வேள், வாள் போன்ற ஆயுதங்களைக் கொண்டு வேட்டையாடினர். பின்னர் போர் ஆயுதங்களாக வேட்டை ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இதுவே தமிழ் மண்ணில் அரசு உருவாக முக்கியக் காரணியாக அமைந்தது.

வேட்டுவர்கள் குறிஞ்சி நிலத்தில் தன்னையும் தன் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு விவசாயத்தைக் கற்று உணர்ந்தனர். அதன்பின் கால்நடைகளை வளர்த்துப் பெரும் செல்வந்தர்களாகவும் வாழ்ந்தார்கள். இவ்வாறு கால்நடைகளை வளர்க்கும் பொழுது அவர்களுக்குள் பூசல் ஏற்பட்டது. அந்தப் பூசலில் ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்று தொல்காப்பியம் கூறும் வேட்டுவர்கள் இனக்குழுத் தலைவர்களாகவும் பின்னர் ஊர்த்தலைவர்களாகவும் மாறினர். தலைவர்கள் மற்ற தலைவர்களை அடக்கி குறுநில மன்னர்களாகவும், மன்னர்கள் வேந்தர்களாகவும் உயர்ந்தார்கள்.

வேட்டுவர்கள் தமிழகத்தில் வேந்தர்களாக 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்து மக்களுக்கு குளம், கால்வாய், அணை போன்ற வசதிகளைச் செய்து நீர்ப்பாசனத்தை மேன்மைப்படுத்தினர். இதன் மூலம் விவசாயம், கால்நடை போன்றவை சிறந்த நிலையை அடைந்து, வணிகத்தில் அவர்கள் சிறந்த நிலையை அடைந்தார்கள்.

இதன் மூலம் மிகுந்த செல்வந்தர்களாகவும், வாரி வழங்கும் வள்ளல்களாகவும் திகழ்ந்தவர்கள் கோயில்களை உருவாக்கி மக்களை நல்வழிப்படுத்தினர். புதிய புதிய தொழில் நுட்பத்துடன் போர் ஆயுதங்களைக் கண்டுபிடித்தனர். இதன் மூலம் கடல் கடந்து எண்ணற்ற நாடுகளை வசப்படுத்தினர்.

மக்களைத் தன் உயிரினும் மேலாகக் காத்து வந்தனர். இத்தகைய பெருமைமிக்க வேட்டுவர்களின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளேன். இந்தப் புத்தகம் சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை வழியாக ஆலோசனைகளும் புத்தகம் சிறப்பாக அமைய ஊக்கம் கொடுத்த திரு.சிவானந்தம், திரு.மல்லீஸ்வரன், திரு.கைலாசம், குகன் ஆப்செட் உரிமையாளர் திரு.தங்கவேல், அரசம்பாளையம் திரு.சந்திரசேகர், திரு.ஆனந்தகுமார், ஓவியர் த.நன்னை, திருமதி.தனலட்சுமி ஆகியோர்களுக்கும், என்னுடைய அனைத்து நடவடிக்கைகளிலும் உறுதுணையாக இருந்த எனது மனைவி கவிதா வாழைபரமேஸ்வரன் அவர்களுக்கும், திரு.வடிவேல், திரு.வெள்ளியங்கிரி, திரு.கருணாகரன் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வரலாற்று ஆய்வாளர்கள் திருமதி. பவளசங்கரி, திரு.தெய்வநாயகம், திரு.ராஜசேகர தங்கமணி ஆகியோருக்கும் என்னுடைய நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றும் உங்கள்
Dr. வாழைபரமேஸ்வரன் M.D.,
ஒசூர்

# வேட்டுவர் வேந்தர் மரபினர்

## தொல்லியல் மற்றும் மானிடவியல் நோக்கில் . . .

**தமிழகம் :**

*மனிதன் மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றினான் என மானிடவியல் கூறுகிறது. படிப்படியாகத் பரிணாம வளர்ச்சி அடைந்து நவீனகால மனிதனாக உருவானான்.*

*தமிழ்ப் பண்பாட்டு வரலாறானது இவ்வாறு தோன்றிய மனிதனின் காலத்தைக் காட்டுமிராண்டியின் காலம் என்றும் அதிலிருந்து படிப்படியாக வளர்ந்து நவீன காலத்தை அடைந்தான் என்றும் கூறுகிறது. காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் மனிதன் தனது உணவுத் தேவைக்கு வேட்டைத் தொழிலையே பெரிதும் சார்ந்து இருந்தான். அத்துடன் இயற்கையில் கிடைக்கும் காய்கனி மற்றும் கிழங்குகளைப் பெரிதும் நம்பி இருந்தான். இந்நிலையில் காலநிலை மாற்றத்தால் வறட்சி மற்றும் நோயினால் விலங்குகள் இறந்ததால் மனிதன் உணவுக்காக வேறு மூலதனங்களைத் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் மனிதன் சக மனிதனையே கொன்று தின்னும் பழக்கம் உண்டாகியது. (வே.பெருமாள்சாமி, சங்க காலத்தில் தமிழர்களின் சமூக நிலை, பக்கம் 11). மனிதர்கள் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் அவர்களிடம் இந்த நிலை நிலவியது.*

*மனித குலமானது தோன்றி வளர்ந்து இன்று நவீன மனிதனாக உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. பூமியில் அதன் வரலாற்றின் போக்கை வைத்து பின்வருமாறு மனித பண்பாட்டு வரலாற்றை இனம் காணலாம்.*

*1) பழங்கற்காலம் பண்பாடு*
*2) இடைக்கற்காலம் பண்பாடு*
*3) புதியகற்கால பண்பாடு*
*4) பெருங்கற்கால பண்பாடு*
*5) இரும்புக்கால பண்பாடு*
*6) செப்புக்கால பண்பாடு*
*7) வரலாற்றை ஒட்டிய காலப் பண்பாடு*

மேற்கூறிய காலநிலை அட்டவணை மனிதன் தோன்றியதிலிருந்து படிப்படியாகப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து அதைப் பயன்படுத்தி அதன் மூலம் தன் வாழ்வியல் முறையால் முன்னேறியதை நாம் அறியலாம். இந்தக் காலங்களில் பழங்கற்காலம் மற்றும் இடைக்காலங்கள் இரண்டும் கிமு 50000 முதல் கிமு 6000 வரைக் காணப்படுகிறது. இந்தக் காலங்களில் வாழ்ந்த மக்கள் வேட்டைச் சமூகமாக வாழ்ந்தார்கள்.

நாம் இந்த அத்தியாயத்தில் பெருங்கற்காலம் கி.மு. 1500 கடைச் சங்ககாலம் கி.பி.400 வரை உள்ள தமிழ் மக்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து பார்ப்போம்.

## புதிய கற்காலம்

கி.மு. 4000 முதல் 1800 வரை இந்தக் காலங்களில் மனிதன் மெருகூட்டப்பட்ட வளவளப்பான கட்கருவிகளைப் (Polished Stone Tool) பயன்படுத்தினான். இந்தக் கருவிகள் இடைக்கற்காலத்தில் தொடர்ச்சியான அளவில் மழுங்கிய கருவி (Mace head ) மட்கலன் முதலானவைப் பயன்படுதப்பட்டன.

## பெருங்கற்காலம்

கி.மு 1500 முதல் கிமு 500 வரை ஆகும். இரும்பின் பயன்பாடு கண்டறியப்பட்டது. இந்தக் காலத்தில் இறந்தவர்களைப் பதுக்கைகளிலும் கல்திட்டடைகளிலும் (dolmen) தாழிகளிலும் (urn) புதைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

## சங்க காலம்

கி.மு.600 முதல் கி.பி.400 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் எல்லையான வடவேங்கடம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள பகுதிகளில் தமிழ் மக்கள் பரந்து விரிந்து வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தொல்காப்பியம் பிரித்துக் கூறுகிறது. மக்களின் வாழும் இடத்திற்கு ஏற்ப அவர்களின் உரிப்பொருள் கருப்பொருள்களை விளக்குகிறது.

தொல்காப்பியம் சங்க காலத்திற்கு முற்பட்டது அல்லது சங்ககாலத்தின் தொடக்கத்தைச் சார்ந்தது என்று தமிழ் அறிஞர்களால் கருதப்படுகிறது.

## குறிஞ்சிநிலம்

முதலில் தோன்றிய மனிதன் வாழ்வதற்குச் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் குறிஞ்சி நிலம் ஆகும்.

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலைச் சார்ந்த பகுதிகளும் ஆகும். இங்கு காடுகளும், காட்டு விலங்குகளும், குகைகளும் பாறைகளும், அருவிகளும் இருந்தது. எனவே மனிதன் முதலில் மலை சார்ந்த காடுகளைத் தனது வாழ்வதற்கு ஏற்ற பகுதியாகத் தேர்ந்தெடுத்தான். மேலும் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பதால் கூட இந்த இடத்தைத் தேர்தெடுத்திருக்கலாம். மலையில் தான் ஆதி மனிதன் வாழ்வதற்கான இயற்கையான உணவுகள், பழங்கள், கொட்டைகள், தேன் மற்றும் நீர்வீழ்ச்சி போன்றவை உள்ளன. பொதுவாக ஆராய்ச்சியாளர்கள் மனித நாகரீகம் ஆற்றங்கரையில் தோன்றியது என்பார்கள். ஆனால் நாகரீகத்தில் வளர்ந்த, தொழில்முறையில் நீரைக் கையாள தெரிந்த நிலையில் உள்ள நாகரீக மனிதர்கள் தான் ஆற்றங்கரை ஓரங்களில் வாழ்வாதாரத்தைத் தேர்ந்தெடுத்தனர். எனவே ஆற்றங்கரை நாகரிகம் தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட வாழ்வுமுறை என நாம் எடுத்துக் கொள்ள முடியாது. மனிதன் நாகரீகமன நிலையை அடைந்த பின்னரே ஆற்றங்கரையில் தங்கி வாழ்ந்திருக்க முடியும்.

தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களின் கூற்றுப்படி குறிஞ்சி நிலம் மனிதன் தோன்றவும், நாகரீக வளர்ச்சி அடைந்த, நாகரீகம் அறிந்த மனிதனாக மாறவும் சிறந்த இடமாக குறிஞ்சி நிலம் இருந்துள்ளது.

தமிழகத்தில் கன்னியாகுமரி முதல் வேங்கடம் வரை தொடர் மலைகளான கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை பரவியுள்ளது. இங்கு தோன்றிய முதல் மனிதன் குரங்குகள் போல் தான் வாழ்க்கையைத் தொடங்கி இருப்பான். ஆரம்பத்தில் மனிதன் பழங்கள் மற்றும் விதைகளையும் வேட்டையில் கிடைத்த சிறு உயிரினங்களையும் உண்டு வாழ்ந்து இருப்பான். தீ, மின்னல் மற்றும் கொடிய விலங்குகளின் ஆபத்தை உணர்ந்த மனிதனுக்கு இவை அச்சம் தரக்கூடியவையாக இருந்திருக்கும். இதிலிருந்து மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள உயரமான

மரப்பொந்துகள் மற்றும் பாறைகளில் உள்ள குகைகளில் வாழக் கற்றுக் கொண்டான். மேலும் மனிதன் தன்னைத் தாக்க வரும் உயிரினங்களிடமிருந்து தப்பி ஓடாமல் எதிர்த்து தாக்கவும் கற்றுக்கொண்டான். தன் கையில் இருந்த குச்சி மற்றும் கற்கள் போன்றவற்றின் உதவியுடன் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். இதிலிருந்தே மனிதன் மற்ற விலங்குகளிடமிருந்து வேறுபட ஆரம்பித்தான். எந்தவித பாதுகாப்பு அரணும் இல்லாத மனிதன் கையில் உள்ள சிறு கருவிகள் மூலம் வேட்டையாட கற்றுக் கொண்டான். இதன் மூலம் இவர்களின் உணவு தேவை ஓரளவுக்குப் பூர்த்தி செய்ய முடிந்தது. ஆனால் உணவு பற்றாக்குறை நீடித்தது. இந்த நிலையில் மனிதன் தேன், பழங்கள், கிழங்குகள், தானியங்கள் மற்றும் சிறு சிறு உயிரினங்களை வேட்டையாடி உண்டு வாழ்ந்தான்.

இந்த நிலை வரை மனிதன் தனது ஆயுதங்களாகக் கற்பாறைகளில் செய்த கூர்மையான ஆயுதம் மற்றும் குச்சி போன்றவைகளைத்தான் பயன்படுத்தினான். இந்தக் மனிதர்களின் வாழ்க்கை நிலையற்றது குகையில் வாழ்வது, உணவு தேவைக்குக் குழுக்களாக இடம்பெயர்வது தொடர்ந்தது. இதே வாழ்க்கை முறையை அனைத்து இனக்குழுக்களும் செய்து வந்தன. இதுவே புதிய கற்காலப் பண்பாடு ஆகும்.

வேல் போன்ற கூர்மையான கம்புகளைப் பயன்படுத்திய மனிதன் குறிப்பாகக் குறிஞ்சிநில மனிதன் சிறு வில் அம்பைத் தனது கடந்த கால அனுபவங்களைக் கொண்டு தயாரிக்கக் கற்றுக் கொண்டான். இதே காலங்களில் மற்ற தொழில்நுட்பமும் கண்டறியப்பட்டன. தீ உருவாக்கும் மரக்கட்டைக் கடையும், மத்து, பானை செய்தல் போன்றவகையாகும். இவற்றில் வில் அம்பு தயாரிக்கும் அறிவே மனித வாழ்வில் மிக முக்கியமான மாற்றத்தை உருவாக்கியது. இந்தக் கண்டுபிடிப்பற்கு முன்பு வரை உணவு தேவைக்கு மிகவும் கடுமையாக உழைத்த மனிதன் மிக எளிதாக வேட்டையாட கற்றுக் கொண்டான். இதுதான் மனித வாழ்க்கையை மாற்றிய கண்டுபிடிப்பு ஆகும். மிகப்பெரிய விலங்குகள் ஆயினும் மிகக் கொடிய விலங்கு ஆயினும் அதை மனிதன் எளிதாக வேட்டையாடினான். இதன் மூலம்

மனிதர்களிடையே குறிப்பாக இனக்குழு மக்களாகிய வேட்டுவர் குலம் மிகவும் வல்லமை பெற்ற நிலையை அடைந்தது. தனது ஆற்றலைப் பெருமளவு பெருக்கிக் கொண்டது, ஆனாலும் இந்தக் கண்டுபிடிப்பு மிகக் குறைவான காலத்திற்கே பயன்பட்டது. ஆம்! மக்கள் தொகைப் பெருக்கம் மனிதனின் உணவு தேவையை மீண்டும் அதிகரித்தது. இந்தக் காலகட்டதில் மனிதன் குறிஞ்சி நிலதில் இருந்து நீர்நிலை உள்ள பகுதியை நோக்கி நகர ஆரம்பித்தான். இவ்வாறு குடிபெயர்ந்த மனிதன் முதலில் இருந்தது போல் குகை மற்றும் மரத்தில் வாழாமல் தான் விரும்பும் பகுதியில் குடிசைகள் அமைத்துக் குழுக்களாக வாழவும் குறிப்பிட்ட காலம் வரை ஒரே இடத்தில் தங்கி வாழவும் தொடங்கினர். வில் அம்பு மற்றும் வேல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துதல், தீயை உருவாக்குதல் போன்றவற்றை அறிந்து கொண்டதால் மனிதன் ஒரு சில இடங்களில் நிலையாகத் தங்கி வாழமுடிந்தது மனிதன் விவசாயம் செய்யக் கற்றுக் கொள்ளவும் விலங்குகளைத் தனது நண்பனாக மாற்றவும் முடிந்தது.

**விவசாயம்**

வேட்டையை மட்டுமே நம்பிய மனிதன் முதன் முதலாக விவசாயத்தைத் தெரிந்து கொண்டான். தான் தின்று தூக்கி வீசிய பழங்களின் கொட்டைகளில் இருந்து செடிகள், மரங்கள் வளர்வது பற்றித் தெரிந்து கொண்ட அவன் மலைகளில் பன்றிகள் கிழங்குகளுக்காகப் பறித்த நிலங்களில் விதையை விதைத்துப் பயிர் செய்து கொள்வது எப்படி என்றும் தெரிந்து கொண்டான். இது மனிதனின் மிகப்பெரிய இரண்டாவது கண்டுபிடிப்பாகும். விவசாயம் மனிதன் ஓர் இடத்தில் அதிக நாள் தங்குவதற்கும் வருங்காலத்திற்குத் தேவையான உணவு தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மிகவும் பயன்பட்டது. விவசாயம் செய்வதை அறிந்து கொண்ட நிலையில் மனிதன் பொதுவுடமை உணர்வுடனும் அதைக் கட்டாயம் செயல்படுத்தும் நிலையிலேயே இருந்தான். இந்தக் காலம் வரை மனிதன் குழுக்களாகவே வாழ்ந்தான். கிடைத்த உணவைக் கொண்டு ஓரளவிற்குத் தனது உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் நிலைக்கு வந்தார்கள். இந்த நிலையில் மனிதன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான். கொடும்

விலங்குகளிடமிருந்து காத்துக் கொள்ள ஆயுதங்களை வைத்திருந்தான். மழை மற்றும் வறட்சி காலங்களில் சமாளிக்க திணை, சாமை, வரகு போன்ற விதைகளைக் குதிர் பானை போன்றவற்றில் சேமிக்கக் கற்றுக் கொண்டான். தீக்கடையும் மத்து போன்றவற்றில் இருந்து தீ உருவாக்கக் கற்றுக் கொண்டான். இந்தக் காலம் மனிதன் பொற்காலம் ஆகும். கிடைக்கும் உணவை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். சிறுவர்கள் விளையாடினர், பெரியவர்கள் மன்றத்தில் கூடி பேசினார்கள், இளைஞர்கள் காதலில் மூழ்கினர். இந்தக் காலத்தில் மனிதன் விலங்குகளை வேட்டையாடினாலும் குட்டிகள், வயதான விலங்குகள் மற்றும் கர்ப்பமாக உள்ள விலங்குகளை வேட்டையாடவில்லை. கொடு மிருகங்களான புலி, யானை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி போன்றவற்றை வேட்டையாடினர். இந்தக் காலத்தில் இவர்கள் உணவு தேவை அதிகம் இல்லாததால் இவ்வாறு நடைபெற்றது. வேட்டுவர்கள் யானை, மான், நாய், முயல் பன்றிப் போன்ற விலங்குகளைத் தனது குரும்பில் வளர்க்க ஆரம்பித்தனர். பார்வை மான், கும்கி யானை, நாய் போன்றவற்றைக் கொண்டு தனது வேட்டையாடும் வேலையைக் குறைத்து எளிதாக வேட்டையாட கற்றுக் கொண்டான். மேலும் முயல், பன்றி, காடை, கோழி போன்றவைகளை வீட்டு விலங்குகளாக வளர்த்து மனிதன் தனது உழைப்பை மிகவும் குறைத்துக் கொண்டான். வேட்டுவர்த் தனது உடல் உழைப்பைக் குறைக்க ஆடு, மாடு, எருமைகளை வளர்க்க (புறம் 324) ஆரம்பித்தனர். கால்நடை வளர்ப்பு வேட்டுவர்களின் உணவு தேடல் சிரமங்களைப் பன்மடங்கு குறைத்தது. குறிஞ்சி நிலத்தில் வேட்டை ஆயுதம் கண்டுபிடித்த வேட்டுவர்களின் வாழ்வில் மிகவும் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஆம்! முதலில் விலங்குகளை வேட்டையாடி தனது உணவு தேவையை எளிதாகப் பூர்த்தி செய்து கொண்ட பின் நிலையாக வாழ்வதற்குத் தேவையான இடத்தைக் கண்டறிந்து வாழ ஆரம்பித்தனர். நிலையான வாழ்க்கை விவசாயத்தை அறிமுகப்படுத்தியது. விவசாயம் வேட்டுவர்களின் உடல் உழைப்பைக் குறைத்து எதிர்கால உணவு தேவையையும் பூர்த்தி செய்தது. இது மனிதனை அமைதியாக வாழ வளமான சூழலைக் கொடுத்தது.

சங்க இலக்கியங்கள் சங்க தமிழரின் வாழ்வியலைக் காட்டும்

கண்ணாடி. சங்கத் தமிழர் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். மனிதன் விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்தில் விலங்கைத் தாக்கி வீழ்த்தி வாழ முற்பட்ட நிலையில் வேட்டைத் தொழில் தோன்றியிருக்க இடமுண்டு. அன்று தொடங்கி இந்தத் தொழில் காலந்தோறும் வளர்ந்து தற்காலத்தில் ஒரு கலையாகப் போற்றப்படுகின்றது. காலமாற்றத்தால் இக்கலை இன்று வீரத்தின் அடையாளமாகக் கருதப்படுவதும் சுட்டத்தக்கது. சங்க காலத்தில் ஐந்நிலமக்களும் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டனர் என்று அறிய முடிகின்றது. உணவு தேடுதல், பொருளீட்டல் என்ற அடிப்படைகளில் வேட்டைகள் நிகழ்ந்தன. வேட்டைத் தொழிலில் வேட்டையாடப்படும் பொருளாகவும், வேட்டையாடுவதற்கு உதவியாகவும் விலங்குகள் இருந்தன.

## வேட்டுவர்

பெரிய தலையும் காட்டுப் பூனையின் ஆண் போன்ற வெருண்ட பார்வையும் (புறம் 324) ஆலந்தூர்க் கிழார் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார். "சிந்துவர் ஆடையும் காலில் தோல் செருப்பும், கையில் வில்லும் அம்பும், பருந்தின் தூவிகையும் கட்டியிருந்தனர்" (நற்றிணை 329).

## வேட்டுவர்க் கோலங்கள்

கருநிற மேனியும், வில் அம்புகள் கொண்ட கரமும், புலியின் தோலாடை இடையில் துலங்க, திருமுடியைப் பறவை இறகுகளால் அலங்கரித்து நிற்பார்.

1) காஞ்சிபுரம் (சிவவேடன் அர்ஜுனன் மோதல் சிற்பம்)

2) திருவனந்தபுரம் திருப்பாதபுரத்து மகாதேவர்க் கோயில் சிவ வேடனுக்கு வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

3) வேட்டுவர் வேடம் எடுத்து வழித்துணை மேவிய (கொங்கு மண்டல சதகம்)

4) இறைவன் வேட்டுவர்க் கோலத்தில் முருகன் பேளுக்குறிச்சி.

5) மாயவரத்தில் அருகில் திருவேட்டகுடியில் வேட்டுவ மூர்த்தியாக அருள்பாலித்து வருகிறார்.

6) கொண்டையுடன் வலது கையில் வேலும் வில்லும்

கொண்டிருந்தனர்.

7) ஷாலினியின் தோற்றம் வேட்டுவ வரியில் சிலப்பதிகாரதில் சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**குறும்பு**

வீடுகள் பாதுகாப்பான சூழலில் மிகவும் தற்காப்பு உத்திகளோடு கட்டப்பட்ட வீடுகளின் தொகுப்பு ஆகும். மதில் சுவர்களைக் கொண்டிருந்தது. இவ்வாறு பாதுகாப்பு மிக்க வீடு குறும்பு எனப்பட்டது. ஈத்து இளையாள் வேயப்பட்ட குடிலில் (பெரும்பாணாற்றுப்படை) குடிசையின் முற்றத்தில் பந்தர் போடப்பட்டிருக்கும். இது பாணர்கள் மற்றும் உறவினர்கள் அமர்ந்து உணவு உண்ணவும், கலந்துரையாடவும் பயன்பட்டது (புறம் 320). குறும்பைச் சுற்றி உயிர்வேலி, முள்வேலி போட்டிருந்தனர். முள்வேலிக்கு அடுத்து அகலி வெட்டி வைத்திருந்தனர். இது பகை மன்னர்கள் எளிதாக வரமுடியாத அரணாக இருந்தது.

இந்த மதில்சுவர்கள் பருத்தக் கற்களைக் கொண்டு அமைத்து இருந்தனர். ஐயவி, அகப்பா போன்ற போர்க்கருவிகள் கோட்டை மதில் சுவரில் பொருத்தப்பட்டு இருந்தது. இது மலை போல் தொடர்ந்து அம்புகளை வீசும் தன்மை கொண்ட ஒரு இரும்பு பொறி ஆகும். இதைப் பார்த்து பகைவர்கள் கதி கலங்கினர் (அகம் 159). இத்தகைய பாதுகாப்பான அரணைக் கொடுமுடி என்ற வேட்டுவ மன்னன் வைத்திருந்தான்.

பந்தரில் அம்புகள் வைக்கும் கூடுகள் அம்பராத்தூண் கவைக்கடை புதை மற்றும் துடிப்பறைகளும் தொங்கும். சங்கிலியால் நாய்கள் கட்டப்பட்டிருக்கும். வாசக்கதவு கணையமரத்தால் ஒட்டப்பட்ட ஒட்டு கதவாக அமைக்கப்பட்டு இருந்தது. வாசலில் கழுமரம் செங்குத்தாக நிற்கும்படி நடப்பட்டிருந்தது. மான் தோல் படுக்கையில் வேட்டுவர் படுத்திருந்தனர். இரும்பு உளியால் கரம்பை நிலத்தைக் கிளறினர், புல்லரிசியைச் சேகரித்தனர், விளாமரம் அல்லது வேங்கை மரம் அருகில் உள்ள முற்றத்தில் அரிசியை நில உரலில் பெய்து குறுங்கழ் உலக்கைக் கொண்டு குற்றிப் பெரிய கிணற்றில் ஊறிய நீரை எடுத்து

வந்து பானையிலிட்டு அடுப்பு ஏற்றிக் காய்ந்த இறைச்சியோடு கலந்து சமைத்து உண்டார்கள். குழுவாக மன்றத்தில் அனைவரும் சமமாக உணவைப் பரிமாறி உண்டார்கள். சில சமயம் வறட்சியோ விலங்குகள் குறைவாக உள்ள சமயங்களில் குறிஞ்சி நில வேட்டுவச்சி குறைவாக இருக்கும் உணவை அனைவருக்கும் சமமாகப் பகுத்துக் கொடுத்து அனைவரும் உணவை உண்ண வைத்தார். குறைவான அளவே உள்ள உணவைக் கண்டு தலைவி கலங்காமல் அனைவருக்கும் உணவளித்ததை சங்க பாடலில் புலவர்கள் புகழ்ந்து பாடி உள்ளார்கள். மழவர்கள் ஆகொள் பூசலில் ஈடுபட்டனர். வேந்தர்களுக்கான வேந்துவிடு தொழில் செய்தார்கள், மழவர்கள் என்றால் மன்னன் என்றும் கூறலாம் (பண்டைய தமிழ்ப் பண்பாடு Page 63). மழவர்கள் ஆகொள் பூசலில் ஈடுபட்டனர் அகம் (35, 53, 67, 67). மழவர்கள் சேர நாட்டு தொல்குடியினர். இவர்கள் சேரர் தேர்ப்படை, குதிரைப்படை இரண்டையும் வழி நடத்தினர். இவர்கள் சேர மன்னர்களின் வழித்தோன்றல் என்பது அறியப்படுகிறது. வேட்டுவ மாமன்னன் வல்வில் ஓரி மற்றும் அதியமான் இருவரும் மழவர்கள் என்று பாடியுள்ளார்கள் புறம் 52 88. இவர்கள் வேந்துவிடு தொழில் “உறுகண் மழவர் உருள் கீண்டிட்ட ஆறு செல் மாக்கள் சோறு பொதி வெண்குடை” (அகம் 21). மழவர்கள் கவற்காடுகளையும் தொறுக்களையும் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டனர்.

காவல் காடுகளையும் தொறுக்களையும் மழவர்கள் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். நிரை காத்தலில் மழவர்கள் ஈடுபட்டனர். வேட்டுவர் மழவர் எயினர் பற்றிய சங்க நூல்களில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களைப் பார்ப்போம்.

1) வல்வில் வேட்டுவன் (புறம் 150)

2) கொலைவல் வேட்டுவன் (நற்றிணை 1089)

3) இரும்புலி வேட்டுவன் (புறம் 19)

4) யானை வேட்டுவன்( புறம் 214)

5) கைம்மான் வேட்டுவன் (புறம் 33)

6) முயல் எரிந்த வேட்டுவன் (நற்றிணை 59)

7) பார்வை வேட்டுவன் (நற்றிணை 218)

8) வெச்சிக்கானத்து வேட்டுவர் (புறம் 22)

9) வெள்வாய் வேட்டுவர் (புறம் 324)
10) வன்கண் மழவர் (அகம் 157)
11) கருங்கண் மழவர் (அகம் 91)
12) குறும்படை மழவர் (அகம் 35)
13) கூர்ம்படை மழவர் (அகம் 129)
14) வெள் வேள் மழவர் (அகம் 269)
15) செங்கண் மழவர் (அகம் 101)
16) நோன்சிலை மழவர் (அகம் 119)
17) உறுகணை மழவர் (அகம் 121)
18) விழத் தொடை மழவர் (அகம் 131)
19) வன்கை மழவர் (புறம் 90)
20) கல்லா மழவர் (நற்றிணை 387 அகம் 127)
21) உருவக் குதிரை மழவர் (அகம் 1)
22) கடுங்கண் மறவர் (அகம் 87)
23) வல்வில் மறவர் (புறம் 259)
24) வார்கோல் மறவர் (புறம் 43)
25) ஒளிறுவாள் மறவர் (புறம் 227)
26) கொலைவேல் மறவர் (குறுந்தொகை 283)
27) தெறி கோல் மறவர் (அகம் 284)
28) வீங்கு சிலை மறவர் (அகம் 89)
29) கொடுஞ்சிலை மறவர்க் (குறுந்தொகை 297)
30) நாணுடை மறவர் (அகம 67)
31) கோல் தொடி மறவர் (நற்றிணை 48)
32) கலி கெழு மறவர் (அகம் 169)
33) புனைக் கழல் மறவர் (புறம் 31)
34) கொடுவில் எயினர் (அகம் 319)
35) கொலைவில் எயினர் (ஐங்குறுநூறு 363)
36) முளைமா வல்சி எயினர் (ஐங்குறுநூறு 364)
37) அகநானூற்றில் 319-ஆவது பாடல் எயினருக்கும் மறவருக்கும் இடையே ஏற்பட்ட பூசலைக் குறிப்பிடுகிறது.

“கொடு வில் எயினர்க் குறும்பில் கூக்கும்

*கருவினை மறவர் வில்விடத் தொலைந்தோர்” (அகம்-319 )*

*வறியவர் உயிரை எடுக்காமல் வந்தால் கொடிய தண்டனை வழங்குவான் (342 அகம்)*

*“ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்*
*ஏவல் இளையர்த் தலைவன்” (342 அகம்)*

இடியுடன் மாறுபாடு கொள்ளும் பெரிய கையை உடையவன் என்றும் கெடாத நல்ல புகழினை உடையோனாய் விளங்குபவன் தென்னவன் ஆகிய பாண்டியன் 342.

சங்க காலங்களில் வேட்டுவர்களின் இனக்குழுக்களை வேட்டுவர், மழவர், மறவர், இளைஞர், இளையோர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதன் மூலம் வேட்டுவர்களின் வீரம், ஈகை, ஆற்றல் ஆகியவை போற்றப்பட்டுள்ளது. அகம் 319-ஆம் பாடலில் மறவருக்கும் எயினருக்கும் உள்ள பூசலை விளக்குகிறது. இதன் மூலம் எயினருக்கும் மறவரும் வெவ்வேறு இனக்குழுவாக எண்ண முடியாது. அண்ணன் தம்பி அல்லது பங்காளி பூசலாக இருக்கலாம். சோழர்களில் வேட்ட பெருநற்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையில் போர் மூன்டது. அதில் புலவர் அவர்களை நீங்கள் இருவரும் அணிந்து இருக்கும் மாலை சோழ அரசர்குரிய அத்திமாலை, எனவே சண்டை வேண்டாம் என்கிறார். அதனால் இந்தப் பூசல் இரண்டும் வேட்டுவர்க் குழுவிற்குள் ஏற்பட்ட பூசலே ஆகும். வேட்டுவர்களை புலவர்கள் புகழ் மிக்கவராகவும் பாதுகாவலனாகவும் அறம் மிக்கவராகவும் வீரர்களாகவும் ஈகைக் குணமிக்கவராகவும் தன்னை நாடிவரும் அனைவருக்கும் தன்னிடம் இருப்பதை அள்ளிக் கொடுக்கும் புரவலராகவும் காட்டுகிறார்கள். அதேசமயம் கொடூரமானவர் என்றும் கொலைக்கு அஞ்சாதவர்கள் என்றும் தொலைவில் வருபவர்களைத் தன்னுடைய கொடுவில்லால் கொன்று அவரிடம் இருந்து பொருட்களைக் கொள்ளையடிப்பவராகவும் கொள்ளையடித்த பொருட்களை ஊர் மன்றங்களில் பங்கிட்டுக் கொண்டர்கள் என்று எதிர்மறைக் கருத்தையும் பதிவு செய்துள்ளார்கள். இரண்டு கருத்துகளையும் சங்க கால வாழ்வியல் நோக்கில் உற்றுநோக்கும் பொழுது நாம் தெரிந்து கொள்வது வேட்டுவர்கள் இயற்கையிலேயே மிகச்சிறந்த நற்குணங்களைக்

கொண்டவர்கள். இவர்களை நாடி வந்த எந்த உயிரையும் இவர்கள் துன்புறுத்துவதில்லை. எடுத்துக்காட்டு பெரியபுராணம், இதில் பத்தாவது நாயனராக இடம்பெற்றுள்ள கண்ணப்ப நாயனார் இவரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இவர் வேட்டையாடும் பொழுது விலங்குகளைக் கொல்வதில் சில கொள்ககளை வைத்திருந்தார். வயதான மற்றும் குட்டி பேருகால விலங்குகளை இவர்கள் கொல்வது இல்லை என்று குறிப்பிடப்படுகிறது. இது புராணம் என்று கொண்டாலும் புறநானூறு அகநானூறு போன்ற பாடல்களில் இவர்களைத் தேடி வரும் பாணர்களையும் புலவர்களையும் மிகச் சிறப்பாக விருந்தோம்பல் செய்தனர். தலைவன் வேந்துவிடு தொழில் செய்ய வெளியே சென்று இருந்தாலும் தலைவி விருந்தினர்களையும் பானார்களையும் மிகவும் சிறப்பாக விருந்து கொடுத்து உபசரித்தாள் (புறம் 319,320, 311)

"புறவும் இதலும் அறவும் உண்கென்ப்
பெய்தற்கு எல்லின்றூ பொழுதே அதனால்
முயல் சுட்ட வாயினும் தருகுவோம் "

இரவானாதால் புறாவையும் இறல் என்ற பறவையும் இப்பொழுது பிடிக்க முடியாது. ஆதலால் சுட்ட முயல் கறியை உண்டு இங்கேயே தங்கவும். உனக்குத் தலைவன் வந்து பரிசளிப்பான் என்று தலைவி கூறுகிறார் ( 320 புறம்).

"முன்றில் முஞ்ஞைஞயோடு முசுண்டைப் பம்பிப்
புந்தர் வேண்டாப் பலர்த் தூங்க நிழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பணை தழீ இல் பிறிதோர்
தீர்தொழில் தனிக்கவை திளைத்து விளையாட"

பார்வை மானை தழுவும் ஆண்மான் தன் கணவன் பெரும் சத்தத்துடன் எழுந்தால் கலைமான் தன் கூடலை விட்டு விடுமோ என்று பயந்து அமைதியாக ஒதுங்கி இருக்கிறார். அத்தகைய பெருமைமிக்கவள் யானை வேட்டுவரின் மனைவி.

வேட்டுவர் தலைவனுடைய மனைவி பாணர்களிடம் மான் தோலில் உலர்த்திய திணையைக் காட்டு கோழியும், புறாவும் கவர்ந்து உண்ட பொழுது அகப்பட்டுக் கொண்டன. இவைகளைச் சந்தனக்கட்டையின் நெருப்பில் சுட்டு இறைச்சியை ஆரால் மீனும் சேர்த்து உன் பெரிய கரிய நிறமுடைய சுற்றத்தாருடன் உணவை

உண்டு தங்கிச் செல்லவும் என்று கூறுகிறார். மேலும் பாணனே பகையரசர்த் திரையாக தந்த சிறந்த பொருட்களையும் பரிசிலர்க்கு என்றும் குறையாமல் கொடுக்கும் வள்ளல் குணமும் கொண்ட புகழ்மிக்கப் பெரியோன் பாதுகாக்கும் ஊர் இது என்று தலைவி கூறினாள். இதன் மூலம் பாணர்களுக்கு உணவளித்த வேட்டுவர் குடி பெண்ணின் பெருமையை நாம் அறியலாம் (புறம் 320). இதே போல் வரையறாது வழங்கிய வல்வில் ஓரி, கடியநெடு வேட்டுவன், கண்டிர கோப்பெரும் நல்லி மற்றும் புள்ளி மன்னன் ஆகியோர்கள் தங்கள் ஈட்டிய பெரும் செல்வத்தை மக்களுக்கும் தமிழைப் போற்றும் புலவர்கக்கும் பாணருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர். மேலும் வேட்டுவர்களை ஆறலைக் கள்வர் என்றும், கொலை மற்றும் கொள்ளை அடிப்பவர்களாகவும் கூறப்படுகிறது. இதை நாம் சங்ககால வாழ்வியல் முறையில் பார்க்கும் பொழுது இதில் நமக்கு அகம்-109ம் பாடலில் விடை கிடைக்கிறது.

“கையில் பொருள் இல்லை ஆயினும் மெய்க்கொண்டு
இன் உயிர்ச் செகா அர் விட்டு அகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்போடு வரி அதன் இருக்கும்
அரண் இல் வேந்தன் ஆளும் வரன் உறு
குன்றம் பல விலங்கினவே”

என்று புலவர்க் கருந்தொடைக்காவினார் தனது பாடலில் வேந்தன் அறண் இல்லாமல் தன் படைவீரர்களை ஏவி வழிப்போக்கர்களையும் வணிகர்களையும் கொலை செய்து உள்ளான். அவன் அவனுடைய கட்டளையின் பேரில் கொலை செய்தவர்களின் உடல்களை எண்ண முடியாத அளவிற்கு அங்கு குவித்து உள்ளான். மேலும் அந்த அரசன் கடமை தவறிய தனது படை வீரனுக்கு பெரிய யானைகளின் தந்தத்தையும், புள்ளி மானின் தோலையும் வரியாக விதித்துள்ளான். இதன் மூலம் வீரன் இரக்க குணத்தால் கொலை செய்யாமல் விட்டதால் அவனுக்குத் தண்டனை கிடைக்கப்பட்டுள்ளது. அரசன் ஏன் கொடுமையான செயலைச் செய்தான் என்று ஆராய்ந்தால் கீழே உள்ள பதில் கிடைக்கிறது.

1) வழிப்போக்கர்களினால் அரசன் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

2) அரசனின் செல்வங்களை வழிப்போக்கர்கள் வடிவில் வந்து கொள்ளை அடித்து இருக்கலாம். இதில் அந்த மன்னனின் செல்வம் மற்றும் அன்பிற்குரியவர்களை இழந்து இருக்கலாம். அதனால் பழிக்குப் பழி வாங்குவதற்காகவோ கொடிய செயலைத் தூண்டி இருக்கலாம்.

3) அரசன் தன் நாட்டின் வறுமையால் உயிர் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கலாம். அதனால் அவர்கள் வழிப்பறி கொள்ளையில் ஈடுபத்தி இருக்கலாம் .

4) முன் பெருவழியில் வரும் வணிகர்களைத் தடுத்து தனது எதிரி நாட்டு மன்னனின் வளர்ச்சியைத் தடுக்க இதுவும் ஒரு வகையான உத்தியே ஆகும்.

5) அரசன் முதல் படைத் தலைவர்கள் வரை வேட்டுவர்கள் தான் போர்ப்படையில் இருந்திருக்கிறார்கள். இவர்களைப் பார்த்து பயந்த புலவர்கள் பாடலில வேட்டுவரை எதிர்மறையாக எழுதி விட்டனர். எனவே வேடுவ மன்னர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏதோ ஒரு காரணத்திற்கு ஆறலைக் கள்வர்களாக கட்டாயத்தின் பெயரில் இருந்துள்ளனர். வரியவர்களைக் கொல்லாமல் விட்டு தான் வரி கட்டியும் உள்ளார்கள் இதன் மூலம் வேட்டுவார்களின் மாண்பைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

வேட்டுவர்கள் எப்பொழுதும் வறியவர்களுக்கும் பாணர்களுக்கும் புலவர்களுக்கும் வாரி வழங்கி உள்ளார்கள். அவர்கள் தன்னிடம் உள்ள பொருட்களைத் தனக்குரியதாக எப்பொழுதும் எண்ணியது இல்லை. அவர்கள் எளியவர்களுக்குக் கொடுக்கும் பண்பை பெரிதும் கொண்டுள்ளார்கள். குறிப்பாகக் கண்ணப்பர், வல்வில் ஓரி, கடியநெடுவேட்டுவன், கண்டிரம் கோ பெரு நல்லி, புள்ளி போன்ற மன்னர்கள் எப்பொழுதும் வறியவர்களுக்குக் கொடுத்துள்ளார்கள். கண்ணப்பர் கண்னை இறைவனுக்குப் படைத்துள்ளார். இப்படிப்பட்ட வழித்தோன்றலில் வந்த வேட்டுவார்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக சில சமயங்களில் நடந்த ஆறலையை (கொள்ளை ) வைத்து மட்டும் நாம் வேட்டுவர்களை மொத்தமாக இரக்கமற்றவர்களாகக் குறிப்பிட முடியாது.

## வேட்டைக் கருவிகள்

தொல் தமிழகத்தில் வேட்டையாடி தனது உணவு தேவையைப் பூர்த்தி செய்தவர்கள் வேட்டுவர். மழவர், குறவர்கள் வேட்டை ஆயுதங்களைப் பயன்படுத்தி வேட்டையாடினர். வேட்டையாடுதல் வினைப் பெயராகும். ஆகையால் வேட்டுவர் என்பது தமிழ்க் குடியில் மூத்த குடியாகும். வேட்டுறின் இனக் குழுவில் 400 க்கும் மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன. இதை உற்று நோக்கும் போது வேட்டுவர்களின் தொன்மையை அறிய முடியும். வேட்டையாடுபவர்கள் அனைவரும் வேட்டுவர்கள் அல்ல. இவர்கள் தங்கள் உணவு தேவைக்கு வேட்டையாடுதலைச் சிறப்பாக செய்தார்கள்.

வேட்டுவர்கள் ஆ கோள் பூசலில் ஈடுபடும் போது வேட்டைக் கருவிகளையும், வேட்டையூதிகளை பயன்படுதி ஆநிரை கவர்தல் ஆநிரை மீட்டலில் வெற்றி அடைந்தனர். வேட்டை கருவி வேட்டை யுக்தி இரண்டையும் பயன்படுத்தி போர்க் கருவியை உருவாக்கினர். இக்கருவிகளை பயன்படுத்தும் பொழுது எளிதாக மற்ற இனக்குழுக்களை வென்று சிறு குறு மன்னர்களாக உருமாறினார்கள். வேட்டுவர்கள் ஈகை வீரம் போன்றவற்றினால் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டனர். இவர்களின் கண்டுபிடிப்பு, தொழில்நுட்பம், வானசாஸ்திரம், வணிகம், கால்நடை வளர்த்தல், போர் ஆயுதங்கள் தயாரித்தல் முறையான போர்ப் பயிற்சி செய்தல் தலைமைப் பண்பு போன்றவை மற்ற இனக்குழுக்களிடமிருந்து இவர்களை முற்றிலும் வேறுபடுத்தியது.

## வேட்டுவர் வேட்டைத்திறன்

### வேட்டையாட ஆராய்தல்

வேட்டைக்குச் செல்பவர் குறித்த விலங்குகளைத் தேர்ந்தெடுத்து வேட்டையாடுவர். விலங்குகளை ஆராய்ந்து தேடித் திரிந்ததை நற்றிணை அடிகளின் மூலம் உணரலாம்.

*“களிற்று முகம் திறந்த கல்லா விழுத் தொடை*
*ஏவல் இளையரொடு மா வழிப்பட்டென” (நற்.389:4-5)*

குறிஞ்சிநிலத் தலைவன் விலங்கினத்தை வேட்டையாடச் சென்றதை காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் புலவர் நற்றிணை அடிகளின் வழியாக விளக்குகின்றார். இதன் வழியாக சங்ககால மக்கள் விலங்குகளை ஆராய்ந்து வேட்டையாடிய செயல் புலப்படும்.

**யானை வேட்டை**

யானையைக் கோட்டின் பயன்கருதி வேட்டையாடியுள்ளனர். குறிஞ்சிநில வேட்டுவன் வெண்கடம்ப மரத்தின் பின் நின்று களிற்றின் மார்பில் அம்பைச் செலுத்திக் கொன்றனன். பிறகு அதனின்று எடுத்து வந்த வெண்கோட்டைப் புல்லால் வேய்ந்த குடிசையில் புலால் மனம் வீச ஊன்றியதை,

"இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்தி கோல்தெரிந்து
வரி நுதல் யானை அருநிறத்து அழுத்தி
இகல்அடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்
புல்வேய் குரம்பைப் புலர ஊன்றி" (அகம்.172:6-10)

என்னும் அகநானூற்றுப்பாடலடிகள் மூலமாக மதுரைப் பாடலாசிரியர் நப்பாலனார்க் கூறுகின்றார். குறிஞ்சி நிலத்தில் புலியுடன் போர் செய்த யானைப் புண்பட்டுக் கிடந்ததை,

"புலியொடு பொருதப் புண் கூர் யானை
நற்கோடு நயந்த அன்புஇல் கானவர்" (நற்.65:5-6)

அதன் தந்தத்தை எடுக்கக் கருதிய வேடர்கள் அதன்மீது மீண்டும் அம்பெய்தனர் என்பதை நற்றிணைப் பாடலடிகளின் மூலமாகக் கபிலர் கூறுகின்றார். அவ் யானை இறந்தபின் அதனின்று தந்தத்தைக் கவர்ந்தனர். பாலைநில மறச்சாதியினர்த் தம் வில்லைக் கொண்டு வழிப் போக்கர்களைத் துன்புறுத்தியதை,

"கொடுஞ்சிலை மறவர்க் கடறு கூட்டுண்ணும்
கடும் கண் யானைக் கானம் நீந்தி
இறப்பர்க் கொல்.." (குறுந்.331:3-5)

காட்டிலுள்ள யானைகளைக் கொன்று தந்தங்களையும் கைப்பற்றினர் என்பதைக் குறுந்தொகைப் பாடலடிகளின் மூலமாக வாடாப்பிரபந்தனர் புலவரின் கூற்றால் அறிய முடிகிறது.

**புலி வேட்டை**

சங்க மக்கள் புலிகளை அதன் தோலுக்காகவும், பற்களைத் தாலியாகச் செய்து அணிவதற்கும் வேட்டையாடியுள்ளனர். மலைநாட்டவர் பாறைகள் செறிந்த குன்றுகளில் குகைகளைக் கண்டு அவற்றின் வாயிலில் கற்பலகையால் கதவமைத்து உள்ளே ஆடுகளைக் கட்டுவர். புலிகள் அதனுட் புகுந்து ஆடுகளைத் தாக்கும்பொழுது வாயிற் கதவாகிய கற்பலகை விரைவாக மூடிக்கொள்ளும், இப்பொறிவழி புலியை வேட்டையாடியதை,

*"இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய*
*பெருங்கல் லாடரும் போன்மென விரும்பி" (புறம்.19:5-6)*

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளின் மூலமாக விளக்கப்படுகின்றது.

*"புலிப்பல் கோர்த்த புலம்புமணித் தாலி" (அகம்.7:18)*

*"புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர் " (புறம்.374:9)* என்னும் புறநானூற்றுப் பாடலடிகளின் மூலமாக விளக்கப்படுகின்றது.

சிறுவர் மார்பில் அணியும் ஓர் அணிகலன் புலிப்பல் தாலியாகும். இத்தாலியானது வீரர்கள் புலியை வேட்டையாடி அதன் தோலைப் பெற்றதோடு தம் வீரத்தின் நினைவாக, அதன் பல்லைப் பிடுங்கித் தம் குழந்தைகளுக்குக் கழுத்தில் அணிவித்ததாகும். புலிப்பல் கோர்த்த தாலியை அணிந்த சிறுவர்களை,

*"புலிப்பல் கோர்த்த புலம்புமணித் தாலி" (அகம்.7:18)*

*"புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்" (புறம்.374:9)*

என்ற பாடலடிகள் சுட்டுக்கின்றன. மேற்சுட்டிய செய்திகளின் வழி புலி வேட்டையாடப்பட்டமையும், அதன் பற்களைச் சிறுவர்கள் தாலியாக அணிந்தமையும் புலப்படும்.

கானவர்த் தினைப்புனத்தில் மேயும் கேழலைப் பிடிக்க இயந்திரம் அமைத்து வைத்திருந்தனர். அந்த இயந்திரப் பொறியில் புலி சென்று சிக்கிக் கொண்டதை நற்றிணை விளக்குவதை,

*"இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர்*
*ஏதில் குறுநரி பட்டற்றாற்" (கலித்.65:24-25)*

என்ற கலித்தொகைப் பாடலடிகள் மூலமாகக் கபிலர் உணர்த்துகின்றார். இதனைப் போன்று, இவ்வாறு ஒரு விலங்கை வேட்டையாட வேண்டி வைத்த பொறியில் மற்றொரு விலங்கு அகப்பட்டுக்கொண்ட நிலையில் அவ்விலங்குகளையும் வேட்டையாடியுள்ளனர்.

**மான் வேட்டை**

வேட்டுவச் சிறுவர்கள் நெய்தல் நிலத்தில் மரங்களின் மேலேறி நின்று மான் வேட்டையாடியதை,

*"மரன்மேற் கொண்டு மான்கணந் தகைமார்*
*வெந்திறல் இளையவர் வேட்டெழுந் தாங்கு" (நற்.111:4-5)*

என்னும் நற்றிணை அடிகள் புலப்படுத்துகின்றன.

*"வலை மான் மழைக் கண் குறுமகள்" (நற்.190:8)*

*"புன்கண் மடமா னேர்படத் தன்னையர்*
*சிலைமான் கடுவிசைக் கலைநிறத் தழூத்தி" (குறுங்.272:4-5)*

*"புன்கண் கொண்ட திரி மருப்பு*
*மேய் பதம் மறுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து*
*நெய்தல் அம் படுவில் சில் நீர் உண்ணாது " (அகம்.371:5-7)*

*"வெள்ள மான் நிறம் நோக்கி கணைத் தொடுக்கும் கொடியான் போல" (கலித்.120:11)*

குறிஞ்சி நிலத்தில், மான்களை வலைவிரித்துப் பிடித்தும் புதருக்குள் இருக்கும் இணைமான்களைக் கற்களை வீசி அகற்றியும் வேட்டையாடியுள்ளனர். பாலைநில மறவர்கள் மானை அம்பெய்து கொன்றனர். நெய்தல் நில வேடர் வெள்ளத்தில் அகப்பட்டுக் கரையேற முடியாமல் தவித்த மானை அம்பெய்து கொன்றிருக்கின்றனர். கடமான்களை வேட்டையாட, அம்மானை நீண்ட நேரம் அலைக்கழிப்புச் செய்வர். இதனால் வேடனும், நாயும் களைப்படைந்தமையைப் பரணர் குறிப்பிடுவார்.

சங்ககால மக்கள் மானை, அதன் தோல், இறைச்சி. கொம்பு போன்றவற்றிற்காக வேட்டையாடியுள்ளனர்.

**குரங்கு வேட்டை**

பழுத்த பழ மரங்களை நாடிக் குரங்குகள் செல்வதுண்டு. இக்குரங்குகள் பழங்களைப் பறித்துத் தின்றது போக மீதியைச் சேதப்படுத்தும் இயல்புடையவை. பழுத்த பலாவைக் காத்துக் கொண்டிருந்த குறிஞ்சிநில வேடன் சோர்வுற்ற நேரம் பார்த்து ஆண் குரங்கு அப்பழத்தைக் கவர்ந்தது. இதனைக் கண்ணுற்ற வேடன் குரங்குகளைப் பிடிக்க மரந்தோறும் வலையை மாட்டி வைத்ததை,

*"கலைகைத் தொட்ட கமழ்களைப் பெரும்பழம்*
*காவன் மறந்த கானவன் ஞாங்கர்க்*
*கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்*
*குன்ற நாட தகுமோ பைஞ்சுனை" (குறுந்.342:1-4)*

என்ற குறுந்தொகைப் பாடலடிகளின் வாயிலாக மதுரைக் கணக்காயனார் விளக்குகின்றார். பழம் கவர வரும் குரங்குகளை அம்பெய்தும் தாக்குவர். குரங்குகள் பலாப்பழங்களைச் சேதப்படுத்தியதன் காரணமாக அதனை வேட்டையாடியுள்ளனர். குறிஞ்சி நிலத்தில் மட்டும் குரங்குகள் வேட்டையாடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**வேட்டைத் தொழிலில் நாய்**

தொடக்கக்கால மனிதன் தான் உயிர் வாழ்வதற்கும், தன் உயிரைக் காப்பதற்கும் விலங்குகளைப் பயன்படுத்தியுள்ளான். உயிர் வாழ உணவு இன்றியமையாதது. எனவே விலங்குகளை வேட்டையாடி உணவாக உட்கொண்டுள்ளான். வேட்டைத் தொழிலுக்கு நாய் மிகவும் பயன்பட்டுள்ளது. வேட்டையாளர்கள் நாயின் உதவியுடன் பிற விலங்குகளை வேட்டையாடினர். வடுகர் சினம் மிக்க நாய்களை வைத்திருந்ததை,

*"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" (அகம்.107:11)*

என்ற அகநானூறு அடியின் மூலமாகக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் விளக்குகின்றார். வேட்டுவர்கள் நாய்களுடன் பல மலைகளையும் கடந்து வேட்டைக்குச் சென்றதை,

“முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை” (அகம்.28:6-8)

என்று பாண்டியன் அறிவுடை நம்பி அடிகளின் வாயிலாகக் குறிப்பிடுவர்.

**வீட்டுக் காவலில் நாய்**

வீட்டைக் காவல் காக்க நாய்கள் பெரிதும் உதவியதை,

“தொடர் நாய் யாத்த துன் அரும் கடி நகர்
வாட்முன் வேலிச் சூழ் மிளைப் படப்பை
கொடு நுகம் தழீஇயப் புதவின் செந்நிலை
நெடு நுதி வயக்கழு நிரைத்த வாயில்” (பெரும்பாண்.125-129)

வேட்டை முடித்து வந்த எயினர் நாய்களைத் தம் வீட்டுக் காவலுக்காகச் சங்கிலியால் கட்டிவைத்தனர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை வழியாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகின்றார். இங்ஙனம் வீட்டில் காவலுக்காக வைக்கப்பட்ட நாய், தலைவியைச் சந்திக்கத் தலைவன் வருகின்ற பொழுது உறங்காமல் குரைத்தலைச் செய்திருக்கின்றது. பிச்சை எடுப்பவர்கள் நாய்கள் இல்லாத வீடுகளில் சென்று நெய் கலந்த செந்நெல்சோற்று உருண்டையைப் பிச்சையாகப் பெற்று உண்டதை,

“அசி றெருவி னாயில் வியன்கடைச்
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை யார மாந்தி” (குறுந்.277:1-3)

கடற்கரை ஓரங்களில் சுறாமீன்கள் நீரைப் பீய்ச்சியடிப்பது இயல்பு என்பதை ஓரில் பச்சையார்க் குறிப்பிடுகின்றார். அந்நீர் இல்லத்தின் கண் உள்ள வாயிற்கதவுகளில் மோதியதால் வாயிலில் உள்ள நாய்கள் நடுங்கின. வீட்டில் உள்ள நாய்கள் தன்னை வளர்ப்பவர்களுடன் மிகவும் அன்பாக நடந்து கொள்ளும் என்பதை,

“வன் கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு
மனைவாய் ஞமலி ஒருங்கு புடை ஆட
வேட்டு வலம்படுத்த உவகையன் காட்ட
நடு கால் குரம்பைத் தன் குடிவயிற் பெயரும்
குன்ற நாடன் கேண்மை நமக்கே” (நற்.285:3-8)

குறிஞ்சிநில வேட்டுவன் தான் வேட்டையாடிய முள்ளம்பன்றி இறைச்சியுடன் குடிசையில் நுழைந்தபொழுது அவ்வீட்டு நாய்கள் அவனது கால்களைப் பற்றிக் கொண்டு விளையாடியமையை புலவர் மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகின்றது. இவற்றால் வேடுவர்களின் வேட்டைத் தொழிலிலும், வீட்டுக் காவலிலும் நாய்கள் பயன்பட்டமைப் புலனாகும்.

சங்ககால மக்கள் நீர்நாய், புலி, மான், யானை முதலிய விலங்குகளை வேட்டையாடியுள்ளனர். இவ்விலங்குகளைக் கைப்பற்ற நாய் உறுதுணையாக இருந்தது. வில், அம்பு, குறுந்தடி, கற்பொறி, முதலிய பிற கருவிகளைக் கொண்டும் வேட்டையாடியுள்ளனார். சங்க இலக்கியத்தில் புலவர்களின் பாடலடிகள் மூலமாக விலங்கினம் வேட்டையாடிய விதத்தை இக்கட்டுரை வாயிலாக வெளிக்கொணர முற்பட்டுள்ளது.

**கானவரின் விலங்கு வேட்டை**

**உடும்பு**

எயினர் வேட்டையாடிக் கொன்ற விலங்குகளில் உடும்பும் ஒன்றாகும். உடும்புகளை எயினர் விரும்பி வேட்டையாடினர். உடும்பின் தசை சத்துமிக்கது என்று மக்கள் கருதுகின்றனர். அதன் தசை, உண்பவரது உடலில் முழுமையாகச் சேரும் என்பது மக்களின் நீண்டகால நம்பிக்கை ஆகும். இதுபற்றி 'கால் கோழி, அரை ஆடு, முக்கால் காடை, முழுஉடும்பு என்று பேச்சு வழக்கு மக்களிடையே வழங்கி வருகிறது. வேட்டைப்பிரியர்கள் இன்றும் உடும்புகளை விரும்பி வேட்டையாடுகின்றனர்.

ஊருக்கு அண்மையில் இருந்த மடுக்கரையில் இருந்து உடும்புகளை எயினச்சிறார்ப் பிடித்து வந்த செய்தியைப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன.

"ஊர், அருமிளையதுவே மனைவியும்
வேட்டைச்சிறாஅர்ச் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம்பெய்த தயிர்க்கண் விதவை
யாணர்நல்லவைப் பாணரொடொராங்கு
வருவிருந்தயரும் விருப்பினள்" - (புறநானூறு 326)

(கடத்தற்கரிய காவற்காடு சூழ்ந்த இடத்தின் கண் உள்ள ஊரில் மனைக் கிழத்தி, வேட்டுவச் சிறுவர்கள் நெடுந்தொலைவு செல்லாமல் மடுக்கரையில் பிடித்துக் கொண்டு வந்த குறுகிய காலையுடைய உடும்பினது விழுக்காகிய தசையைப் பெய்து சமைத்த தயிரோடு கூடிய கூழையும் புதிதாக வந்த வேறு நல்ல உணவுகளையும் பாணருக்கும் அவரோடு வந்த ஏனைய விருந்தினருக்கும் ஒரு சேரக் கொடுத்து உண்பிக்கும் இயல்பினள் என்றும்,

"களர் வளரீந்தின் காழ்க் கண்டன்ன
சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலிதந்த மனவுச் சூல் உடும்பின்
வரைகால்யாத்தது வயின் தொறும் பெறுகுவிர்"
பெரும்பாணாற்றுப்படை: 130-133

(களர்நிலத்தே வளர்ந்த ஈந்தினது விதைபோன்ற மேட்டு நிலத்தே விளைந்த நெல்லினது சிவந்த அவிழாகிய சோற்றை, நாய்கடித்துக் கொண்டு வந்த அக்குமணி போன்ற முட்டைகளையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்தனை மனைத் தோறும் பெறுகுவீர்) என்றும் எயினப் பெண்கள் தம் குடிசைக்கு வந்த விருந்தினராகிய பாணர் முதலியவர்களுக்கு உடும்பின் தசையைச் சமைத்து விருப்பமுடன் வழங்கி உபசரித்த செய்தியைச் சங்க இலக்கியங்கள் சுவைபடக் கூறுகின்றன.

**முயல்**

உடும்பைப் போலவே முயலும் ஒரு சிறிய விலங்குதான். மக்கள் இன்றும் அதனை விரும்பி வேட்டையாடுகின்றனர். பண்டை நாள் போலவே இன்றும் உணவுக்காகவே முயல் வேட்டையாடப்படுகிறது. முயல் ஒரு சாதுவான ஆபத்தில்லாத விலங்கு. அதை வேட்டையாடுவதும் எளிது. எனவே எயினர் முயலை மிகுதியாக வேட்டையாடினர். வேட்டுவர் குடிசைகளில் முயற்கறி முக்கிய உணவாக இருந்தது. அங்கு எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் முயற்கறி உண்ணக் கிடைத்தது. வேட்டுவர் முயல் வேட்டையாடியது குறித்துச் சங்க இலக்கியங்கள் விரிவாகவே பேசுகின்றன.

“படலை முன்றிற் சிறு தினையுணங்கல்
புறவுமிதலுமறவுமுண்கெனப்
பெய்தற் கெல்லின்று பொழுதேயதனால்
முயல் சுட்டவாயினும் தருவேம் புகுதந்
தீங்கிருந்தீமோ முதுவாய்ப்பாண” என்று புறநானூறு ( 319) கூறுகிறது.

எயினரது மனைக்குப் பாணனாகிய விருந்தினன் தன் சுற்றத்தாருடன் ஞாயிறு மறைந்த மாலைப் பொழுதில் வந்திருந்தான். அவனுக்கு உணவளித்துப் பசி போக்கி உபசரிக்க வேண்டிய கடமை தனக்கு உண்டு என்பதை உணர்ந்த மனைத் தலைவி பாணனிடம் கூறினாள். பாணனே சிறிய தினையரிசியை முற்றத்தில் தெளித்து அதனை உண்ணவரும் புறா முதலிய பறவைகளைப் பிடித்துச் சமைத்து உங்களுக்கு வழங்குதவற்குக் காலமின்மையினாள் எம்மிடம் உள்ளது சுட்ட முயற்கறியே. அதனை உங்களுக்கு உண்ணத்தருவோம் என்று கூறி மனைத்தலைவி பாணரை உபசரித்து உணவூட்டிய செய்தியை ஆலங்குடி வங்கனார் மேற்குறித்த புறநானூற்றுப் பாடலில் கூறுகிறார்.

முயல் வேட்டைக்குச் சென்ற எயினர்த் தாம் வளர்த்த நாய்களையும் வேட்டைக்காக உடன் கொண்டு சென்றனர். (இன்றும் முயல் வேட்டைக்குச் செல்வோர் நாய்களையும் உடன் கொண்டு செல்கின்றனர்) நெடிய செவிகளையுடைய முயல்களை அவை ஓரிடத்தும் போக்கில்லாதபடி குவிந்த இடத்தையுடைய வேலியிடத்தே வலைகளைப் பிணைத்து மாட்டி வளைத்துப் பசிய தூறுகளையடித்து முயல்களை அவற்றில் கிடவாமல் ஓட்டிக் கொன்றனர் என்று கானவர் முயல் வேட்டையாடியமை குறித்து கடியலூர் உருத்திரங்கண்ணனார்ப் பெரும்பாணாற்றுப்படையில் கூறுகிறார்.

**பன்றி வேட்டை**

எயினர் உணவுக்காகப் பன்றிகளையும் வேட்டையாடினர். பன்றி வேட்டை முயல் வேட்டைபோல எளிய செயல் அன்று, கடினமானது. வேட்டையின் போது, விரட்டி வரும் வேடர்களைப் பன்றிகள் தம் வளைந்த கொம்பால் மோதித்தாக்குவதும் உண்டு. அதனால் எயினர் பன்றிகளைக் கொல்வதற்குச் சில தந்திரமான செயல்களை

மேற்கொண்டனர். (குறிஞ்சி நிலத்தில் பன்றிகளைக் குடிசைகளில் வளர்க்கும் பழக்கம் இன்னும் ஏற்பட்டிருக்கவில்லை : ஏனெனில், வேட்டைச் சமூகம் இன்னும் மேய்ச்சல் சமூகமாக மாறவில்லை) மழையின்றி வறட்சி பாதித்த கடுங்கோடைக் காலங்களில் விலங்குகள் நீருக்காகத் தாகத்தோடு மயங்கித்திரியும். அவ்வாறு நீரை தேடியலையும் விலங்குகளின் காலடித்தடங்கள் மிகுதியாக அழுந்திக் கிடக்கின்ற வழியிடங்களில் தறுகண்மையுடைய கானவர்கள், மழைபெய்தால் நீர் நிற்க வேண்டுமென்று கருதிக் குளங்கள் அமைத்தனர். அக்குளங்களின் அருகில் மட்டுக்குழி (பதுங்குழி)களையும் அமைத்தனர். இரவில் பன்றி முதலிய விலங்குகள் நீரருந்த அக்குளங்களுக்கு வரும். அப்படி வரும் காலங்களில் மறைந்திருந்து அவற்றைக் கொல்வதற்காக வேட்டுவர் அமைத்துக் கொண்ட அக்குழிகளே மட்டுக் குழிகள் எனப்பட்டன. விலங்குகள் நீரருந்த வருதலை எதிர்பார்த்து அக்குழிகளில் பதுங்கியிருந்த வேட்டுவர் அவை வந்ததும் அவற்றைப் பாய்ந்து கொன்றனர். இச் செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை தெளிவாகக் கூறுகிறது. இங்கு வேட்டுவர் அமைத்த இக்குளங்கள் தனிமனிதர்களுக்காக அமைக்கப்பட்டவையன்று. சமூகத் தேவைக்காகச் சமூகத்தவர் அமைத்துக் கொண்ட குளமே அது ஆகும்.

"மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான் மடி பொழுதின் நீர் நசைக் குழித்த
அகழ்சூழ்ப் பயம்பின் அகத்தொழித்தொடுங்கிப்
புகழாவாகைப் பூவினன்ன
வளை மருப்பேனம் வரவு பார்த்திருக்கும்
அரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புதலெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ்ப் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கறவளைஇக்
கடுங்கட் கானவர்க் கடறு கூட்டுண்ணும்
அருஞ்சுரம்" என்று, எயினர் மட்டுக் குழிகள் அமைத்துப் பதுங்கியிருந்து பன்றி வேட்டையாடியது குறித்துச் சுவைபடக் கூறிய கடியலூர் உருத்திரங்கண்ணனார், முயல் வேட்டையாடியது குறித்தும் கூறியுள்ளார்.

திணைப்புனத்தில் தினைக் கதிர்கள் நன்கு விளைந்து முற்றிய காலங்களில் பன்றிகள் இரவுப் பொழுதில் வந்து அத்தினைக் கதிர்களை மேய்ந்து அழிக்கும், அதனைத் தடுப்பதற்காக வேட்டுவர்த் தினைப் புனங்களில் பன்றிகள் வரும் பாதையில் பெரியகற்பொறிகளை அமைத்து வைத்திருப்பார்கள். தினைப் புனத்தை மேய வரும் பன்றிகள் அக்கற்பொறிகளில் அகப்பட்டுக்கொள்ளும், அப்போது, தினைப்புனம் காத்திருந்த எயினர் விரைந்து வந்து அப்பன்றியைக் குத்திக் கொல்வர். இக்கற் பொறிகள் அடார் என்று வழங்கப்பட்டன.

"விளைபுன நிழத்தலிற் கேழலஞ்சிப்
புழைத் தொறும் மாட்டிய இருங்கலரும் பொறி
யுடைய ஆறே"

(வழிகள் முற்றிய தினைப்புனத்தைப் பன்றிகள் நொக்குகையினாலே இதற்கு அஞ்சிச் சில்ல வழிகள் தோறும் கொளுத்திவைத்த பெரிய கற்பொறிகளையுடையவை) என்று, தினைப்புனங்காத்த எயினர், பன்றிகள் தினைக்கதிரை உண்ணவரும் பாதைகளில் கற்பொறிகளை அமைத்து வைத்த செய்தியை மலைபடுகடாம் ( 193-95 ) கூறுகிறது.

"தினையுண் கேழல் இரியப் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடா அர்
ஒண்கேழ் வயப்புலிபடூ; உம்"

(தினைக் கதிரைத் தின்ன வரும் பன்றியை வீழ்த்துவதற்காக வேட்டுவன் மாட்டி வைத்த பெரிய கற்பொறியாகிய அடார் என்பதில் வலிமை மிக்கப் புலி அகப்பட்டுக் கொண்டது) என்று நற்றிணை (119) கூறுகிறது. வேட்டுவர் புலி வேட்டையின் பொருட்டும் அடார் என்னும் கற்பொறியினை அமைத்து வைத்த செய்தியைப் புறநானூறு கூறுகிறது. இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய பெருங்கலடார், என்பது புறநானூறு (19) அது குறித்துக் கூறும் செய்தியாகும்.

**முள்ளம் பன்றி வேட்டை**

வேடர்கள் விரும்பி வேட்டையாடும் விலங்குகளில் முள்ளம் பன்றியும் ஒன்று. முளவுமா என்றும் எய்ப்பன்றி என்றும் இலக்கியங்கள் இதனைக் குறிக்கின்றன. முள்ளம் பன்றியானது,

தனக்கு ஆபத்து நேரிட்ட காலங்களில், தன் எதிரிகளின் மேல், தன் உடலைச் சிலிர்த்து உதறிக் கூரிய முள்போன்ற மயிரைச் செலுத்துமாம். அவ்வாறு செலுத்தப்பட்ட மயிராகிய முள் எதிரியின் உடம்பில் தைத்து அவற்றுக்கு மிகுந்த துன்பத்தைச் செய்யும். இவ்வாறு உடலைச் சிலிர்த்து எதிரிகளின் மேல் மயிரை எய்வதால் முள்ளம் பன்றி எய்ப்பன்றி எனப்பட்டது. முள்ளம் பன்றி வேட்டை, பன்றி வேட்டையை விட ஆபத்தானது. ஆனாலும் எயினர் அவற்றை விரும்பி வேட்டையாடினர். 'முளவு மாத் தொலைச்சிய முழுச்சொலாடவர்' - ( புறநானூறு : 325 )

'முளவுத் தொலைச்சிய பை நிணப் பிளவை' என்று வேட்டுவர் முள்ளம் பன்றிகளை வேட்டையாடிய செய்தியைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நெடிய மலையிடத்துக் குகையில் முள்ளம் பன்றிப் பதுங்கிக் கிடந்தது. அதனையறிந்த வேட்டுவன் அதனை வேட்டையாடுவதற்காக அங்கு சென்றான். கானவனது வருகையை உணர்ந்து கொண்ட அவ்விலங்கு அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கான தற்காப்பு முயற்சியில் ஈடுபட்டது. கூர்மையான ஊசி போன்ற தன்மயிராகிய முள்ளை, உடலைச் சிலிர்த்து உதறி ஏவியது. அம்முட்கள் கானவன் உடலில் தைத்துப் பெரும்புண் உண்டாக்கின. புண்பட்ட வேட்டுவன் வலிதாங்கமாட்டாமல் அழுது கூச்சலிட்டான். அக்கூச்சல் கானகமெங்கும் எதிரொலித்தது.

"சேயளைப் பள்ளியெ குறு முள்ளின்
எய்தெற விழுக்கிய கானவரழுகை"

(நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன்றித் தனது கூர்மையுறுகின்ற முள்ளால் எய்து கொல்லுகையினாலே பட்ட கானவர் அழுகை) என்று, முள்ளம்பன்றியை வேட்டையாடிய வேட்டுவரை மலைபடுகடாம் (300- 1) கூறுகிறது.

"அகன்றுறைச்சிலைப் பாறப்பட்ட முளவு மான்கொழுங்குறை"

அகன்ற நீர்த்துறைக்கண் வில்லால் வீழ்த்தப்பட்ட முள்ளம் பன்றியின் ஊன்; என்று, முள்ளம் பன்றி ஊனுக்காக வேட்டையாடப்பட்டது குறித்துப் புறநானூறு (374) கூறுகிறது. இரவு நேரங்களில் பன்றி முதலிய விலங்குகள் வந்து

தினைப்புனத்தை நொக்கி அழித்து விடாமல் இருக்கக் காவல் காத்த எயினர், பரண் அமைத்து அதன்மேல் இருந்து காத்தனர். இரவு நேரத்தில் யானைகள் வந்து தினைப்புனத்தை அழித்தலும் உண்டு. பரண்கள் உயரம் குறைவாக இருந்தால் யானைகள் பரண்களை அழித்து, பரண்மேல் இருப்போரைத் துன்புறுத்த கூடும். அதனால் யானைகளுக்கு எட்டாத உயரத்தில் மரங்களின் மேல் பரண் அமைத்து வேடர் அதன் மேல் இருந்து தினைப்புனம் காத்தனர். அப்போது பன்றியொன்று தினைப்புனத்தை மேய்ந்து அழிப்பதற்கு வந்தது. பன்றியின் காலடியோசைக் கேட்ட கானவன் பரண்மேல் இருந்தபடியே ஓசைவந்த திசையை நோக்கி அம்பு ஒன்றை வேகமாகச் செலுத்தினான். கானவன் கடுகச் செலுத்திய அம்பு பன்றியின் உடம்பில் பட்டுப் புண்படுத்தியது. புண்பட்ட பன்றி புண்ணுடனும் அம்புடனும் ஓடிப்போனது. ஓடிய பன்றி புண்ணின் வலியின் கடுமையால் மயங்கித் தான் வந்த பாதையை மறந்து வழி மாறிச் சென்று இறந்து வீழ்ந்தது. இதனை,

“கழுதிற் சேணோன் ஏவொடு போகி
யிழுதினன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பின்
நெறிகெடக் கிடந்த இரும்பணர் எருத்தின்
இருள் துணிந்தன்ன ஏனம் ”

என்று மலைப்படுகடாம் (243 - 47) கூறுகிறது.

**மான்வேட்டை**

முயலைப் போல மானும் ஒரு சாதுவான ஆபத்தில்லாத விலங்குதான். தற்காலத்தில் தோல், கொம்பு, இறைச்சி ஆகியவற்றுக்காக மான் வேட்டையாடப்படுகிறது. பண்டைக் காலத்திலும் மான் தோல், இறைச்சி ஆகியவற்றுக்காக வேட்டையாடப்பட்டது. வேள்வி செய்யும் காலத்தில் பார்ப்பார் மான் தோலைப் பச்சையாகத் தோளில் போர்த்திக் கொண்டு யாகச்சடங்குங்களைச் செய்தனர் என்று புறநானூறு (166) கூறுகிறது.

“வினைக்கு வேண்டி நீ பூண்ட
புலப்புல்வாய்க் கலைப் பச்சை
சுவற்பூண் ஞாண் மிசைப் பொலிய”

(வேள்வித் தொழிற்கு வேண்டி நீ போர்க்கப்பட்ட, காட்டு நிலத்தே வாழும் புல்வாய்க் கலையினது உறுப்புத்தோல் நினது தோளின் கண் இடப்பட்ட பூணூல் மீது சிறந்து தோன்றியது) என்று ஆவூர் மூலங்கிழார் அது குறித்துக் கூறுகிறார்.

**மானுக்கு இரங்கிய மங்கை**

எயினரது குடிசையின் முற்றத்தில் பலாமரம் அல்லது விளாமரம் நிற்கும். அதில் பார்வை மான் கட்டப்பட்டிருக்கும். பார்வைமான் கட்டிய கயிறு உராய்ந்ததால் அம்மரத்தின் அடி தேய்ந்திருந்தது. இதனை,

“பார்வை யாத்த பறைதாழ் விளவு, என்றும்
முன்றில் முஞ்ஞை முசுண்டைபம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத் தூங்கு நீழல்
கைமான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப் பிணைத் தழீஇ” - புறாநானூறு : 320

என்றும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன.

பார்வைமான் என்பது, பிற மான்களைப் பிடிப்பதற்காகப் பயிற்சி தந்து கட்டப்பட்ட பெண்மான். இதனை எயினர் தம் குடிசையின் முற்றத்தில் இருந்த பலாமரம் அல்லது விளாமரத்தின் அடியில் கட்டி வைத்திருந்தனர். ஆண் மான்கள் புணர்ச்சி வேட்கைக் கொண்டு மேய்தல் தொழிலைக் கைவிட்டு அதனோடு கூடி விளையாட அங்கு வரும். கலையும் பிணையும் புணர் நிலைக்கண் விளையாட காணும் எயினர் கலையை எளிதில் வீழ்த்துவர். அதற்காகப் பயிற்சி தந்து கட்டப்பட்ட பெண்மானே பார்வைமான் எனப்படும். எயினரின் குடிசையின் முன் கனிகள் தொங்கும் பலாமரம் ஒன்று நின்றிருந்தது. முன்னைக் கொடியும் முசுண்டைக் கொடியும் அதன் மீது செறிந்து படர்ந்திருந்தன. வேறே பந்தல் வேண்டாது தாமே பந்தராகப் படர்ந்திருந்தன. குடிசையின் முற்றத்தில் மான் தோலைவிரித்து எயிற்றி தினையரிசியைப் பரப்பி உலரவிட்டிருந்தாள். யானை வேட்டுவன் பலாமரத்தின் நிழலில் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அவன் யானை வேட்டம் புரிவோன்: இரவு அவ்வேட்டத்தின் மேற்சென்றிருந்தமையால் பேருறக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

குடிசையின் பக்கத்தில் பார்வை மானாகிய பெண்மான் கட்டப்பட்டிருந்தது. தொழிலொன்றுமில்லாத பிறிதொரு தனி ஆண் மான் வந்து அப்பெண்மானைத் தழுவிக் கலந்து விளையாடிக் கொண்டிருந்தது. அக்குடிசையின் தலைவியான எயிற்றி, குடிசையின் ஒரு பக்கமாக மான் தோலைவிரித்து அதில் தினையரிசியை உலர விட்டிருந்தாள். அவள், இன்பம் மிக்க அவற்றின் புணர்ச்சி நிலையைக் கண்டாள். கண்ட அவள் தன் கணவன் உறக்கம் நீங்கி எழுந்து விடுவானோ என அஞ்சினாள், எழுந்து கலையும் பிணையும் புணர்நிலைக் கண் விளையாட்டடுதலை காணின் அவன் அருளின்றிக் கலையை வீழ்த்துவான் என்று உணர்ந்து, அவன் உறக்கம் கலைந்து எழுவானோ எனவும், தன் வருகையைக் கண்டால் புதிதாக வந்த கலைமான் அஞ்சியோடுமோ, அங்ஙனம் அஞ்சியோடின் அவற்றின் புணர்நிலை இன்பம் சிதையுமோ என்றும் எண்ணிய அவள் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தாள். அவளது ஒடுக்கம் கானக்கோழியும் இதற் பறவையும் வந்து அவள் மான் தோலில் பரப்பி உலர விட்டிருந்த தினையரிசியைக் கல்லென ஆரவாரித்துக் கவர்நதுண்ண ஏதுவாயிற்று. பின்னர் எயிற்றி வைத்திருந்த கண்ணியில் அகப்பட்டுக் கொண்டன.

கலைமான் பிணைமானைப் புணர்ந்து நீங்கியபின் எயிற்றி அப்பறவைகளைப் பிடித்துத் துண்டு துண்டாக அறுத்து நிறைத்த இறைச்சியைச் சந்தனக்கட்டையாலாகிய நெருப்பில் சுட்டு ஆரல் மீனின் மனமும் உடன்கமழ அவற்றைப் பாணரின் கரிய பெரிய சுற்றத்தார்க்கு உண்ணக்கொடுத்து உபசரித்தாள். இச்செய்தியைச் சுவைபடக் கூறும் வீரைவெளியனாரின் பாடல் இது.

“முன்றில் முஞ்ஞை முசுண்டைப் பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்தூங்கு நீழல்
கைமான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணைத் தழீஇப் பிறிதோர்
தீர் தொழிற்றனிக்கலைத் திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலைக் கண்ட மனையோள்
கணவன் எழுதலு மஞ்சி யாவதும்
இல் வழங்காமையின் கல்லென வொலித்து

*மானதட்பெய்த உணங்கு தினை வல்சி*
*கான கோழியோடிதல் கவர்ந்துண்டென*
*ஆரநெருப்பினாரல் நாறத்*
*தடிவார்ந்திட்ட முழு வள்ரம்*
*இரும்பே ரொக்க லொடொருங்கினி தருந்தித்*
*தங்கினைச் சென்மோபாணை"      - (புறானூறு 320)*

வீரைவெளியனாரின் இப்பாடல் வேட்டுவர் சமூகத் தலைவியான எயினப்பெண்ணின் இல்லறமாட்சியையும் எவ்வுயிரும் தன்னுயிர்ப் போல் எண்ணி இரங்கும் உயர் பண்பையும் அவளது விருந்தோம்பற் சிறப்பையும் உலகுக்குத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

**புலிவேட்டை**

வேட்டுவர்ப் புலி வேட்டைக்குச் சென்றனர். வேட்டையின் போது சினமுற்ற புலியானது வேட்டுவன் மீது பாய்ந்து மார்பைக் கிழித்துப் புண்ணாக்கியது. அக்கொடிய புண்ணை ஆற்றுவதற்காகவும் புண்ணின் வலி தெரியாமல் இருப்பதற்காகவும் எயிற்றியர் இனிய பாடல்களைப் பாடினர். அப்பாடல் காடெல்லாம் எதிரொலித்தது.

*"கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பில்*
*நெடுவசி விழுப்புண் தணிமார்; காப்பென*
*அறல் வாழ்க் கூந்தல்கொடியச்சியர் பாடல்"*

(தம் கணவர் மார்பிலே புலி பாய்ந்ததாற்பட்ட நெடிய பிளத்தலையுடைய சீரிய புண்ணை ஆற்றுவதற்குக் காவல் என்று கருதி அறல் போலும் கூந்தலையுடைய கொடிச்சியர் பாடும் பாடலால் எழுந்த ஓசை) என்று மலைபடுகடாம் கூறுகிறது.

**யானை வேட்டை**

கானவர் மலைமேல் பரண் அமைத்துத் தினைப்புனம் காத்தனர். அப்போது, விளங்குகின்ற ஏந்தினக் கொம்பையுடையதும் தன் இனத்தைப் பிரிந்து வந்ததுமான யானைத் தினைப்புனத்தைத் தின்னும் பொருட்டு வந்தது. யானைத் தலைவனான அதனை வளைத்துப் பிடித்தற்காகக் கானவர் கூடிமுயன்றனர். அதனால் ஏற்பட்ட ஆரவாரம் கானகமெங்கும் எதிரொலித்தது.

"விலங்கல் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் இலங்கேந்து மருப்பின்
இனம்பிரி ஒருத்தல் புரிவளைப் பூசல்"

என்று மலைபடுகடாம் (277-99) எயினரின் யானை வேட்டம் குறித்துக் கூறுகிறது.

இதுகாறும் கூறிய செய்திகளால் கானவர், உடும்பு, முயல், பன்றி, முள்ளம் பன்றி, மான், புலி, யானை முதலிய காட்டு விலங்குகளை வேட்டையாடினர். அவ்வேட்டத்தின் போது பல்வகை திறமைகளை கற்றுக்கொண்டார்கள் என்பதை அறிந்தோம். வேட்டைத் தொழில் கானவரின் கூட்டு முயற்சியாகவே இருந்தது. இதனால் போர்களில் வேட்டுவர்கள் எளிதாக வெற்றி அடைய முடிந்தது.

## கானவர்த் தேனெடுத்தல்

குரங்குகளும் ஏற முடியாத உயரத்தையுடையதும் இனிதாகக் காட்சி தருவதுமான உயர்ந்த மலையில் தேனீக்கள் தேனைத் திரட்டிக் கூடுகட்டியிருந்தன. கானவர் அத்தேனை எடுக்க முயன்றனர். நிலைபேறுண்டாகக் கட்டியமைத்த கண்ணேணி வழியாக ஏறிச் சென்று அத்தேன் கூட்டையழித்துத் தேனெடுத்தனர். அதனால் எழுந்த மகிழ்ச்சியால் மிகுதியாக ஆரவாரித்தனர். அந்த ஆரவாரம் மலையெங்கும் எதிரொலித்தது. கண்ணேணியாவது, கணுக்களிலே அடிவைத்து ஏறிச் செல்லும்படி அமைத்துள்ள மூங்கில் ஏணியாகும். மலையுச்சியில் உள்ள தேனிறாலை அழிக்கும் பொருட்டாகச் செங்குத்தாக மூங்கில்களைக் கூட்டி ஏணியாக நிறுத்தி வைத்து அதன் வழியாக ஏறிச் சென்று கானவர் தேனெடுப்பர்.

"கலைகையற்ற காண்பனெடுவரை
நிலைபெய்திட்ட மால்பு நெறியாகப்
பெரும்பயன் தொடுத்த தேங்கொள் கொள்ளை "

என்று கானவர் கண்ணேணி வழியாக ஏறிச்சென்று தேனெடுத்த செய்தியை மலைபடுகடாம் (315-17) கூறுகிறது. (மால்பு கண்ணேணி) பாரியின் பறம்பு மலையில் தேனெடுத்தற்காக கானவர் கண்ணேணிகள் அமைத்த செய்தியைக் கபிலர் கவினுறக் கூறுகிறார். மால்புடை நெடுவரைக்கோடு (புறநானூறு-105) (கண்ணேணியையுடைய நெடிய மலையினது சிகரம்) என்பது கபிலரது கூற்று.

*"அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து*
*திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே என்றும்*
*நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்*
*வாரசும் பொழுகு முன்றிற்*
*தேர்வீசிருக்கை நெடியோன் குன்றே" புறம் : 114*

*(மது பிழிந்து போடப்பட்ட கவளத்தினது கோதுடைத்தாகிய சிதறியவற்றினின்றும் வார்ந்த மதுச்சேறு ஒழுகும் முற்றத்தையுடைய தேர்வழங்கும் இருப்பையுடைய உயர்ந்தோனுடைய மலை) என்றும்,*

*"ஒரு சார் அருவி ஆர்ப்ப வொருசார்*
*பாணர்மண்டை நிறையப்பெய்மார்*
*வாக்கவுக்கத் தேக்கட்டேறல்*
*கல்லலைத் தொழுகும்" - புறநானூறு : 115*

*(ஒரு பக்கம் அருவி ஆர்த் தொழுக, ஒரு பக்கம் பாணருடைய மண்டைகள் ( கலங்கள்) நிரம்ப வாக்க வேண்டி வடித்தலால் சிந்திய இனிய கள்ளாகிய தேறல் கல்லையுருட்டி ஒழுகும்) என்றும் பறம்புமலையின் தேன்வளம் குறித்தும் கானவர் அங்கு தேனெடுத்தது குறித்தும் தேன் சுவை சொட்டக் கபிலர்க் கூறுகிறார்.*

**கால்நடை வளர்த்தல்**

வேட்டுவர்களின் வேட்டைத்திறன், நுட்பமான அறிவாற்றல் போன்றவற்றால் எளிதாக கொடும் விலங்குகளிடம் இருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டனர். இவர்களின் இரக்க குணம் வேட்டையின் போது கிடைக்கும் சிறு விலங்குகள், குட்டிகளை வீட்டில் வளர்தனர். இதுவே வீட்டு விலங்குகள் வளர்ப்பதை ஊக்கப்படுத்தியது. இவ்வாறு கால்நடை வளர்க்கக் கற்றுக் கொண்டனர். கால்நடை வளர்ப்பது மனிதனின் வாழ்க்கை முறையை முற்றிலுமாக மாற்றியது. ஆம்! மனிதன் இதுவரை உணவுக்காகவும் கொடும் விலங்குகலிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் போராடிக் கொண்டிருந்தான். கால்நடை வளர்ப்பும், வேட்டை ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உணவுத்தேவை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டான். மனிதன் தோன்றிப் படிப்படியாக வேட்டையாடி

விவசாயம் செய்து பின்னர்க் கால்நடைகளை வளர்க்கக் கற்றுக் கொண்டபின் மனிதன் வாழ்வில் மாற்றங்கள் தோன்றின. விலங்குகளைப் பழக்கி தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்தான். தனது உடல் உழைப்பைக் குறைத்து அதிகப் பலன் தரக்கூடிய செயலைச் செய்து கொண்டான்.

குறிப்பாக விலங்குகளான,

1) நாய்களை வீட்டு பாதுகாப்புக்காகவும் திணைப் புனம் பாதுகாப்புக்காகவும் வேட்டைக்கும் பயன்படுத்திக் கொண்டான்
2) மாடுகளைப் பால்பொருள்களை தயாரிப்பதற்கும்
3) எருதுகளை விவசாயம் செய்வதற்கும்
4) எருமையை விவசாயம் செய்திடவும்
5) கழுதையைப் பொதி சுமக்கவும்
6) குதிரைகளை வண்டிகளில் இழுத்துச் செல்லவும்
7) யானைகளைப் போர் போன்றவற்றில் ஈடுபடுத்தவும்
8) கோழி, புறா, காடை, முயல், மயில் போன்றவையும் ஆடு போன்றவையும் உணவு தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டான்
9) புலி, மான், பன்றி போன்றவற்றை கொன்று தோலுக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

வேட்டுவர்கள் முதலில் தன்னைச் சுற்றியுள்ள விலங்குகளைத் தேடி தேடி வேட்டையாடினார். பின்னர் அவைகளைப் பழக்கப்படுத்தி தனது கூடவே வளர்த்து அவைகளைத் தனது அடிமைகளாகப் பயன்படுத்திக் கொண்டான். வேட்டுவர்கள் போர் மறவராகவும் வேட்டையாடும் பொழுது திணைப்புனம் காவல் செய்யும் போதும் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவமே பின்னாளில் அவர்களைச் சிற்றரசராகவும், குறுநில மன்னர்களாகவும், வேந்தர்களாகவும் மாற்றியது. ஆண்கள் பெண்கள் ஆகியோர்த் தனது வேலைகளைப் பகிர்ந்து கொண்டனர். ஆண்கள் வேட்டையாடினர். பெண்கள் விதைகள் மற்றும் பழங்களைச் சேகரித்தனர். சிறு விலங்குகளை வேட்டையாடி உணவு தேவையைப் பூர்த்தி செய்தனர். இந்தக் காலத்தில் பெண்கள் மதிப்பு

மிக்கவர்களாகவும், குடும்பத் தலைவியாகவும் குடும்பத்தைப் பாதுகாக்கும் கடமையைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

ஆண்கள் வேட்டையாடிக் கொண்டு வந்தனர். சில சமயம் வேட்டை உடனடியாக வெற்றியடையும், சில சமயம் வேட்டையில் வெற்றியடைய நெடுநாட்களுக்குக் காத்திருக்க வேண்டும். எனவே ஆண்கள் இரண்டாம் நிலையிலிருந்ததனர். ஆண்களை தனது தாய் அல்லது மூத்த பெண்கள் வழி நடத்தினர். அதை ஆண்கள் கேட்டு நடந்தனர். பெண்களின் நிலை உயர்ந்து இருந்தது. பெண் தெய்வங்கள் (கொற்றவை) ஆளுமைப் பெற்று விளங்கியது. வேட்டைக் கருவிகளின் பயன்பாடு, விவசாயத்தின் வளர்ச்சி, கால்நடை வளர்த்தல் ஆகியவைக் குறிஞ்சி நில மக்களான வேடுவர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுதியது. உணவிற்கும் பாதுகாப்புக்கும் போராடியவர்கள் இப்பொழுது தனது கவனத்தை விவசாயத்தையும் கால்நடைகளையும் பாதுகாக்கத் தனது வேட்டை ஆயுதங்களை போர் ஆயுதமாக மாற்றினர். இப்பொழுதுதான் பெண்களின் ஆதிக்கம் தளர்ந்தது. தலைவன் தோன்றினான். இவனே ஊர்தலைவன், குறுநில மன்னன் ,வேந்தன் என்று மாறினான்.

## ஆ கோள் பூசல்

தனது கால்நடைகளையும் விவசாயப் பயிர்களைக் காக்கும் கடமை வேட்டுவர்களிடம் வந்தது. உணவுக்காகக் கொடும் மிருகங்களை வேட்டையாட போராடி வந்த வேட்டுவர் தனது கால்நடைகளைப் பாதுகாக்க முதன் முதலில் சக இனக்குழு மக்களுடன் போரிட வேண்டிய சூழல் உருவானது. இதற்குக் காரணம் என்னவாக இருக்க வேண்டும் என்று நாம் ஆராய்ந்தால் நமக்குத் தோன்றுவது பங்காளி சண்டை மற்றும் செல்வதைப் பெருக்குதல் இவ்விரண்டுமே ஆகும்.

சங்க பாடல்ககளில் ஆகோள் பூசல் பற்றிக் குறிப்பிட்டு உள்ளார்கள். தொல்காப்பியர் புறத்திணையில் இலக்கணம் வகுத்துள்ளார்.

அகநானூறு பாடல்-262இல் தவறுதலாகக் கால்நடைகள் கோசர்களின் பயிர்களை மேய்ந்து விட்டதைப் பொருத்துக் கொள்ளாமல் கால்நடைகளின் உரிமையாளரின் கண்களைப் பிடுங்கி விட்டார்கள். இதன் மூலம் இரு ஊர்களுக்கு இடையில் போர் உருவானது என்பதை அறிய முடிகிறது.

ஆநிரை கவர்தல் (வெட்சி திணை ) ஆநிரை மீட்டல் (கரந்தைத் திணை) அகம்-262

"முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கி,
பகடு பல பூண்டஉழவுறு செஞ்செய், இடுமுறை நிரம்ப,
ஆடுவினைக் கலித்து,
பாசிலை அமன்றபயறு ஆபுக்கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்.
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்.
பறங் கெழுதானைக் கொற்ற குறும்பியன்,
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன் உயிர்ச் செகுப்பக் கண்டு சினம் மாறிய அன்னி மிஞிலி"

இந்தப் பாடலில் தவறுதலாகத் தனது பசு பக்கத்தில் உள்ள வயலில் புகுந்து மேய்ந்து விட்டது. அதைக் கூறிய தன் தகப்பனுக்கு இரக்கம் காட்டாமல் அவருடைய கண்களைப் பிடுங்கி துன்பம் செய்த பழமையான ஊரில் வாழும் கோசர் என்பவர்களின் சிறுமையான செயலை எண்ணி பாத்திரத்தில் உண்ணாமல் வெளுத்த ஆடையை உடுத்தாமல் சினத்தில் எடுத்த நோன்பிற்குரிய தோற்றம் மாறாமலும் இருந்தது வீரமிகுந்த படை கொண்ட வெற்றி சேர் குறும்பினை ஆகிய திறம் மிக்க நல்ல குதிரையுடைய திதியன் என்பவனுக்குச் சொல்லி அக்கோசர்களின் இன்னுயிரைப் போக்கியதை பார்த்துச் சினம் நீங்கி மகிழ்ந்த அன்னி மிஞிலி என்று இந்தப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடக்க காலங்களில் நாம் உற்றுநோக்கும் பொழுது ஆக்கோள் பூசலுக்கு முக்கிய காரணமாக அமைந்தது விவசாயப் பயிர்களை அறிந்தோ அறியாமலோ கால்நடைகள் மேய்ந்து விடும்பொழுது அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அடித்து போரிட்டுக் கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

கால்நடைகளை அதிகமாகக் கொண்டவன் அருகில் உள்ள விவசாய நிலத்தில் மேய்த்ததால் அந்த நிலத்தில் பயிர் செய்து தனது நீண்ட கால உழைப்பால் எதிர்காலத் தேவைக்கு வைத்து இருந்த உணவுத்தானியங்களை இழக்கும் நிலை ஏற்படுத்தும் வகையில்

அமைந்த இந்தநிகழ்வே இரண்டு இனக் குழுக்களுக்குள் பூசல் உருவாக வாய்ப்பாக அமைந்தது.

விவசாயம் செய்வதும் கால்நடை வளர்பதும் இனக்குழுக்கள் தனது உணவு தேவையை எளிதாகப் பூர்த்தி செய்யமுடிந்தது. எனவே ஆநிரைகளை மக்கள் தனது செல்வங்களாக எண்ணினர். எனவே கால்நடைகளை விரும்பி வளர்க்க ஆரம்பித்தனர். கால்நடை வளர்பின் மூலம் அதிக ஓய்வு நேரம் கிடைத்தது. இதன் மூலம் ஆவர்கள் கலைகளில் ஆர்வம் காட்டினர். அதேசமயம் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் வறட்சி மற்றும் கால்நடைப் பெருக்கத்தால் வேறு இடங்களுக்கு இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு இடம்பெயர்தல் அருகில் உள்ள இனக்குழுக்களுல் பூசல் ஏற்பட்டது. பூசலில் வெற்றிப் பெற்றவர் ஆநிரைகளைக் கவர்ந்து தனது உணவு தேவையைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். இரண்டு இனக்குழுக்களில் ஏற்பட்ட ஆகோள் பூசல் அரசு உருவாக மிக முக்கிய காரணமாக அமைந்தது. விவசாயம் செய்வதற்கு மூன்று முதல் ஆறு மாத காலங்கள் ஆகும். மேலும் மழையின்மை, காலநிலை வேறுபாடு, வனவிலங்குகளின் தாக்குதல் போன்றவற்றால் எளிதாக விவசாயம் செய்ய இயலாத நிலையே அந்தக் காலத்தில் இருந்தது. கால்நடை வளர்ப்பு என்பது எளிதாகவும் உடனடி வருமானத்தையும் கொடுத்தது. மேலும் ஆநிரைக் கவர்தல் வீரமிக்கதாகவும் தன் மக்களைக் காப்பதற்கு தேவையான ஒரு வீரம் மிக்க செயலாக அக்கால இனக் குழுக்களின் கருத்தாகும். குறிஞ்சி மக்கள் மற்றும் பாலை நில மக்கள் மேய்ச்சல் நிலமான முல்லையில் உள்ள ஆநிரைகளைக் கவர்தலில் ஈடுபட்டனர். சிறு இனக் குழுக்களாக இருந்த இனக்குழுவில் ஆநிரை கவர்தல் மெல்ல மெல்லத் தன்னைவிட சிறிய குழுக்களை அழித்து வலிமை வாய்ந்த இனக்குழுவாக மாறினார்கள். சிறு சிறு மீன்களை உண்டு மிகப்பெரிய வலிமையான மீனாக மாறும் ஒரு மீனை நாம் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இனக்குழுக்கள் தங்களின் ஆநிரையையும் விவசாயப் பயிர்களையும் பாதுகாப்பதே மிக முக்கிய பணியாக அமைந்தது. இதன் மூலம் இவர்கள் பொருளாதாரத்திலும் படைப்பலத்திலும் உயர்வை அடைந்தார்கள். சங்ககாலத்திற்கு முன்பு வரை அனைத்து இனமும் ஒரே நிலையில் இருந்தனர். சங்ககாலத்தில் தொடர்ந்து நடந்த ஆகோள் பூசல் தமிழர்களின் போர்திறத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

புதியவகைப் போர் கருவிகள் உருவாக்கம் யானைகள், குதிரைகளை, போரில் பயன்படுத்துவது, தானியங்களைச் சேமிப்பது போன்ற அனுபவங்கள் மிகப்பெரிய மாற்றத்தை இனக்குழுக்களில் ஏற்படுத்தியது. கால்நடை வளர்ப்பிற்கும் விவசாயத்திற்கும் வேட்டுவர்களுக்கு நிலத்தேவை அதிகரித்தது. எனவே இவர்கள் முல்லை நிலத்தைத் தாண்டி மருத நிலத்தை நோக்கியும் நகர்ந்தனர். காடுகளில் உள்ள மரங்களை தீவைத்து எரித்து எளிதாக வயல்களாக மாற்றினர். மேலும் காட்டுத் தீயினால் இரும்பு போன்ற உலோகங்கள் வெப்பத்தால் உருக்க முடியும் என்பதை அறிந்து இரும்பின் பயன்பாட்டை அதிகரித்தனர். போர் ஆயுதம் செய்யும் தொழில்நுட்பதை கற்றுக்கொண்டனர். இதன் மூலம் வேட்டுவர் தங்களின் நிலத்தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆகோள் பூசலில் ஈடுபட்டனர். இதுவே மன்னர் ஆட்சி உருவாக்க காரணமாக அமைந்தது. வேட்டுவர்கள் குழு தலைவனாகவும், ஊர்தலைவன், குறுநிலத் தலைவன் மன்னன், வேந்தன் என்று மாறினார்கள். சங்கப்பாடலில் கூறியபடி காடுகளில் உள்ள பசும்பொன்னும் உலோகமும் வேட்டுவர்களின் கண்ணில் பட்டது. உலோகங்களை உருக்கவும் பயன்படுத்தவும் கற்று உணர்தனர். உலோகங்களை உருக்க வெப்பம் தேவை என்பதைத் தெரிந்து கொண்டனர். இதுவே ஒரு புரட்சியாக அமைந்தது. உலோகங்கள் கொண்டு போர்க் கருவிகளை உருவாக்கினர். வில்லின் முனையில் உலோகங்களை ஒட்டினர். வாள் மற்றும் வேல் செய்யக் கற்றுக் கொண்டனர். இது குறுநில மன்னர்களிலிருந்து வேளீர் வேந்தர் நிலைக்கு உயர்தியது. குறிஞ்சி நில மக்களான வேட்டுவர்கள் இந்த அபார வளர்ச்சியால் தனது நாடு பெருக்கும் நிலைக்கு மாறினர். எதிர்த்தவர்களை வெற்றிக் கொண்டனர். அம்பு விட்டனர், ஈட்டி எறிந்தனர், எதிர்த்தவர்களைக் கொன்று பெரும் வேந்தர்ஆகினர்.

சங்க காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பெருங்கற்காலத்தில் இருந்து தமிழகத்தில் வாழ்ந்த தொல்குடி இன மக்களின் வாழ்க்கை முறையையும் எதார்த்தங்களையும் பாணர்களின் பாடல்களின் மூலம் நாம் ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம். சங்க புலவர்கள் இயற்றிய சங்க இலக்கிய தொகுதியான அகம் மற்றும் புறப்பாடல்களின் வழியாகத் தமிழ் மக்களின் அக்காலத்து நாகரிகத்தின் பண்பாட்டையும் கலாச்சாரம்

ஆகியவற்றையும் தெரிந்து கொள்ள முடியும். வாய் வழியாகப் பாணர்கள் பாடி வந்த பாடல்களை சங்கப் புலவர்கள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்தார்கள்.

சங்க இலக்கியங்கள் மூலம் பண்டைய கால இனக்குழுவின் ஆகோள் பூசலை ஆநிரை கவர்தல் (வெட்சி) ஆநிரை மீட்டல் (கரந்தை) என்றும் நமக்கு விரிவாகக் கூறுகிறது. தொல்காப்பியத்தில் புறத்திணையில் ஆநிரை பூசலுக்கான இலக்கணங்களைக் குறிப்பிட்டுள்ளது.

வெச்சி திணையை அறிமுகம் செய்யும் பொழுது வெச்சி தானே குறிஞ்சியது புரனே என்று அறிமுகம் செய்கிறது.

இதன் அடுத்த பாடலில் வேந்து விடு முணைஞர் வேற்றுப்புல களவின் ஆ தந்து ஓம்பல் மே வந்து ஆகும் (தொல். பொருள் புறத்திணை 2). இப்பாடலின் மூலம் மூவேந்தர்களன சேர சோழ பாண்டிய மன்னர்கள் பகையரசர்களின் மீது போர்த் தொடுக்கும் முன்பு வீரர்களைப் பகைநாட்டுக்குள் அனுப்பி பகை மன்னர்களின் ஆநிரைகளைக் கவர்ந்து வந்து போருக்கு அழைப்பு விடுத்தனர் என்று பொருள் ஆகும்.

**பெரும்கற்காலம் முதல் சங்ககாலம் வரை**

**( கிமு 1500 இருந்து கி.பி.500வரை )**

சிறு சிறு பூசலாக ஆரம்பித்த ஆகோள் பூசல் வளர்ந்து இரண்டு வேந்தர்களுக்குள் போர் நடக்கும் அளவிற்கு வளர்ந்தது. முதல் முதலில் வேட்டுவர்கள் குறிஞ்சி நிலத்தில் ஆநிரைகளை வளர்க்க ஆரம்பித்தனர். ஆநிரையின் எண்ணிக்கை அதிகம் ஆக ஆக அவர்கள் சமவெளி காடுகளை (முல்லை) நோக்கி நகர்ந்தனர். இவ்வாறு வேட்டுவர்கள் கால்நடைகள் வளர்ப்பில் வளர்ச்சி அடைந்தவர்கள் தங்களிடம் பணி செய்யும் ஆட்களையும் வைத்துக்கொண்டனர் (புறம் 324).

“இடையன் பொத்திய சிறு தீ விளக்கத்துப்
பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தற்கு உலக்கும்
நெஞ்சறி துணையே.”

இடையன் ஏற்றிய சிறு தீயின் ஒளியிலே பாணரோடு

பேசிக்கொண்டு இருக்கும் வேட்டுவர் தலைவன் என்று உணர்த்துகிறது. இதன் மூலம் வேட்டுவர் வளர்க்கும் கால்நடைகளை இடையர்கள் மேய்த்தார்கள் என்பதை உணரமுடியும். இந்தப்பாடலில் வேந்தர்க்கு துன்பம் என்றால் அது தனக்கு வந்ததாக எண்ணி உடனே போருக்கு செல்லும் வேட்டுவன் என்று ஆலத்தூர் கிழார் குறிப்பிடுகிறார். எனவே வேட்டுவர்கள் தான் வேளிர்கள் என்பதையும் இந்த பாடல்கள் மூலம் உறுதி செய்யலாம். இந்தக் காலகட்டத்தில் சாதி வேறுபாடு உருவாகவில்லை என்றாலும் சாதிகளுக்கான பெயரானது தொழில் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. குறிப்பாக, இனக்குழுவில் உள்ள பணி செய்பவர்களை அதன் தொழில் பெயரையே ஜாதியாக உருவானது. இடையர், தொழுவர், கடையர் என்று உருவானது. பாணர், கடம்பர் போன்றவர்களையும் குறிக்கலாம்.

வேட்டுவர் குறிஞ்சி நிலத்தில் வேட்டையாடுதல், விவசாயம் செய்தல், கால்நடை வளர்தல் மற்றும் பாதுகாப்பு கொடுக்கும் தலைவன் என்ற நிலையில் உயர்ந்தனர்.

வேட்டுவர்கள் கால்நடைகளைப் பழக்கி தன்னுடன் வளர்க்கக் கற்றுக் கொண்டவர்கள் ஆநிரைக் கவர்தல் மற்றும் ஆநிரை மீட்கும் தலைவர்களாக இருந்தார்கள். இவர்களைப் பின்னாளில் ஊர்த்தலைவன், குறுநில மன்னன் (வேளிர் ) வேந்தர் என்று மாறினர். இதே காலங்களில் வேட்டுவர்கள் பொன்மணி மற்றும் கல்மணிகளின் பயன்பாட்டையும் அவற்றை ஆபரணங்களாக மாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அறிந்திருந்தனர். தொல்குடி தமிழ் மக்களான வேட்டுவர்கள் அரசு குடியை உருவாக்கினார்.

வேட்டுவர்கள் என்பவர் தலைவன், கிழான் (உரிமையாளன்), கோ, மறவர், மன்னன், மழவர், என்று அழைக்கப்பட்டார்கள். தமிழ்ப் பழங்குடியில் வேட்டுவர்கள் இனக்குழுக்களே தொன்மையானது. இவர்களில் 400க்கும் மேற்பட்ட குலங்கள் உள்ளன. மேலும் இவர்களுக்குள் அகமண முறையில் திருமணம் நடைபெறுகின்றது. வேர் வழியை அறிந்தாலும் வேட்டுவர்களின் கால் வழியை அறிய முடியாது என்பது முதுமொழி. இதன் மூலம் இவர்களின் இனக்குழு வடக்கே வேங்கடம் முதல் (புள்ளி வேட்டுவ மன்னன்) தெற்கே கோடைமலையின் தலைவன்

கடியநெடு வேட்டுவன் வரை வேட்டுவ மன்னர்களே ஆட்சி செய்து வந்துள்ளார்கள். குறிஞ்சி நிலம் வேட்டுவர்களுக்கு உரியது. இவர்களே குறுநில மன்னர்களாகவும் இருந்துள்ளனர். குறுநில வேட்டுவ மன்னர்களான ஆய் அண்டிரன் , கண்டிரக் கோப்பெரும் நல்லி, வல்வில் ஓரி, அதியமான், பாரி, பேகன், போன்ற மன்னர்கள் கடையெழு வள்ளல்களாகவும் போற்றப்படுகிறார்கள். மூவேந்தர்களான சேரன் வேட்டுவ மன்னன் என்றும், மழவர்களின் உறவினர் முறை உடையவன் என்றும் நாம் அறிய முடிகிறது. அதேபோல் கடியநெடு வேட்டுவன் பாண்டியனின் படைத் தளபதி என்றும் பாண்டிய மன்னன் கால்வழியினர் எனவும் உணர முடிகிறது. சோழ மன்னன் முட்கால சோழன் சிபி மன்னன் செம்பியன் குலத்தைச் சார்ந்தவன் என்று சங்க இலக்கியங்கள் கூறுகிறது. செம்ப வேட்டுவர் வழித்தோன்றல் என்பதை உறுதியாகச் சொல்லமுடியும்.

**வேட்டை ஆயுதங்கள் மற்றும் தொழில் நுட்பம்**

*1) அடர்*
*2) கண்ணி*
*3) வில் அம்பு*
*4) ஐயவின்*
*5) அகப்பா*
*6) உயிர்வேலி முள்வேலி*
*7) கண்ணெணி*
*8) அகழி*
*9) மதில் சுவர்*
*10) பார்வை மான்*
*11) அடர்*
*12) விவசாயம்*

வேட்டுவர்கள் வேட்டையாடுதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட பல தொழில்நுட்பங்கள் பின்னர்ப் போர்களில் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல வெற்றிகளைப் பெற்றிட உதவி உள்ளது. வேட்டுவர்கள் ஆரம்ப காலங்களில் பயன்படுத்திய சில தொழில்நுட்பங்கள் அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக அவர்கள் கொடும்

விலங்குகளை வேட்டையாடும் பொழுது அவர்கள் செய்த சில யுக்திகளும் தொழில் நுட்பங்களும் பிற்காலங்களில் மிகப்பெரிய படையைக் கையாள்வதற்கும் எதிரி நாட்டின் மீது போர்த் தொடுப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

வேட்டுவர்கள் பெரும் கற்காலம் முதலே தங்களது உடல் வலிமையும் மனவலிமையும் மற்றும் அறிவுத்திறத்தை அதிகரித்துக்கொண்டே வந்துள்ளார்கள். அதற்கு மலையில் அவர்களின் வாழ்க்கை முறையே காரணமாக அமைந்தது. கற்களைக் கூரிய கற்களாக மாற்றி வேட்டையாட கற்றுக் கொண்டனர். பின்னர் வேல் போன்ற கூரிய கருவிகள் மூலம் வேட்டையாடினர். பின்னர் வில்லம்பு பயன்பாட்டைக் கண்டறிந்தனர். இதேசமயம் மண்பானைச் செய்தல் விவசாயம் செய்தல் போன்ற கலைகளைக் கற்று உணர்ந்தனர். யானை, புலி, கரடி, காட்டுப்பன்றி போன்றவற்றை வேட்டையாடவும் கால்நடைகளான ஆமான் ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை வளர்த்து, பால் சார்ந்த பொருள்களைத் தயாரிப்பைப் பெருக்கிக் கொள்ளவும் கற்றுக் கொண்டனர். இந்த நிலை வரையில் இவர்கள் பொதுவுடமை முறையையே கையாண்டு வந்தனர். குறுநில மன்னர்களை வேளிர் என்றும் அழைப்பார்கள். வேளிர் என்ற சொல் சங்க இலக்கியங்களில் 30க்கும் குறைவான பாடல்களில் தான் கையாளப்பட்டுள்ளது.

வேட்டுவரின் வேட்டைத் திறனும் தொழில்நுட்பமும் எவ்வாறு அவர்களை அரசர்களாக மாற்றி இருக்கும் என்பதையும் பகை மன்னர்களை வெற்றிக் கொள்ள முடிந்தது என்பதையும் பார்ப்போம்.

வேட்டுவர் புலி வேட்டைக்குச் சென்றனர். கொடும்புலியை அவர்கள் வேட்டையாடினர், புலியின் பல்லைச் சிறுவர்களுக்கு கொடுத்தனர் என்றும் புலித்தோலைப் பயன்படுத்தி உள்ளார்கள் என்பதையும் நாம் சங்க இலக்கியங்களில் தெரிந்து கொள்ளலாம். புலிப்பல் கோர்த்த புலம்பும் மணி தாலி அகம் 7 குறுந்தொகை 16 ஆகியவற்றில் குறிப்பிடப்படுகிறது.

"கிடந்து உயிர் மறுகுவது ஆயினும் இடம்பெனில் வீழ்க் களிறு மேசையால் புலியினும் சிறந்த தாழ்வு உள்ளம்" *(389 அகம்)*

யானையே என்றாலும் அதை வலப்பக்கமாக விழக்கண்டு மகிழும் புலி என்று நக்கீரன் (389 அகம்) குறிப்பிட்டுள்ளார்.

"அகம் ஒளி கொலைச் செயலை உடைய மான் அல்குல் புலிப்பல் தாலி புதல்வன்" (குறுந்தொகை 16)

வேட்டுவர்களின் மிக விருப்பமான தொழிலானது தேன் எடுத்தல், இதைச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேட்டுர்கள் தேன் எடுக்கும் பொழுது கண்ணேணி (மால்பு கண்ணேணி) என்கின்ற ஒரு வகையான ஏணியை அவர்கள் பயன்படுத்தினர். இந்த ஏணியானது கணுக்களிலே அடிவைத்து ஏறி செல்லும்படி அமைந்துள்ள மூங்கில் ஏணியாகும். இது மலை உச்சியில் உள்ள தேனினை எடுக்கச் செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூங்கிலைக் கட்டிய ஏணியாக நிறுத்தி வைத்து அதன் வழியாக ஏறிச் சென்று கானவர் தேன் எடுப்பர்.

"கலை கையையற்ற காண்பநெடுவரை
நிலைபெய்திட்ட மல்பு நெறியாகப்
பெரும்பயன் தொடுத்த தேங்கு கொள்ளை
மால்புடை நெடுவரைக் கோடு" புறம் 105 ல்

கண்ணேணியுடைய நெடிய மலையின் சிகரம் கனவர் நெடிய மலையில் கண்ணேணி உதவியுடன் தேன் எடுத்தார்கள் என்று கபிலர் குறிப்பிடுகிறார்.

உயர்ந்த மலைகளின் மீதுள்ள தேன்களை எடுப்பதற்கு அவர்கள் கண்ணேனியைப் பயன்படுத்தினர். இந்த ஆற்றல் மிக்க செயலால் வேட்டுவர்கள் உயரமான கோட்டையின் மதில் ஏறுவதை எளிதாக செய்தார்கள். எதிரி நாட்டின் மன்னர்களின் உயரமான மதில் மீது எளிதாக ஏறுவதற்குக் கண்ணேணியைப் பயன்படுத்தி உள்ளார்கள்.

**வில் அம்பு**

சங்க இலக்கியங்களில் பல்வேறு பெயர்கள் கொண்டு அழைத்தார்கள். அவற்றின் பெயரை இப்பொழுது பார்ப்போம்

1) கொடுவில் எயினர்க் குறுந்தொகை 12

2) வில்லுடை விளையர் குறுந்தொகை 272

3) விடுகணை வில்லோடு குறுந்தொகை 274

4) வல்வில் இளையர் குறுந்தொகை 275
5) நோன் சிலை வேட்டுவர்ப் புறம் 205
6) சிலைகெழு குறவர்ப் புறம் 236
7) வில்லெடுத்து ஆர்ப்பின் புறம் 322
8) ஊக நுண்கோல் புறம் 324
9) விற்கழிப்பட்ட நாமப் பூசல் 65
10) அம்பு வேட்டைக் கருவி
11) மாரி அம்பின் அகம் 185
12) வார்க் கோல் அம்பினர் அகம் 239
13) அம்பு சென்று யானைப் புறம் 19
14) அம்பு புறம் 324
15) எரிகனை நற்றிணை 228
16) இலைமாண் நற்றிணை 352
17) காழ் கோத்தனை புறம் 70
18) வார்க் கோல் அம்பு (எரிகனை) நிலை மான்

நீண்ட கோலின் முனையில் செருகிய அம்பாள் இது எரிகனை அல்லது இழைமான் என்று கூறப்படுகிறது (புறம் 370).

உலகலவில் வேட்டைக் கருவிகளில் மிகவும் தொன்மையானது வில்அம்பு. இவற்றைச் சங்க கால வேட்டுவர்கள் பரவலாகப் பயன்படுத்தினார். வில் என்ற சொல் நேரடியாக விளிக்கப்பட்டாலும் நோன் சிலை, சிலைகெழு, ஊக நுண்கோல் முதலான தொடர்களாலும் வில் குறிக்கப்பட்டு உள்ளது.

ஐயவி அகப்பா போர்கருவியை கொடுமுடி என்ற வேட்டுவ மன்னன் உருவாக்கி அவனது கோட்டையின் மதில் சுவரில் பொறுத்தி இருந்தான். இவன் தலைநகரம் கொங்கு நாட்டில் உள்ள ஆமூர் ஆகும். இன்று கொடுமுடி என்று அழைக்கப்படுகிறது. இவனது கோட்டை பகைவரால் எளிதில் வெற்றி கொள்ள முடியாதவாறு ஐயவி அகப்பா என்ற போர் இயந்திரம் பொருத்தப்பட்டு இருந்தது. இந்த கருவியானது கோட்டையின் மதில் சுவரில் இருந்து அம்புகள் மழை போல் தொடர்ந்து வீசப்படும். இதன் மூலம் பகைவர்கள் எளிதில் நெருங்க முடியாது (அகநானூறு 159).

“கொடுமுடி காக்கும் குரு உக்கண் நெடுமதில் சேண் விலங்கு சிறப்பின் ஆமூர்” என்று போற்றப்படுகிறது

கொடுமுடியை வென்ற சேர மன்னன் பல் யானைச் செல்கெழு குட்டுவன் ஆவார். வேட்டுவ மன்னன் கொடுமுடியின் மீது பற்று கொண்ட மக்கள் கரையூர் என்று அழைக்கப்பட்ட வந்த தங்களின் ஊர்ப் பெயரை கொடுமுடி என்று அழைத்தனர். மேலும் வேட்டுவ மன்னன் கொடுமுடிக்கு நடுகல் நாட்டி வழிபட்டனர்.

**ஆநிரைக் கவர்தல்**

போர் அறிவிப்பைச் செய்தும் உணர மாட்டாதவைப் பசுக்களாகும். எனவே பசுக்களைப் பாதுகாக்க விரும்பி ஆநிரைக் கவர்தல் நடைபெறும். அவ்வாறு கவர்ந்து திரும்பும்போது அப்பசுக்களுக்கு உணவினை வழங்கி, அவற்றிற்கு ஊறு செய்யாமல் ஓட்டிச் செல்வர்.

**பூப்புனைதல்**

மறவர் போர்த் தொடங்கும் போது நிகழ்வுக்கேற்ற அடையாளப் பூவைச் சூடுதல் வழக்கம்.

ஆநிரைக் கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கப் போவோர்க் கரந்தைப் பூவையும்,பகைவர் நாட்டின் மீது படை எடுப்போர் வஞ்சிப் பூவையும், அரணைக் காப்போர் நொச்சிப் பூவையும், அரணத்தை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், ஒரு களத்தில் போரிடுவோர் இரு திறத்தாரும் தும்பைப் பூவையும், போரில் வெற்றி எய்தியோர் வாகைப் பூவையும் சூடுவர்.

இவ்வாறு பூச்சூடுங்கால் உண்மைப் பூவைச் சூடுவதோடு பொற்பூவைப் புனைதலும் உண்டு. அரசர் மறவர்க்குப் பொற்பூ வழங்கிச் சிறப்பித்தலும் உண்டு.

முருகன் கிரவுஞ்ச மலையை வெல்லுங்கால் காந்தட் பூச் சூடினான் என்றும், சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்தில் உழிஞைப் பூச்சூடினான் என்றும் கூறுவர்.

**முடி புனைதல்**

பகைவரது மதிலை அழித்த மன்னன் தனது வாளைப் புண்ணிய நீராட்டுவான். முடிசூடித் தானும் புண்ணிய நீராடுவான். முடிபுனைந்த நாளை ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாடுவான்.

**நாட்கோள்**

படை எடுக்க விரும்பும் மன்னர் நன்னாளும் நன்முழுத்தமும் அறிந்து தொடங்குவர். அந்நேரத்தில் அரசனும் உடன் செல்ல முடியாதிருந்தால் தனக்கு மாறாகத் தன் குடையையாவது, வாளையாவது புறவீடு விடுவான். அது நாட்கோள் எனப்படும்.

**நெடுமொழியும், வஞ்சினமும்**

படைவீரர்களான மறவர்கள் தம் அரசர் முன்னும் பகை மறவர்களின் முன்னும் நெடுமொழி (தற்பெருமை) கூறிக் கொள்வர். தனது மாமன்னனுக்குத் தன்னுடைய மேம்பாட்டை வீரன் ஒருவன் தானே எடுத்து உரைப்பது நெடுமொழி கூறல் எனப்படும். மன்னர்கள் போர் தொடங்கும் முன் வஞ்சினம் மொழிவர். வஞ்சினம் என்பது 'இன்னது செய்வேன் நான். அவ்வாறு செய்யேனாயின் இன்னன் ஆகுக' என்று வலிய சினத்தில் கூறும் சொல் ஆகும்.

**பகைநாட்டழிவு**

வஞ்சியார் எனப்படும் வஞ்சி மாலை அணிந்த வீரர்கள் பகைவரது நாட்டு எல்லையுள் புகுந்து போருக்கு அடியிடுவர். ஊரை நெருப்பிட்டுக் கொளுத்துவர். ஊர் மனைகளில் கொள்ளையும் இடுவர். கரும்பும், நெல்லும் செழித்த வயல்களில் நெருப்பு மூட்டி அழிப்பர். நீர்த்தேக்கி வைத்த குளம் முதலியவற்றின் கரைகளை உடைத்துவிடுவர். உழிஞை மறவர் பகைவரது கோட்டைகளை இடித்துத் தரை மட்டமாக்கிக் கழுதை ஏர்க் கொண்டு உழுவர், கவடு விதைப்பர். மற்றொரு வகையில் இரு திறத்து மன்னரும் தும்பைப் பூச்சூடி போருக்குச் செல்லுங்கால் போர் ஊருக்குள் நடைபெறாமல் குறிப்பிட்ட ஒரு போர்க்களத்தில் நடைபெறும். இரு திறத்துப் படைகளும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும் இரு திறத்தாருக்குமே மிக்க அழிவு ஏற்படும்.

**பாசறை நிலை**

வஞ்சி மறவர்களது படை பகைவர்நாட்டில் புகுந்து ஊர் எல்லையில் தங்கும். அரசன் தங்குவதற்குப் பசிய மூங்கிலால் அறை வகுப்பர். (பசுமை+அறை=பாசறை) அதனைச் சுற்றி மறவர்கள் தங்குவதற்குத் தழைகளை வெட்டி மேற்கூரையாக இட்டுச் சிறுசிறு அறைகள் வகுக்கப்படும். அங்கே ஊரில் வாழ்வது போன்ற எல்லா அமைப்புகளும் இருக்கும். எனவே அது புதிதாகக் கட்டப்பட்ட

ஊரைப் போலவே காணப்படும். இது கட்டூர் எனப்படும். (கட்டு + ஊர் = கட்டூர், பாசறை) ஒரு பக்கம் யானைகள் முழங்கும்; ஒருபக்கம் ஆடல் பாடல் மகளிரின் கூத்து நடக்கும். பாசறையில் தங்கியுள்ள மன்னனுக்குப் பகைவர்த் திறையளிப்பர். பாசறை மன்னன் தம் மறவர்க்குப் பெருஞ்சோறளித்தலும் உண்டு. போர்க்களம் புகுந்த மறவர் நெடுநாள் பாசறையில் தங்கியிருந்து போரிட்டு வருவர். அப்போது அவர்களுக்கு வழங்கும் உணவு அளவுக்கு உட்பட்டே இருக்கும். அந்நாட்களில் ஒரு நாள் மன்னன் மறவர்க்கு உணர்ச்சி பெருகுதல் வேண்டிக் கறிவிரவிய பெருஞ்சோற்றுத்திரள்களை அளிப்பான், இதுவே பெருஞ்சோறு எனப்படும்.

**மகள் மறுத்தல்**

வஞ்சி மன்னன் பகை மன்னர்களிடம் மகள் வேண்டுவான். காஞ்சியார் மகளைக் கொடுக்க முடியாதென மறுத்துப் பேசுவர். உழிஞை மறவன் மகள் வேண்டுவான்; நொச்சி மன்னன் மகள் தர மறுப்பான். உழிஞை வேந்தன் நொச்சியினது மகளைக் கேட்பான்; நொச்சியான் மகள் தர மறுப்பான். இவ்வாறான காரணங்களுக்காகப் போர் நடைபெற்றலும் உண்டு.

**உயிர் நீத்தல்**

போரில் விழுப்புண்பட்ட மறவன், மீண்டும் உயிர் வாழ விரும்பாமல் தன் புண்ணைத் தானே வேலால் கிழித்துக் கொண்டு உயிர் நீப்பதும் உண்டு. போரில் தனது அரசன் இறந்ததைக் கண்டு தாமும் உடன் இறப்பதற்காகச் சில மறவர்கள் உயிர் விட்டலும் உண்டு. சில மறவர்ச் செஞ்சோற்றுக் கடன் வாய்ப்பதற்காகத் தமதுயிரை அவியாக (பலியாக) இடுதலும் உண்டு.

**போர்ப்படை**

போரிடுங்கால் யானை, குதிரை, தேர் என்பன கையாளப்படும். மறவர் இவற்றை இயக்கியும் இவற்றின் மீது அமர்ந்து கருவி கொண்டும் போரிடுவர். படையின் முதற்பகுதி தூசிப்படை அல்லது தார் எனப்படும். வில், அம்பு, வாள், குந்தம், ஆழி, வேல் முதலிய கருவிகள் போரில் பயன்படுத்தப்படும். கருவிகள் தம்மீது பாயாமல் பொருட்டுக் கிடுகு (கேடயம்) கையாளப்படும். கருவிகளில் வேல் என்பதே முதன்மையானது.

**போரின் இசை கருவி**

துடி, முரசம், வளை, வயிர் போன்ற இசைக்கருவிகள் முழங்கும்.

**வேட்டுவர் போர்முறை அறப்போர்முறை**

வேட்டுவர் போர்முறை அறப்போர் முறையாகும். வஞ்சகம், சூழ்ச்சி இல்லாத நேர்மையானதாக இருந்துள்ளது. போரில் எதிரிகளுக்கு இரங்கும் நெஞ்சம் உடையதாக, எதிரிகளுக்குத் தக்க வாய்ப்பளிக்கும் போக்கினதாக அமைந்திருக்கிறது. இன்று போய் போருக்கு நாளை வா என்று இராவணனை அனுப்பிய இராமனின் உள்ளம் போர்ப் பண்பாட்டினை வழிப்பட்டதாகக் கம்பரால் வரையப் பெற்றதாகும்.

**சங்ககாலம் (சுமார்க் கி.மு. 500 - கி.பி. 200)**

மனிதகுலம் கற்களும், கம்புகளையுமே முதன்மை ஆயுதமாய் பயன்படுத்திய காலம் மாறி இரும்பால் பல உற்பத்தி கருவிகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்திய காலம் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. சங்க நூல்களை ஆராய்ந்து, பல்வகைப்பட்ட ஆயுதங்களைப் பண்டைய காலத்தில் மக்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். குறிப்பாக,

வேட்டுவர்கள் போர்க் கருவிகளை உருவாக்கி, அவற்றைப் பயன்படுத்திடக் கற்றுக் கொணடனர். வேட்டுவர்கள் போர் அறிவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தமைக்கான சான்றுகள் பண்டைய சங்க நூல்களின் மூலமாகக் கிடைக்கப் பெறுகின்றன.

வேட்டுவர்கள் தொல்காப்பிய காலந்தொட்டே போர்க் கருவிகளைக் கையாள்வதிலும், அவற்றை வடிவமைத்துக் கொள்வதிலும் பழக்கமுடையவராக இருந்துள்ளனர். பாதுகாப்பு கருதியே மன்னர்கள் போர்ப்படைகளை வைத்திருந்தனர்.

இம்மன்னர்கள் பொன், பொருள், நிலம், பாதுகாப்பு முதலானவற்றில் ஏதேனும் ஒரு காரணம் பற்றிப் போர்த் தொடங்குகையில் ஊருக்கு அல்லது வீட்டிற்கு இத்தனைபேர் என்ற நிலையில் ஆண்கள் போரில் கலந்து கொண்டனர்.

**படைகள்**

நான்கு வகைப் படைகள் - மன்னர்களால் அமைக்கப் பெற்றிருந்தன.

களிறு, தேர், நடைநவில் புரவி ஆகிய நாற்படைகளைக் கொண்டிருத்தல் அரசரின் இலக்கணமாகிறது.

**அடையாளச் சின்னங்கள்**

படை, கொடி, குடை, முரசு, தார் (மாலை), முடி(மணிமுடி), செங்கோல் முதலியன மன்னர்க்குரிய மற்ற அடையாளச் சின்னங்களாகும். இவற்றுள் குடை, முரசு ஆகியன போர்க் கருவிகளாகக் கொள்ளத்தக்கனவாகும். எனவே நாற்படை உடைய அரசன் அப்படைகளைப் பெருக்கி, மக்களை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழி செய்ய வேண்டிய கடமை உடையவனாக விளங்க வேண்டும் என்பது தொல்காப்பியர் காலத்திலேயே மன்னர்க்குரிய முறையாக இருந்தது.

**வேட்டுவரின் முப்போர்க்கருவிகள்**

வேட்டுவர்கள் மூன்று போர்க் கருவிகளை முதன்மையானதாகக் கையாண்டு வந்துள்ளனர். அவை வாள், வில், வேல் என்பனவாகும். இவற்றுள் வாள் என்னும் போர்க்கருவி நெருங்கி நின்று போர் செய்கையில் பயன்படுத்தப்படுவதாக இருந்துள்ளது. வில்லும், வேலும் பகைவரைத் தூரத்தில் இருந்து தாக்கப் பயன்பட்டுள்ளது. இம்முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில கருவிகளும் வேட்டுவர்களால் பயன்படுத்த பட்டுள்ளன.

**பண்டைய காலத்தில் போர் ஆயுதங்கள்**

அடார், அம்பறாத்துணி, அம்பு, அரம், அரிவாள், ஆயுதக்கம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளகடி கருவி (தட்டை), குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை யெஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேல், வேலுறை (பக்க 82 - புறநானூறு, கழகம் உரை) போன்றவைப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வேல், வாள், வில், அம்பு, கோல் ஆகியவைச் சங்ககாலப் படைக்கலங்கள். வேலும் வாளும் எஃகினால் செய்யப்பட்டதால் எஃகம் எனப்பட்டன.

வேல்வடித்துத் தருவதற்கெனக் கொல்லர்கள் இருந்தனர். வாள் தகுந்த உறைகளில் இடப்பட் டிருந்தது. மன்னனின் வாள் நுண்ணிய அழகிய வேலைப்பாடுகளையும் விலையுயர்ந்த கற்களையும் உடையதாயிருந்தது. அம்பு அறாத் தூணியில் அம்புகள் வைக் கப்பட்டிருந்தன. சுற்றி எறியவல்லக் கனமான திகிரி (சக்கரம்), கவண் ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன.

கொல்லிமலைத் தலைவன் வேட்டுவ மன்னன் ஓரி, அம்பு எய்வதில் வல்லவனாதலின் வல்வில் ஓரி எனப்பட்டான். பல வேல்களை ஒருங்கே வீசுவதில் வல்லவனாதலின் பெருநற்கிள்ளி என்ற சோழ அரசன் பல்வேல் தடக்கை என்ற சிறப்புப் பெற்றிருந்தான்.

மேற்கூறப்பட்ட ஆயுதங்களைச் சமாளிக்கத்தக்கக் கேடயங்கள் இருந்தன. அவை இரும்பினாலும் தோலினாலும் செய்யப்பட்டன. உடலில் போர்த்திக் கொள்ளும் கவசமும் இருந்தது.

சங்க காலத்தில் வேல், வாள், வில், அம்பு முதலியன சிறந்த போர்க்கருவிகளாக இருந்தன.

வளைந்து தானே எய்யும் இயந்திர வில், கரிய விரலையுடைய குரங்கு போல் இருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி, கல்லை உமிழும் கவண், காய்ந்து இறைத்தலால் சேர்ந்தாரை வருத்தும் நெய், செம்பை உருக்கும் மிடா, உருக்காய்ச்சி அறிவதற்கு எஃகு பட்டிருக்கும் உலைகள், கல் இட்டு வைக்கும் கூடை, தூண்டில் வடிவாகச் செய்து விடப்பட்டு வைத்து மதில் ஏறும் எதிரிகளைக் கோத்து வலிக்கும் கருவி, கழுக்கோல் போலக் கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கலி, ஆண்டலைப்புள் வடிவாகப் பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி வரிசைகள், மதில்மேல் ஏறுவோரை மறியத் தள்ளும் இருப்புக்கவை, கழுக்கோல், அம்புக்கட்டு, ஏவறைகள், சிற்றம்புகள் வைத்து எய்யும் இயந்திரம், மதிலின் உச்சியைப் பிடிப்பவர் கைகளைக் குத்தும் ஊசிப் பொறிகள், பகைவர் மேல் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப்பொறி, மதில் உச்சியில் ஏறினர் உடலைக் கொம்பால் கிழிக்க இரும்பால் செய்து வைத்த பன்றிப் பொறி, மூங்கில் வடிவாகப் பிண்ணி அடிப்பதற்கு அமைத்த பொறி, கதவுக்கு வலிமையாக உள் வாயிற்படியில் நிலத்தில் விழவிடும்

மரங்கள், கணைய மரம், விட்டேறு, குந்தம், ஈட்டி, நூற்றுவரைக் கொல்லி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப் பொறி, தகர்ப் பொளி, ஞாயில் (குருவித்தலை)

மேலும் போர்க்கருவிகள் தம்மை ஊறு செய்யாவண்ணம் காக்கக் கரடித்தோல் மற்றும் புலித்தோலாற் செய்யப்பட்ட கேடயமென்னும் கருவிகளைப் பயன்படுத்தியதாக கந்தையாப்பிள்ளைக் குறிப்பிடுகின்றார் (தமிழகம், பக்.176).

**வாள்**

வாள் என்பது ஆண்கல் மிகுதியாகப் பயன்படுத்தும் போர்க்கருவி என்றாலும், அதனைப் பெண்களும் கையாண்டுள்ளனர்.

**வேல்**

வேல் முருகக் கடவுளின் போர்க்கருவியாகச் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. வேல் என்னும் போர்க்கருவி அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வில், அம்பு**

அம்புறாத்தூணி இவை மூன்றும் அமைந்த கூட்டுக் கருவியாகத் தமிழர்கள் வில்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

**படைக்கலக் கொட்டில்**

தொழிற்கூடம் சங்ககாலத்து வேட்டுவார்கள் போர்க் கருவிகளைப் பெரும்பாலும் இரும்பால் செய்து கொண்டனர். அவற்றைப் புதிதாக உருவாக்கிட, சீர்ச் செய்ய உலைக் கூடங்களை அவர்கள் அமைத்துக் கொண்டனர்.

**படைவீடு**

போரில் வெற்றிப் பெற்ற பின் வென்ற வீரர்கள் தோற்ற நாட்டில் படைவீடு அமைத்துத் தங்குவர். அந்தப் படைவீடு உறுதி ஒழிந்த, சிதைந்த போர்க் கருவிகள் கொண்டு கட்ட பெற்றிருக்கும். உடைந்த போர்க் கருவிகளின் பகுதிகள் தூணாக மாற்ற பெற்று, கயிற்றால் அவை இறுகப் பிணைக்கப் பெற்று குந்தம், கிடுகு முதலானவைத் தடுப்புச் சுவர்களாகவும் துணிகள் கூரைகளாகவும், அமைக்கப் பெற்றிருக்கும்.

**தொல்காப்பியம் காட்டும் பண்டைய போர்கள்**

தமிழுலகில் முதலிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பண்டைப் போர் பற்றி பல கருத்துக்கள் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதிக்கு ஏற்பவே போர்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதை 'புறத்திணையியல்' எனும் இயலின் வழியாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

உதாரணமாக,

1. மலையும், மலைச் சார்ந்த பகுதிகளிலும் (குறிஞ்சி) ஆநிரைகளைக் கவர்தல், அதனை மீட்டலுக்குமான போர்கள்.

2. காடும், காட்டைச் சார்ந்த பகுதிகளிலும் (முல்லை) தன்னை மதியாத வேந்தனை எதிர்த்தும், காட்டு வளம் மீது கொண்ட ஆசையின் பொருளாலும் நிகழ்ந்தன போர்கள்.

3. வயலும், வயலைச் சார்ந்த பகுதிகளிலும் (மருதம்) எயிலை (கோட்டை) முற்றுகையிட்டு நாட்டைக் கைப்பற்றுதலும், எயிலை (கோட்டை) காத்துத் தம் நாட்டைப் பாதுகாத்தலுக்குமான போர்கள் நடந்தன.

4. கடல், கடல்சார்ந்த மணற்பகுதிகளில் (நெய்தல்) வலிமைக் குறித்தப் போர்கள் - என நான்கு வகைப் போர்கள் நிகழ்ந்ததாகத் தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

போர் முறையின் அடிப்படையிலேயே சங்க இலக்கியத்துள் பல பாடல்கள் காணப்படுகின்றன. பண்டைய சமூகச் சூழலையும், போர் பற்றியும், தமிழகத்தை ஆண்ட மன்னர் பற்றியும், வரலாற்றுக் கருவூலம் ஆகும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து மற்றும் அகப்பாடல்கள் வழியாகவும், தொல்பொருள் ஆராய்ச்சிகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், மெய்கீர்த்திகள், நாணயங்கள், பயண குறிப்புகள், ஆவணங்கள் என பலவற்றிலும் பண்டைய வேட்டுவர் சமூகத்தின் போர், அதன் முறைகளைப் பலவற்றையும் காண முடியும்.

**பண்டைய போர் மரபுகள்**

பண்டைக் காலத்தில் சில வரையறைகளோடு போர்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் போருக்குச் செல்வோர்,

குறிப்பட்ட பூக்களைச் சூடுதல் மரபாக இருந்துள்ளது. ஒவ்வொரு மன்னனும் ஒரு குறிப்பிட்ட பூவைச் சூடி போர்புரிவது மரபு. பூக்களைச் சூடி போரிடும் மரபைக் கொண்டிருந்தனர்.

**உண்டாட்டு**

*உண்டாட்டு நிகழ்த்துதல் வேந்தன் மரபு*

‘கள்’ வழங்கும் பழக்கம் இருந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் “உண்டாட்டு” என்கிறார். அதாவது வெட்சித்திணையில் போர் முடிவுற்ற காலத்தில் ஆநிரைகளைக் கவர்ந்து வந்தோர் பங்கிட்டுக் கொண்டு உண்டாட்டு (அதாவது மது குடித்தல்) நிகழ்த்துதல் மரபாக இருந்துள்ளது.

**ஊன்சோறு**

போர்க் காலத்தில் மறவர்க்கு ஊன்சோறு தருவதும் வழக்கமாக இருந்துள்ளது. அரசன், மறவனென இருவருக்கும் ஒரே வகையான சோறு இடுதல் மரபாக இருந்துள்ளது.

“ஊன் துடி அடிசில் - ஊனும் அரிசியும் குலைய சமைத்த புலவு”(பக். 155, பதிற்றுப்பத்து, புலியூர்கேசிகன் உரை) என்று குறிப்படுவதைக் காணலாம். அதே,

“கூதிர் வேனில் என்றிரு பாசறை (தொல். நூ. 1022) என்ற வழியும், இடைப்புலம், இடைச்சுரம், நாட்டு” - போர் நிகழும் இடம் (பக். 177, புறம் - IIC கழகம்) என்ற வழியும் கூதிர்க் காலம், வேனிற் காலத்தில் பாசறை அமைத்துப் போர் புரிந்துள்ளனர்.

மழைகாலத்தில் போர்கள் நிகழ்ந்த குறிப்புகளில்லை. காலத்தை ஆராய்ந்து போர்க்காலங்களைத் தேர்ந்தெடுத்தனர் என்பதும் புலனாகிறது.

**போரில் விழுப்புண்**

போரில் விழுப்புண்ணோடு இறப்பதே பெருமையென எண்ணினர். அதனால் இறந்தே குழந்தைப் பிறந்தால் கூட வாளால் கீறியே புதைப்பதை வழக்கமாகக் கொண்டதை, “குழவர் இறப்பினும் ஊன் தடி பிறப்பனும் ஆள் அன்று என்று வாளில் தப்பார்” (புறம்.பா.74) என்று குறிப்பிடப்பட்டதும், அத்திணையிலேயே போருக்குச் செல்லும் கரந்தை வீரர்கள் உன்ன நிமித்தம் பார்த்ததாகக் குறிப்பு காணப்படுகிறது.

உன்னம் - ஒருவகை மரம்; அது நல்லதாயின் தளிர்த்தும் - தீயதாயின் உதிர்ந்தும் காணப்படும் (பக். தொல். தி.சு.பா.) என்பர். இது மரபாக இருந்திருக்கிறது.

“உன்ன மரம்... உன்னம் வாடித் தோன்றினாலும் பொருட்படுத்தாது சென்று வெற்றிப் பெற்றுத் திரும்பும் ஆற்றலைப் பாரி பெற்றிருந்தான்”.

**சங்ககாலச் சமுதாயம் :**

சங்ககாலத்தின் தொடக்கப் பகுதியில் வேள் பாரி, வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, அதியமான் போன்ற சிற்றரசர்களும், ஊர்த்தலைவர்களும் மிகுதியாக இருந்தனர். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக இவர்களை அழித்துச் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் செல்வாக்குப் பெற்றனர். இந்த மாற்றத்தைச் சங்கப்பாக்கள் தெளிவாகக் காட்டுகின்றன. மூவேந்தர்களும், சிற்றரசர்களுடன் போரிட்டது நாட்டைக் கொள்ளைக் கொள்வதற்காக என்றால், சிற்றரசர்கள், தங்களுக்குள் அப்பெரு வேந்தர்களின் (ஆதரவு வேண்டி) போரிட்டனர்.

புறநானூற்றில் சில பாக்கள் மூவேந்தர்கள் பிற சிறுவேந்தரை ஆக்கிரமித்ததைக் கூறுகின்றன. ஆக்கிரமிப்பவர்கள் சார்பாகவே விதிகள் வகுக்கப்படுவதும், வரலாறு எழுதப்படுவதும் காலங்காலமாக நாம் காணும் உண்மை. எனவே ஆக்கிரமிப்பவர்கள் சார்பாக ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை என்று கொள்கையே வகுக்கிறார் இடைக்குன்றுர்க் கிழார்.

இது நெடுஞ்செழியன் என்ற பெரும் வேந்தனுக்கெனப் பாடப்பட்ட (புறம்-76ஆம் பாட்டு). அதாவது உலகில் இயற்கையாகவே ஒருவனோடு ஒருவன் போரிடுவதும் ஒருவனை ஒருவன் கொல்லுவதும் நடைபெற்று வருகிறது என்பது பொருள்.

**படைப்பரிவுகள் :**

**அரசனுக்கு இருக்கவேண்டிய அங்கங்கள் ஆறு**

முதலாவதாகக் கூறப்படுவது

1) படை, 2)குடிமை, 3)கூழ், 4)அமைச்சு, 5) நட்பு, 6) அரண் என்பவையாகும்.

வேட்டுவ மன்னர் யாவரும் படை வைத்திருந்தனர் என்பதை

உணரலாம். யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப்படைகளோடு கப்பற்படையும் இருந்தது.

சங்ககாலத்திலிருந்தே இந்தியாவில் தமிழ் மக்கள் மட்டுமே கப்பற்படை வைத்திருந்தனர். யானைப்படை( யானை வேட்டுவர்) மிக இன்றியமையாத ஒன்று. ஆனால் முன்னணிப் படையில் பயன்படுவதில்லை. பின்னால் சென்று எதிரிகளைப் பெரிய எண்ணிக்கையில் அழிக்கவும், அரண்களை உடைக்கவும் யானைகளே உதவும். அரசனும் முதன்மையான படைத் தலைவர்களும் யானை மீது சென்றனர். எண்பேராயத்தின் உறுப்பினர்களில் ஒருவர் யானை வீரர். இவரை யானைப்படைத் தலைவர் எனக் கருதமுடியும். யானைகளுக்கு மதுவூட்டி வெறியேற்றி அழைத்துச் சென்றனர். வலிமைமிக்க கோட்டை வாயில்களைத் தாக்கி உடைப்பதற்கு யானைகளைப் பயன்படுத்தினர்.

**குதிரைப்படை (பரி படை வேட்டுவர் )**

விரைந்து தாக்குவதற்குரியது. எனவே முன்னணிப் போரில் அதன் பயன் மிகப் பெரிது. எண்பேராயத்தின் உறுப்பினர்களில் இன்னொருவர் இவுளி மறவர். இவரைக் குதிரைப்படைத் தலைவர் எனக் கருதலாம்.

போருக்கான குதிரைகள் எப்போதுமே அரபு நாட்டிலிருந்துதான் நம் நாட்டிற்கு இறக்குமதியாயின. பாண்டிய வேட்டுவ அரசன் 4000 குதிரை வீரர்களை வைத்திருந்ததாக மெகஸ்தனிஸ் (கி.மு.4ஆம் நூற்றாண்டு) கூறுகின்றார். ஆனால் அக்காலத்தில் குதிரைகளுக்கு இலாடம் அடித்துப் பயன்படுத்தாமையால் ஏராளமான குதிரைகள் விரைவில் இறந்துவிட்டன என்றும் தமிழர்களுக்குக் குதிரைகளைச் சரிவரப் பயன்படுத்த தெரியவில்லை என்றும் வாசக் கூறுகிறார்.

தேர்ப்படையும் பழங்கால மன்னர்களுக்கு உண்டு. இளஞ் சேட் சென்னி என்ற சோழன் பல அழகிய தேர்களை உடையவன் என்று அவன் பெயரிலிருந்தே தெரிகிறது. அக்காலத்தில் தேர்செய்யும் தச்சர்கள் சிறப்பாக மன்னனால் பணியமர்த்தப் பட்டிருந்தனர். தேர்கள் குதிரைகளால் இழுக்கப்பட்டன.

காலாட்படையில் மறவர், எயினர், மழவர், மள்ளர், பரதவர், மலையர், ஒளியர், கோசர்ப் போன்ற பல இன வீரர்கள் இருந்தனர். யவனர்களும் படைவீரர்களாகப் பணியாற்றினர். மழவர்கள்

அடிக்கின்ற கோலுக்கு அஞ்சாது மேன்மேலும் சீறிவருகின்ற நாகம் போல அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள் என்று இலக்கியங்கள் சிறப்பிக்கின்றன.

**மூலப்படை (மூல வேட்டுவார்)**

அறுவகைப் படையுள் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் படை (குறள். 762, உரை.) (சுக்கிர. 303.)

முன்னணிப் படைப்பிரிவு தூசிப்படை (தூசிப்படை வேட்டுவர்) எனப்பட்டது. இறுதியாக வரும் படைக் கூழைப்படை (கூழைப்படை வேட்டுவர்) எனப்பட்டது.

கடல் வாணிகத்திற்குப் பாதுகாப்பளிக்கவும், கடற் கொள்ளைக்காரர்களை அழிக்கவும் கப்பற்படை பயன்பட்டது. கரிகாலன் இலங்கைமீது படையெடுத்துச் சென்று கைதிகளைப் பிடித்து வந்ததற்குக் காரணம், அவனிடம் வலிமைமிக்கக் கப்பற்படை இருந்தமையே. கடல் அரண் அமைத்துக் கடற்கொள்ளையில் ஈடுபட்ட கடம்பர்களை ஒழித்துக் 'கடல்பிறக்கோட்டிய' என்னும் சிறப்புப் பெற்றான் சேரஅரசன் செங்குட்டுவன்.

**போர் நடவடிக்கைகள் :**

போரைத் தொடங்குவதெனத் தீர்மானித்தவுடன் படைக்கான போர்வீரர்களைத் திரட்டுவதற்குத் தூதுவர்களை அனுப்புவது வழக்கம். சிலப்பதிகாரம் முதலிய பிற்கால இலக்கியங்கள் இதனைக் குறிப்பிடுகின்றன. மறவர், எயினர், மழவர்ப் போன்றவர்கள் போரில் சேர்ந்தனர். படைப் புறப்படுவதற்கு முன் நன்நிமித்தங்கள் பார்க்கப்பட்டன. படை புறப்படுவதற்கு முன்னர் நல்ல நாளில் வாளைப் புனித நீராட்டி குடை, முரசு ஆகியவற்றுடன் அணிவகுப்பு நடத்தினர். இதனை நாட்கோள் என அழைத்தனர். மன்னர்கள் தங்கள் மரபிற்குரிய மாலைகளைச் சூடினர். மன்னனின் வெண்கொற்றக் குடையும், கொடியும், முரசும் முன் கொண்டு செல்லப்பட்டன. கொற்றவை மற்றும் போர்க்கடவுளரின் அருளை வேண்டினர். முரசுகள் ஒலித்தன.

**பாசறை :**

போர்க்களத்தில் போர் நடைபெறாத சமயத்தில் போர்த் தளபதிகளும் (பாசறை வேட்டுவர்) மன்னனும் தங்கியிருக்கும் இடம் பாசறை எனப்பட்டது. பாடிவீடு என்று சொல்வர். பாசறையில் தங்கியிருக்கும் மன்னனுக்குப் பணிபுரியப் பெண்கள் இருந்தனர்.

சட்டை அணிந்த யவனர்கள் மெய்க்காவலர்களாக இருந்தனர். மொழி தெரியாதவர்களை மெய்க்காவலராகக் கொள்வது பாதுகாப்பு என்று அக்காலத்தில் கருதியிருக்கலாம்.

நேரத்தை அறிவிக்கும் நாழிகைக் கணக்கர் இருந்தனர். அரசன் காயம்பட்ட வீரர்களைக் கண்டு ஆறுதல் உரைப்பதும் வழக்காக இருந்தது. அரசன் பாசறையைப் பார்வையிடும்போது படையின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் வீரர்கள் புண்பட்டோர்களைக் காட்டி விளக்கம் தருவது வழக்கமாக இருந்தது.

**கோட்டை :**

தலைநகரங்களைச் சுற்றிக் கோட்டைகட்டிப் பாதுகாப்பது அக்கால வழக்கம். கோட்டைச் சுவர்கள் உயரமாக இருந்தன. அவைச் செங்கற்களால் கட்டப்பட்டு மண்ணால் பூசப்பட்டன. கோட்டையைச் சுற்றி அகழிகள் உண்டு. அகழிகளைச் சுற்றிலும் காவற்காடு என்ற சிறிய காட்டைச் சில மைல் தொலைவுக்குப் பாதுகாப்புக்கென அக்காலத்தில் அமைத்தனர்.

கோட்டை முற்றுகைப் போர் அக்காலப் போர்முறைகளில் ஒன்று. கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு எவ்வித உணவுப் பொருளும் செல்லாமல் அவர்களைப் பட்டினி போட்டுப் பணிய வைக்க முயற்சி செய்வர். நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையிலிருந்த போது நலங்கிள்ளி அக்கோட்டையை முற்றுகையிட்டமை தெரிகிறது. பாரியின் பறம்புமலையை மூவேந்தரும் முற்றுகையிட்ட போதும் பட்டினிபோட்டுப் பணியவைக்க இயலவில்லை. வஞ்சக்கத்தால் பாரி கொல்லப்படான்.

ஆகவே பேரரசர்கள் உருவானபோதே வஞ்சகத்தினால் செய்யும் போர்முறையும் வந்துவிட்டது என்று கருதலாம்.

**நடுகற்கள் :**

நாட்டிற்காகப் போரிட்டு இறப்பது உயரிய பண்பு எனக் கருதப்பட்டது. போரில் புறமுதுகிடுவதும், முதுகில் புண்படுவதும் இழுக்கு எனக் கருதப்பட்டது. போரில் இறந்துபட்ட வீரர்களின் பெயரால் அவர்தம் உறவினர்களுக்கு ஊர்கள் பரிசளிக்கப்பட்டன. போரில் இறந்த வீரனுக்கு நடுகல் நடுவது வழக்கம். அக்கல்லில் அவ்வீரனைப் பற்றிய குறிப்புகள் பொறிக்கப்பட்டன.

போரில் பட்ட காயங்களை விழுப்புண்கள் எனப் போற்றினர். போரில் காயமுற்றோரைப் பேண மனைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதற்கு அடையாளமாக அங்கு வேப்பந்தழைகள் செருகப்பட்டிருக்கும். அவர்களுக்கு மருந்து அளிக்கப்பட்டதோடு மனச்சோர்வு நீக்க இசையும் இசைக்கப்பட்டது.

போரில் பகையரசர்களின் அரசுச் சின்னங்களான முரசு, குடை ஆகியவற்றைக் கவர்தல், காவல் மரத்தை வெட்டி வீழ்த்தல் போன்றவை நிகழும். நெடுஞ்சேரலாதன் கடம்பர்களின் காவல்மரத்தை வெட்டிவீழ்த்திய வீரச்செயல் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளது.

**வேட்டுவர் போரியல்**

1.மூலப் படை = தினம் பயிற்சி செய்து கொண்டு நெடுங்காலமாக நிலைத்துள்ள சேனை.

2 படையின் முதற்பகுதி தூசிப்படை அல்லது தார் எனப்படும்.

3 . உரிமைப் படை = மானியம், உண்பளம் பெற்று அதன் காரணமாகப் போர் நேர்ந்த காலத்து அரசனுக்காகப் போரிடும் சேனை.

4. கூலிப் படை = போர்க்காலத்தில் மட்டும் கூலிக்காகப் பணியாற்றும் சேனை.

4. துணைப் படை = நட்புக் காரணமாகப் போரில் உதவும் சேனை.

5. அமயப் படை = அவசர நிலையில் சேர்க்கப்படும் சேனை. இது புதுப்படை எனவும் படும்.

6. வன் படை = நாட்டுப்பற்றால் ஏற்பட்ட மன எழுச்சி காரணமாக அமையும் சேனை.

7. பயிற்சிப் படை = போர்ப் பயிற்சி கற்ற சேனை.

8. பயிற்சியில் படை = பயிற்சி பெறாத-உணர்ச்சியுள்ள மைந்தர்க் கூட்டம்.

9. குழுப்படை = மன்னன் அமைத்த தலைவனையுடைய சேனை.

10. தனிப்படை = தலைவனை இன்றித் தாமாகவே இயங்கும் சேனை.

11. கருவிபெறு படை = அரசனால் வழங்கப்படும் போர்க் கருவிகளைப் பெற்று விளங்கும் சேனை.

12. தற்கருவிப் படை = தத்தம் போர்க் கருவிகளைக் கொண்டு பொருதும் சேனை.

13. ஊர்திப் படை = காவலனால் தரப்பட்ட வாகனங்களில் ஏறிப் போர்ப் புரியும் சேனை.

14. தன் ஊர்திப் படை = தத்தம் வாகனங்களில் ஏறிப் போர் புரியும் சேனை.

15.பரி படை = குதிரைகள் கொண்ட சேனை.

16. பகைவிடு படை = பகைவனை விட்டு வந்து தம்பாற் கூடிய சேனை

**போர் அறிவிப்பு**

ஒருமன்னன் பகைவரோடு போரிடக் கருதுவானாயின், கருதியவுடன் படை எடுக்க மாட்டான். தனது கருத்தைப் பகைவரது நாட்டார்க்குப் பறையறைந்து தெரியப்படுத்துவான். அப்போது "ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பணியுடையீரும் தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வரைப் பெறாதீரும் எம் அம்பு கடி விடுதும் நும்மரண் சேரும்", என்று அறிவிக்கப்படும். இதனால் தமிழர் போர் தொடங்கும் போது அற நெறியுடன் தொடங்கினர் என அறியலாம்.

"பலிபெறு நன்னகரும் பள்ளியிடனும்
ஒலிகெழு நான்மறையோர் இல்லும்- நலிவொரீஇப்
புல்லா; இரியப் பொருநர் முனைக் கெடுத்த
வில்லார்க்கு அருள் சுரந்தான் வேந்து." (1)

போர் நடக்கும் நாட்டில் மறவர்கள், பலியிடப்படும் கோவில்களுக்கும், துறவிகள் வாழும் பள்ளிகளுக்கும், வேதவொலி மிக்க அந்தணர்களின் இல்லங்களுக்கும் எந்த நலிவையும் செய்யவில்லை. இவை போன்ற தக்கார் உறையும் இடங்களை நீக்கிப் பிற இடங்களில் போரிட்டுப் பகைவரை வென்றுள்ளனர். அவ்வாறு அறநெறிப்படி போரிட்ட மறவர்களுக்கே மன்னனும் சிறப்பு செய்தான். அதுவே அரசியல் அறமாகக் கருதப்பட்டது.

**இராணுவம்**

1) தேர்ப்படை
2) யானைப்படை
3) குதிரைப்படை

4) காலாட்படை
5) துணைப்படைஏனைய
6) வில்வீரர்
7) வாள் வீச்சு வீரர்
8) வேளைக்காரர் தாக்குதல் அணி
9) மருத்துவ அணி
10) கடற்படை
11) கண்ணிதளம்
12) மண்டலம்
13) கனம் அணிபிரிவு

**படைகளின் தலைமை**

அரசர், பேரரசர், அல்லது கட்டளைத் தளபதி, கடற்படை, உள்நாட்டின் படை ஆகிய அனைத்திற்கும் அரசரே தலைவர் ஆவார். இப்படைப் பல பிரிவுகளாக அமைந்து ஒவ்வொரு பிரிவும் தனிப்பெயரால் அழைக்கப்பட்டது. இவை ஒன்றுபட்ட அமைப்பாகவே இயங்கின. தங்கள் பெயராலேயே கோயில்கள் அமைக்கவும் அவற்றிற்குத் தானங்கள் கொடுக்கவும் இப்பிரிவுகளுக்கு உரிமை இருந்தது. தனிப்பட்ட படை வீரர்களும் இவ்வாறு தானம் செய்தவர்களின் பெயர்களும் அவரைச் சார்ந்த படைப்பிரிவின் பெயர்களும் நமக்குக் கல்வெட்டுக்களின் மூலம் கிடைத்துள்ளன. இப்படைகளின் இராணுவ வாழ்க்கை முறையைவிட, வீரர்கள் தம் தனிப்பட்ட வாழ்க்கையில் செய்த பணிகளைப் பற்றித்தான் அதிகமாக அறியக் கிடைக்கிறது.

ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட இப்படைப் பிரிவுகளின் பெயர்களை இராஜராஜனின் கல்வெட்டுக்களிலிருந்து அறிஞர் திரு.வெங்கய்யா அவர்கள் சேகரித்திருக்கிறார். இவற்றை இராஜராஜனுக்கு முன்னும் பின்னும் இருந்த பிரிவுகளுடன் சேர்த்துக் கணக்கிட்டால் சுமார் 70 ஆக உயரும். இவை ஒவ்வொன்றின் பெயரும், அப்படையைத் துவக்கிய காலத்தையும் சூழ்நிலையையும் மக்களுக்கு நினைவூட்டுவதாய் இருந்திருக்கக் கூடும். இதுவரை நாம் அறியாத அரசர்களின் பல விருதுகளே இவற்றின் பெயர்களாயின. உதாரணத்திற்குப் பார்த்திப சேகரன், சமரகேசரி, விக்கிரமசிங்கன், தாயதொங்கன், தானதொங்கன், சண்டபராக்கிரமன், இராஜகுஞ்சராயன் போன்ற பெயர்களைச் சொல்லலாம்.

**அமைப்பும் நிர்வாகமும்**

சோழர்படை புராதன இந்திய பாரம்பரியமான அறுமடி முறையை அமைப்புக்கும், அறுமடி முறையை நிர்வாகத்திற்கும் பயன்படுத்தினர். சோழப்படையின் வளர்ச்சியைப் பற்றிய பல்வேறு பகுதிகளைப் பற்றியும் இப்பெயர்களிலிருந்தே அறியலாம். "ஆனையாட்கள்" அல்லது "குஞ்சரமல்லர்" என்றும் குறிப்பிடப்பட்ட யானைப்படையைப் பற்றியும் "குதிரைச் சேவகர்" என்று அழைக்கப்பட்ட குதிரைப்படையைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. மற்றும் காலாட்படையின் பல பகுதிகள் பற்றிய குறிப்புகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. நெசவாளர்களைக் கொண்ட பிரிவு "கைக்கோளப் படை" என்று அழைக்கப்பட்டது. இவர்களைக் கொண்ட இப்படைப் பிரிவே சோழர் படையின் முதன்மைப் படையாகத் தொடக்கக் காலம் முதல் இருந்து வந்துள்ளது.

வில்லேந்திய வீரர்கள் "வில்லிகள்" என்று குறிக்கப்படுகின்றனர். வலங்கை வகுப்பைச் சேர்ந்த வேளைக்காரர் என்போர் போர்ப் படையில் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். இலங்கையில் பொலன்னறுவையிலிருக்கும் விஜயபாகு மன்னன் கல்வெட்டில் இலங்கை வேளைக்காரர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இவ்வேளைக்காரர் என்போர் தேவைப்பட்ட போது தற்காலிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட படைச் சேவகர்கள் என்ற கருத்து உள்ளது.

பிற்கால இலக்கியச் சான்றுகள் சில இக்கருத்துக்கு வலிவு தருகின்றன. பிற்காலப் பாண்டிய நாட்டில் பணியாற்றிய "தென்னவன் ஆபத்துதவிகள்" என்போர் இவ்வேளைக்காரரைப் போன்றவரே. இவர்கள் அனைவரும் அரசரின் அருகிலேயே இருந்தனர் என்றும், மிக்க அதிகாரம் பெற்றிருந்தனர் என்றும் மார்க்கோபோலோ குறித்துள்ளார். படைகளுக்குள் சிறுதனம் பெருதனம் என்ற பாகுபாடும் இருந்ததாகக் கல்வெட்டுக்களில் இருந்து தெரியவருகிறது.

அத்துடன் "நடப்பு" என்ற உணவு உடையளிக்கும் பிரிவும், "பயணம்" என்ற கடற்படை நிர்வாக உணவு உடை விடயங்களைக் கவனிக்கும் பிரிவும் காணப்பட்டன. இவ்வாறு படையினுள் காணப்பட்ட பிரிவினால் சோழர்படை புத்தாக்கம் பெற்ற பாரிய வெற்றிகளை ஈட்டக்கூடியவாறு காணப்பட்டது.

சேனை பல தளங்களாகப் பிரிக்கப்பட்டது. சேனை சுய அமைப்பான படையும் தன்னகத்தே வளங்களையும் பொருட்களையும் கொண்டது. தளம் பொதுவாகப் பின்வரும் பிரிவுகளைக் கொண்டது.

1 யானைப்படை - ஒவ்வொன்றும் 300-500 யானைகளைக் கொண்டிருக்கும்.

2 குதிரைப்படை - ஒவ்வொன்றும் 500-1000 குதிரைகளைக் கொண்டிருக்கும்.

3 காலாட்படை - ஒவ்வொன்றும் 2000-3000 வீரர்களைக் கொண்டிருக்கும்.

4 தளப்படை - காலாட்படையும் குதிரைப்படையும் கலந்த துணைப்படை - ஒவ்வொன்றும் 1000-2000 வீரர்களையும் 500-1000 குதிரைகளையும் கொண்டிருக்கும் (இவர்கள் பின்புல பாதுகாப்பு பிரிவாகவும் பின்வாங்கும்போது பதுங்கித் தாக்கும் படையாகவும் பாவிக்கப்படுவர்.)

5 மருத்துவர் அணி - கிட்டத்தட்ட 200-300 மருத்துவர்கள் மருந்துப் பொருட்களை வண்டிகளில் இழுக்கும் குதிரைகளுடன் காணப்படுவர்.

6 ஊசிப்படை - தாக்கும் பரிவு அணி

**படையணி**

படையணிகள் சிறப்பித்துக் காட்டப்பட அவைத் தனிப் பெயர்களால் அழைக்கப்பட்டன. தஞ்சாவூர்க் கல்வெட்டு 33 படையணிகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

**வேளைக்காரப் படை அல்லது வேளைக்காரர்**

அரசனின் படையணியிலுள்ள காவல் படையணியாகும். ஸ்டெயின் போன்ற வரலாற்றாளர்கள் சிலர்க் கருத்துப்படி, இவர்கள் சாதாரண மக்களாயிருந்து போர்க்காலத்தில் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் தேசிய காவலாளிகளாக இருந்திருக்கலாம் என ஸ்டெயின் கருதுகிறார். இவர்கள் மகாவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதன்படி, சிங்கள அரசு சோழ அரசுக்கு எதிராக இவர்களைப் பயன்படுத்த முற்பட்டது. பின்னர் இவர்கள் கலகம் செய்ததும் கலைக்கப்பட்டனர்.

### கோட்டைக் காவற்படைகள்

நாட்டில் தங்கியிருந்த கோட்டைக் காவற்படைகளும் அவர்களின் பாளையமும் "கடகம்" எனப்பட்டது. பாண்டிய நாட்டுடன் ஏற்பட்ட குழப்பத்தின் பின் முதலாம் குலோத்துங்க சோழன் தன் படையினரைப் பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டிற்கும் இடையேயான பிரதான பாதையில் படைக் குடியேற்றங்களை ஏற்படுத்தி நிறுத்தினான். அவ்வாறான குடியிருப்புக்களில் இரண்டு தமிழ்நாட்டின் தென் ஆற்காட்டிற்கு அருகிலுள்ள மடவிலாகத்திலும் மற்றது கோட்டாறிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

### ஆட்சேர்ப்பு

ஆட்சேர்ப்பு எவ்வாறு நடைபெற்றது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆயினும், படைவீரர்களின் வாரிசுகள் தங்களைப் படையில் இணைத்துக் கொண்டிருப்பர் என நம்பப்படுகின்றது. படையில் இருந்தவர்களுக்குக் கடினமான, ஊக்கமளிக்கக்கூடிய பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கலாம்.

சங்க இலக்கியம் குறிப்பிடும் "கடகம்" தொடர்ச்சியான பயிற்சிகளும் படை முறைகளும் இருந்தன எனக் குறிப்பிடுகின்றது.

### மூன்று கை மகாசேனை பற்றிய வரலாற்றுக் குறிப்பு

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாசமுத்திரத்தை அடுத்துள்ள திருவாலீசுரத்திலிருக்கும் அரியதொரு கல்வெட்டு அங்கிருந்த மூன்று கை மகாசேனை (மூன்று அங்கங்களைக் கொண்ட பெரும்சேனை)யைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைத் தருகிறது. அக்கல்வெட்டு முதலாம் இராஜராஜன் அல்லது முதலாம் இராஜேந்திரன் காலத்திலோ எழுதப்பட்டதாக இருக்கவேண்டும். அக்கல்வெட்டில் காணப்படுபவை.

இவர்கள் விஷ்ணுவையையும் சிவபெருமானையும் வழிபட்டனர். கன்னரதேவனைத் தோறகடித்துத் துரத்தினர்; காங்கேயனை வென்றனர்; கல்பாடம் என்ற ஊரையும் கடற்கரையிலுள்ள விழிஞத்தையும் அழித்தனர். கடல் கடந்து கிழக்கே சென்று மாதோட்டத்தை அழித்தனர்; மலை நாட்டைக் கைப்பற்றினர்;

சாலையிலுள்ள கடற்படையை அறுத்தனர்; வள்ளாளன் என்ற சாளுக்கியரைப் புறம்காட்டி ஓடச் செய்தனர்; வனவாசி நகரைக் கைப்பற்றினர்; இச்சாதனைகளுக்காகக் காளஹஸ்தியிலுள்ள தமிழ்ப் புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றனர்; மேலும், குச்சி மலையிலுள்ள கோட்டையை அழித்து உச்சந்தி நகரைப் பிடித்தனர். தங்களை எதிர்த்த வடுகர்களை முறியடித்தனர். வாதாபக் கோட்டையைத் தகர்த்து அந்நகரையும் கைப்பற்றினர். இம்மகாசேனையினர் பாண்டிய நாட்டில் தங்கியிருந்தனர் என்றும் மூவகையான பெரும் சேனையைச் சார்ந்த அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்கள் என்றும் குறிக்கப்படுகின்றனர். திருவாலீசுரம் கோயிலையும் அதைச்சார்ந்த பூசாரி மற்றும் பணியாட்கள் உட்பட அனைத்தையும் இச்சேனையினர்ப் பேணிவந்தனர்.

மேலே குறிப்பிட்டுள்ள வெற்றிகள் அனைத்தும் இராஜராஜன், அவரது மகன் இராஜேந்திரன் காலத்தில் அடைந்த வெற்றிகளாகும். கி.பி.1096ல் பொறிக்கப்பட்ட சேரன் மாதேவி (சேரமாதேவி) கல்வெட்டு ஒன்றில் இம்மாசேனையினரின் வீரக்கனவுகள் பற்றிக் கூறப்படுகிறது. மற்றொரு கோயிலையும் அதன் சொத்துக்களையும் இம்மகா சேனைத் தன் பாதுகாப்பின் கீழ்க் கொண்டு வந்தது என்று அந்தக் கல்வெட்டு கூறுகிறது.

**சீன அறிஞரின் சோழர்ப் படையைப் பற்றிய குறிப்பு**

கி.பி. 1225-ல் ஒரு சீனப் புவியியலாளர் சா யூ-குவா சோழ நாட்டைப் பற்றியும் சோழர்ப் படையைப் பற்றியும் பின்வருமாறு எழுதியுள்ளார்.

“இந்நாடு மேற்கு இந்திய நாடுகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தினரிடம் அறுபது ஆயிரம் போர் யானைகள் உள்ளன. ஒவ்வொரு யானையும் 7 அல்லது 8 அடி உயரம் உள்ளது. போரிடும்போது யானைகளின் மீது அம்பாரிகள் அமைத்து அவற்றில் வீரர்கள் அமர்ந்து கொண்டு நெடுந்தொலைவிற்கு அம்பு எய்கின்றார்கள். அருகே உள்ளவர்கள் ஈட்டிகளால் தாக்குகின்றனர்” என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதன் மூலம் அவர் வேடுவர்களின் புகழை உலகம் எல்லாம் எடுத்துக் கூறியுள்ளனர் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

## கடற்படை

### சோழர்க் கடற்படை

சோழ ஈரூடகப் படை வீரர்கள் சங்க காலத்திலேயே சோழர்கள் கடல் வாணிகத்திற்கு அடிகோலினர். பிறகு பல்லவர் காலத்தில் கப்பல் போக்குவரத்துப் பெருகிய காரணத்தால் தென்னிந்தியாவிற்கும், மலேயா (மலேசியா, சிங்கப்பூர்) இந்தோசீனா போன்ற தீவுகளுக்குமிடையில் வாணிகக்கலைப் பண்பாட்டுறவு மேலும் வளர்ந்தது.

9-ம் நூற்றாண்டில் “மணிக்கிராமம்” என்னும் தென்னிந்திய வர்த்தகக்குழு வங்கக்கடலைக் கடந்து எதிர்க் கடற்கரை ஓரத்தில் இயங்கத் தொடங்கிய செய்தியை அங்குள்ள தகுவாபா என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பண்டைய வழக்கப்படியே சோழர்களும் தங்கள் கடல் ஆதிக்கத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுப் பல வெற்றிகளைக் கண்டனர். ஈழம், மாலைதீவு ஆகியவற்றைக் கைப்பற்றியது. சீன வரலாற்றில் குறிக்கப்பெற்றது போல, சீன நாட்டிற்குத் தூதுக்குழுவை அனுப்பியது.

சோழர் காலத்திய கலங்களின் அமைப்பு எப்படி இருந்தது என்பதைப் பற்றி நேரடியான சான்றுகள் யாதும் கிடைக்கவில்லை. ஆனால் இதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மூன்று வகைக் கலங்கள் சோழ மண்டலக் கரையில் உலாவின என்று பெரிப்ளசு என்னும் நூல் கூறியுள்ளதையும் பிறகு இராஜேந்திரன் பெரியதொரு கப்பற்படையைக் கொண்டு வெற்றிகள் பெற்றதனையும் நோக்கும் பொழுது, சோழர்க் கப்பற்படை சிறியதும் பெரியதுமான பல கொண்ட சிறந்த படையாக அமைக்கப் பெற்றிருந்ததாகத் தோன்றுகிறது. இதில் சொழாந்தியம், சங்கரா எனும் கடற்கலங்கள் பாவனையில் இருந்துள்ளன.

### போர்க் காரணங்கள்

நாடு பிடிக்கும் வேட்கைப் போருக்கு ஒரு காரணம். ஒரு தமிழரசன் மற்ற இரு தமிழரசரை வென்று அனைத்து நாடுகளையும் வெல்ல வேண்டும் எனும் ஆவல். ஓர் அரசன் மகளை மன முடிக்க இயலாது ஏமாற்றம் அடைந்தால் அரசர்கள் அப்பெண்ணின் நாட்டின் மீது போர்த் தொடுத்தனர். தனது ஆட்சிக்குப்பட்ட சிற்றரசர்கள் கப்பங்கட்ட தவறியபோது அரசன் போர்ப் புரிய நேரிட்டது. தங்கள் நாடுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியை அரசர்கள் தம் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலால் போர்கள் மூண்டன.

### போர் வகைகள்

ஒரு நாட்டின் மேல் படையெடுக்க விரும்பும் அரசன் முதலில் தன் வீரரை ஏவிப் பகைவருடைய கால்நடைகளைக் கவர்வான். இது "வெட்சித் திணை" எனப்பட்டது. இம்முயற்சியில் ஈடுபட்டவர்கள் "வெட்சி" மலர்களைச் சூடினர்.

"கால்நடை" கவர்தலை எதிர்த்து நிற்பது "கரந்தைத் திணை" எனப்பட்டது. அவர்கள் "கரந்தை" மலர்ச் சூடி போரிட்டனர். இது வஞ்சித் திணை எனப்பட்டது.

இப்படையெடுப்பை எதிர்த்து நிற்பது காஞ்சித் திணை என்றும், கோட்டையை முற்றுகையிடல் உழிஞைத் திணை என்றும், கோட்டைக்குள் இருந்து எதிர்த்தல் நொச்சித் திணை என்றும், கோட்டைக்கு வெளியே நடைபெறும் போர் "தும்பைத் திணை" என்றும் அழைக்கப்பட்டது.

போரில் வெற்றிப் பெறல் "வாகைத் திணை" எனப்படும். ஒவ்வொரு திணைச்செயலிலும் ஈடுபட்ட வீரர்கள் அந்தந்த திணைகளுக்குரிய மலர்களைச் சூடினர். இத் திணைப் போர்கள் ஒவ்வொன்றும் பல்வேறு படிநிலைகளைக் கொண்டிருந்தன. அவை "துறை" எனப்பட்டன. இப்போரியல் குறித்து அரசன் அல்லது அவன் நம்பிக்கைக்குரிய படைத்தலைவன் படைகளுக்குத் தலைமைத் தாங்கி போருக்குச் செல்வது வழக்கம்.

### சூள் உரைதல்

போருக்குச் செல்லுமுன் அரசர்ச் சிலர் 'சூள் செய்ததை' சிலப்பத்திகாரம் கூறுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெருஞ்செழியன், "இப்பகைவரை யான் வெல்லேனாயின், என்னைக் கொடுங்கோல் அரசன் என்று என் குடிகள் தூற்றுவராக" என்று சூள் உரைத்தான்.

படையெடுக்கும் அரசனைச் சேர்ந்த வீரர், பகைவர் நாட்டு ஊர்களைக் கொளுத்துதல் வழக்கம்; கோட்டைகளை இடிப்பது வழக்கம்; இந்த இழிவுகளைப் புறநானூறு கூறுகிறது. பிற்கால அழிவுகள் கலிங்கத்துப் பரணியிலும் கூறப்பட்டுள்ளன.

“நீ படையெடுத்தால் பகைவர் நாடு அழிவுறுமே” என்று புலவர்கள் வருந்திப் பாடிய பாடல்கள் பல. இப்பாடல்கள் “கொற்ற வள்ளை” என்று பெயர்பெறும்.

அரசனது தலைநகரில் கட்டடங்கள் இடிக்கப்படும்; அந் நிலம் கழுதைகளால் உழப்படும்; கடுகு விதைக்கப்படும். வென்ற அரசர் வெல்லப்பட்ட நாட்டுக் குளங்களில் தம் யானைகளை நீராட்டுவர்; வென்ற நாட்டில் தங்கள் வெற்றித் தூண்களை நாட்டுவர் அல்லது தங்கள் இலச்சிணையைப் பொறிப்பர்; வென்ற அரசர், தோற்ற அரசர்க்கடியிலிருந்து தம் காலுக்குரிய கழலைச் செய்து கொள்வர்: வீரக் கங்கணமும் செய்து கொள்வர். இவை சங்க நூல்களில் காணப்படுகின்றன.

வென்ற அரசன் போர்க்களத்தில் செய்யும் வேள்வி “களவேள்வி” எனப்படும். வென்ற அரசன் தோற்ற அரசன் மனைவியருடைய தலைமயிரைக் கயிறாக்கி அதனைத் தன் தேரை இழுக்கப் பயன்படுத்துவதும் உண்டு. தோற்ற அரசனுடைய பற்களைக் கோட்டைக் கதவுகளில் பதிய வைத்தலும் உண்டு. இவைப் பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்து, புறநானூறில் உள்ளன.

போர் வீரருள் சிலர்த் தமது தனிப்போர் முறையால் சிறப்புப் பெறுதல் வேண்டும். அத்தகைய வீரன் போரில் உயிர்விட்டால், அரசனும் பிறரும் அவன் நினைவாக “வீரக்கல்” நட்டு வழிபாடு செய்வர். வீரர் முகத்தில் அல்லது மார்பில் புண்பட்டால் வெட்கப்படுவர் - அவற்றைக் கிழித்து விரைவில் இறந்துபடுவர். இது “மறக்காஞ்சி” எனப்படும்.

“ஒரு தாய் தன் ஒரே மகனைப் போர்க்கோலம் கொள்ளச் செய்து போருக்கு அனுப்பினாள்; அவளுடைய தந்தை, தமையன்மார், கணவன் ஆகியோர் முன்பு நடைபெற்ற போர்களில் இறந்தனர். இறுதிப் போரில் மகனும் இறந்தான். அவன் உடல் முழுவதும் அம்புகள் தைக்கப் பெற்றதைக் கண்ட தாய் மகிழ்ச்சிக் கண்ணீர் விட்டாள்” என்று புறப் பொருள் வெண்பாமாலைக் கூறுகிறது.

போர்க்களத்தில் உயிர்விட்ட வீரனுக்காக அவன் குடும்பத்தாருக்கு நிலங்கள் வழங்குவது உண்டு. அங்ஙனம் வழங்குதல் உதிரப்பட்டி (உதிரம்-இரத்தம்) எனப்படும். சிறப்பு முறையில் தம் ஆற்றலை வெளிப்படுத்திய வீரர்கள் ஏனாதி, மாராயன் என்ற பட்டங்களைப் பெற்றனர்.

**படை வகைகள்**

*"படைகுடி கூழ் அமைச்சர் நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு"*

என்னும் குறளில் படை முதற்கண் கூறப்பட்டிருத்தல் படையின் சிறப்பை நன்கு உணர்த்துவதாகும். இந்த உண்மையைத் தமிழரசர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

தொல்காப்பியம் - புறத்திணையியலில் படைகளைப் பற்றிய விவரங்களும், போர்களைப் பற்றிய விவரங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. படை பல பிரிவுகளாகப் பிரிந்து பல பெயர்களைப் பெற்றிருந்தன. அது அணி, உண்டை, ஒட்டு எனப்பல பெயர்கள் பெற்றன.

முதல் வரிசைப் படைகள் ஆக்கம், தார் (கொடிப்படை), தூசி, நிரை என்றும், பின்வரிசைக் கூழை என்றும் பெயர் பெற்றன. யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்று படைப் பல பிரிவுகளாக இருந்தன.

**யானைப்படை:**

அரசன் ஏறிச் செல்லும் யானை நெற்றிப்பட்டம் உடையது; வேறு பல ஆபரணங்களை உடையது; தந்தத்தில் பூணை உடையது. யானை மீது அரசனது கொடி காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

அரசன் யானை மீது அமர்ந்து பகைவர்க் கோட்டைக் கதவுகளை அதன் கொம்பால் குத்த செய்வான்; கோட்டைக் கதவுகள், கணைய மரத்தை யானைகள், முறித்தன.

யானைப் படை வீரர் வேல்களைத் தாங்கிப் போரிட்டனர். பல்லவர்களும் யானைப்படை வைத்திருந்ததைக் கூரம் பட்டயங்களும், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் சிற்பங்களும் உணர்த்துகின்றன.

செள-ஜூ-குபபா என்ற சீனா யாத்திரிகர் சோழ மண்டலக் கரையிலிருந்த போர் யானைகளைக் குறிப்பிடும் போது, "அரசாங்கத்திடம் அறுபதாயிரம் போர் யானைகள் இருக்கின்றன. அவற்றின் உயரம் ஏழு அல்லது எட்டு அடி இருக்கும். ஒவ்வொரு யானையின் மீதும் ஓர் அம்பாரி உண்டு. அதில் வீரர் பலர் இருந்து கொண்டே நீண்ட தொலைவு வரையிலும் அம்புகளை எய்வர்;

பகைவரை நெருங்கியவுடன் ஈட்டிகளை எறிவர். போரில் வெற்றிப் பெற்றால், யானைகளுக்குச் சிறப்புப்பெயர் இடப்படும்" என்கிறார்.

ஜார்டன்ஸ் எனும் அயல் நாட்டவர், "ஒரு யானை முப்பது வீரர்களைச் சுமந்து செல்கிறது. ஒரு போர் யானை ஏறத்தாழ 1500 மனிதர்களுக்குச் சமமென்று சொல்லலாம். யானைகளின் தந்தங்களில் கூர்மையான போர்க் கருவிகள் கட்டப்படும். யானைகள் அவற்றைப் பகைவர் மீது பாய்ச்சிப் பெருங் குழப்பத்தை உருவாக்குவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**குதிரைப்படை**

சங்ககால அரசர் தேர்களில் காற்றைப் போலக் கருதிடத்தக்கக் குதிரைகள் வைத்திருந்தனர். அரசனது ஆட்சி மன்றக் குழுவினருள் "இவுளி மறவர்" எனும் குதிரைப் படைத் தலைவரும் இருந்துள்ளனர். கி.பி. 13-ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டைப் பார்வையிட்ட மார்க்கோபோலோ எனும் வெளிநாட்டவர்

"பாண்டியன் ஆண்டு தோறும் இரண்டாயிரம் குதிரைகளை வாங்கி வந்தான். ஒவ்வொரு கப்பலிலும் பிற பொருள்களோடு குதிரைகளும் வந்தபடி இருந்தன " என்று குறிப்பிட்டுள்ளார்.

**காலாட்படை**

சங்ககாலப் போர்வீரர் மறவர் எனப்பட்டனர். மறம்-வீரம். அவர்கள் வில், வேல், வாள் முதலிய போர்க்கருவிகளைக் கொண்டு போரிட்டனர்.

அவர்கள் பசுக்களைக் கவர்தலும், அகழி தாண்டிக் கோட்டையைப் பிடித்தலும், வெட்ட வெளியில் போரிடல் போன்றவற்றில் பங்குபெற்றனர். அவர்கள் முன்படை வீரர், பின்படை வீரர், துணைப்படை வீரர் எனப் பல பெயருடன் இருந்தனர்.

தமிழரசர்கள் முக்கியமான எல்லைப்பகுதிகளில் கோட்டைகளை அமைத்து அங்கு நிலைப்படைகளை வைத்திருந்தனர்.

பிற்காலச் சோழர்க் காலத்தில் நாட்டுப்படை, கைக்கோளப் பெரும் படை, வேளைக்காரப் படை எனப் பலவாறு இருந்தன. வேளைக்காரப் படை என்பது, அரசனுக்கு ஆபத்து வரும் வேளையிலும், நாட்டுக்கு ஆபத்து வரும் வேளையிலும் தம் உயிரையும் மதியாமல் போர்ப் புரியும் வீரர்களைக் கொண்டது.

சோழர்க் காலத்தில் மலையாளப் படை, வடுகர்ப் படை, நாட்டுப்படை முதலியன இருந்தன.

**கப்பற்படை**

தமிழ்நாடு பல நூற்றாண்டுகளாகக் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தது. எனவே மூன்று தமிழரசர்களும் கடற்படையை வைத்திருந்தனர். கப்பல்களை வழிமறித்துக் கொள்ளையடித்து ஒரு தீவில் வாழ்ந்து வந்த "கடம்பரை" நெடுஞ்சேரலாதன் வென்றான்; அவ்வாறே செங்குட்டுவனும் வென்றதை "கடல்பிறக்கோட்டிய" செங்குட்டுவன் எனப் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

பல்லவர் காலத்தில் முதலாம் நரசிம்மன் மாமல்லபுரத்திலிருந்து கடற்படையை இலங்கைக்கு இரண்டு முறை அனுப்பினான். இராசசிம்மன் இலட்சத் தீவுகளை வென்றான்.

பிற்காலச் சோழரிடம் பெரிய கடற்படை இருந்தது. அக்கடற்படையின் துணையால் முதலாம் இராசராசன் இலங்கையையும், முந்நீர்ப்பழந்தீவு, பன்னீராயிரத்தையும் வென்றான்; கங்கைக் கொண்ட சோழன் மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், நிகோபர்த் தீவுகள் முதலியவற்றை வென்றான்.

**படை அமைப்பு**

அரசனுடைய ஒவ்வொரு படைக்கும் பெரிய தலைவன் உண்டு. ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஒரு சிறிய தலைவன் இருந்தான். இப்பல படைகளுக்கும் சேர்ந்த அமைப்புக்குப் பெருந்தலைவன் ஒருவன் இருந்தான். அவன் சேனாதிபதி, தண்ட நாயக்கன், மகாதண்ட நாயக்கன், தளவாய் எனப் பல காலங்களில் பலவாறு பெயர்ப் பெற்றான். அவன்-சிற்றரசனுக்குரிய தகுதியில் வாழ்ந்தான். முதலாம் இராசேந்திரன் போன்ற இளவரசர்களே சில காலங்களில் அப்பதவிகளில் இருந்தனர். சில சமயங்களில் தண்ட நாயகப் பதவி மட்டும் தனித்து இருந்தது.

**பேரரசன் படைகள்**

பேரரசன் படைகள் பெருநாட்டின் எல்லைப் புறங்களில் குறிப்பிடத்தக்க இடங்களில் கோட்டைகளை அமைத்துக் கொண்டு நிலையாக இருந்து வந்தன. சில படைகள் உள்நாட்டுப் பகுதிகளில் இருந்த கோட்டைகளில் ஆங்காங்கு இருந்தன. சில பகுதிகள்

தலைநகரத்தில் இருந்தன. பேரரசனது படைகள் பயிற்சி பெற்ற பண்பட்ட படைகளாகும்.

**சிற்றரசரும், படைகளம்**

பேரரசுக்குட்பட்ட சிற்றரசர்களிடம் படைகள் இருந்தன. பேரரசனுக்குத் தேவைப்படும் பொழுது சிற்றரசர்கள் தங்கள் படைகளை அனுப்பி உதவ வேண்டும். இவர்களுள் பலர் போர்க்காலத்தில் மட்டும் வீரராக இருப்பர்; எஞ்சிய காலங்களில் பயிர்த்தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பர்.

**ஒற்றர் பிரிவு :**

ஆட்சி முறையிலும், படைப் பிரிவிலும் குறிப்பிடத்தக்கத் துறை ஒற்றுத்துறை, ஒற்றர் இலக்கணம் குறித்து திருக்குறளில் தெளிவாக விளக்கப்பட்டது.

**தூதுவர்ப் பிரிவு :**

ஒற்றரைப் போலவே தூதுவரும் அரசர்களுக்கு இன்றியமையாத உதவியாளர் 'தூதர்' எனப்பட்டனர். தூதுவர்களைப் பற்றியும் திருக்குறளின் பத்துப் பாக்களில் கூறப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் அவ்வையார் எனும் பெண்பாற் புலவர், அதியமானிடமிருந்து காஞ்சி அரசனான தொண்டைமானிடம் அரசியல் தூதுவராகச் சென்றார், தமது பேச்சுத் திறமையால் அதியமானின் போர்த்திறனை விளக்கினார். நடக்க இருந்த போரைத் தடுத்தார் எனப் புறநானூறு தெரிவிக்கிறது.

சேரன் செங்குட்டுவன் இமயமலையிலிருந்து பத்தினியின் உருவம் பொறிக்கத்தக்கச் சிலையைக் கொண்டு வருவதற்குத் தன் படையுடன் புறப்பட்டு வழியில் நீலகிரியில் தங்கினான். சேரனின் நண்பர், நூற்றுவர் கன்னரால் அனுப்பப்பெற்ற சஞ்சயனைத் தலைவனாகக் கொண்ட தூதுக்குழு அப்பொழுது அவனைக் கண்டது.

"சஞ்சயன், சேரனைப் பணிந்து கண்ணகியின் உருவத்தைப் பொறிக்கத்தரும் கல்லைக்கொண்டு வரவே நீங்கள் யாத்திரைச் செய்வதாயிருப்பின், அந்த வேலையை நாங்களே செய்வோம்.

இச்செய்தியை எம் அரசர்ச் சொல்லியனுப்பினார்" என்று சஞ்சயன் தெரிவித்தான்.

செங்குட்டுவனோ, "வடநாட்டு மன்னனோ கனகன், விசயன் இருவரும் தமிழரசர் வீரத்தை இழித்துக் கூறினர். அதனையும் மனதில் வைத்தே இச்சேனை வடக்கு நோக்கிச் செல்கிறது. நீ உன் அரசரிடம் சொல்லி நாங்கள் கங்கையாற்றைக் கடக்கும் முறையில் படகுகளை உதவச் செய்க," என்று கூறி அனுப்பினான்.

சங்ககாலத்தில் பாண்டியன் உரோமப் பேரரசனான அகஸ்ட்ஸ் என்பவரிடம் தூதுக்குழுவை அனுப்பினான். முதற்குலோத்துங்கன் அனுப்பிய தூதுக்குழுவில் 72 பேர் இருந்தனர்.

**நடுகற்கள்**

வரலாறு என்பது உலகின் உயிரினங்கள் அடைந்த வளர்ச்சியினை உணர்த்தும் காலக் கண்ணாடி. இது பழங்கதை என்று ஒதுங்கிச் செல்வோமானால் அது நம் அறியாமையை பறைசாற்றுவதாகக் கொள்ளலாம். வீரதீர செயல் புரிந்தவர்களின் வரலாற்று அடையாளமாக இன்றும் உயர்ந்து நிற்பது நடுகற்கள் . இந்த நடுகற்கள் பல இடங்களில் முக்கிய ஆவணமாகவும் விளங்குகின்றன. போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மட்டுமில்லாமல், போரில் சண்டையிடப் பயன்படுத்திய யானை, குதிரை ஆகிய பிராணிகளும் நடுகற்களாக நிற்கின்றன.

சங்ககாலம் தொட்டு கொங்குச் சமவெளிப்பகுதியில் வாழ்ந்த பழங்குடியினரில் குறிப்பிடத்தக்கவர்கள் வேட்டுவர், பூலுவர், காவலர், ஆவியர். சோழர் பூர்வபட்டயம் மாவலவர், குறும்பிலார், , அவ்டர், படைத்தலை போன்றோர். அவ்டநாடு, ஆவியர்நாடு, குறும்பநாடு போன்ற பெயர்கள் அரசியல் சமூகவியல் நீரோட்டத்தில் இருந்திருக்கின்றன. கொங்கு நாட்டில் சோழர் காலத்தின் பல நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் பெரும்பாலும் எழுத்துகள் அதிகமில்லை. ஆனாலும் கொங்கு நாட்டின் எல்லைப்புறத்தில் கிடைத்த நடுகற்கள் போன்றவற்றில் சேர, சோழ, பாண்டிய பேரரசின் முயற்சிகளால் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டின் வட பகுதியிலும், கர்நாடக நாட்டின் தென் பகுதியிலும் வாழ்பவர்கள் வேட்டுவர்கள் என்ற கிராதர் என்கிறார் டி.என்.சுப்ரமணியம். கங்கமன்னன் சிவமாறனின் செப்பேடுகள், "வேட்டுவ அரசர்களின் அரண்களை எறிந்து வேட்டுவ அரசிகளைச் சிறை பிடித்தான்" எனும் அது வடமொழியில் அமைந்திருந்ததும் குறிப்பபிடத்தக்கது. பிற்காலச் சோழர்களின் முதலாம் ஆதித்தன் கொங்கில் "வேட ராஜாக்களை வென்றான்" என்று கொங்குதேச இராஜாக்கள் என்ற மரபுவழி நூல் செப்புகின்றது. சிவமாறன் போரும் ஆதித்தன் போரும் கி.பி.9-10ஆம் நூற்றாண்டில் நடந்திருக்கின்றது. ஆதித்தன் காலத்து வேட்டுவ இராஜாக்கள் பலர் இருந்தனர் என்று வேட்டுவ இராஜாங்கம் என்ற நூல் கூறுகின்றது.

**தமிழ் மண்ணில் முதன் முதலில் படைத்தொழிலில் ஈடுபட்டவர்கள்**

தமிழ் மண்ணில் முதன் முதலில் படைத்தொழிலில் ஈடுபட்ட வேட்டுவ இனத்தில் இருந்துதான் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் உருவானார்கள். வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என்றாயிற்று. இவர்கள் வேடன், வெறப்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, வேட்டுவகவுண்டர் மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். வேர் வகையை எண்ணினாலும், வேட்டுவர் வகையை எண்ணமுடியாது எனும் முதுமொழியும் வழக்கில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

வேட்டுவரின் பூர்வீகம் குறித்து அறிஞர்களிடையே பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. வேட்டுவர், பிரம்மனால் படைக்கப்பட்ட ஆதி வம்சத்தினர் என்று புராணம் குறிப்பிடுகிறது. சோழன் பூர்வ பட்டயம், வேட்டுவக் கவுண்டர்களைக் கொங்கு நாட்டின் ஆதிகுடிகள் என்று சுட்டுகின்றது. சில பட்டயங்களில் வேட்டுவர் அரசர்கள் என்று செப்புகின்றன. வேட்டுவக் கவுண்டர் கண்ணப்ப நாயனாரைத் தமது குல தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். எட்கார் ஃதர்ஸ்ட்டன் (Edgar Thurston) என்ற அறிஞர் முத்தரையர், வேட்டுவர் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இருப்பினும் வேட்டுவரின் பூர்வீகம் குறித்து நான்கு முக்கியக்

கருத்துகள் உள்ளன. அவை, வேட்டுவர் நாகர் இனத்தவர், குரு குலத்தவர், கண்ணப்ப நாயனாரின் வம்சாவழியினர், கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பனவாம்.

*(கொங்கு நாட்டு வேட்டுவக்கவுண்டர்கள் வீர வரலாறு -பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி)*

'வெட்டவெட்டத் தழைக்கும் வேட்டுவர் படை' என்ற பழமொழி (புறம் 279) கெடுக சிந்தை ; கடிதுஇவள் துணிவே; போருக்கு தொடர்ந்து வீரத்துடன் வேட்டுவர் செல்வர் அவ்வாறு செல்லும்போது இறப்பு நேர்தாலும் வீட்டில் உள்ள எவரேனும் ஒருவர் தொடரந்து போருக்கு சென்று வெற்றி அடையும் வரை போராடுவார் என்பதை சங்கப்பாடலின் மூலம் இதை அறியலாம் (புறம் 279)

"மூதின் மகளிர் ஆதல் தகுமே; ஒருமகன் அல்லது இல்லோள்,
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை, யானை எறிந்து, களத்துஒழிந் தன்னே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்,
பெருநிரை விலக்கி, ஆண்டுப்பட் டனனே;
இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி, வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
செருமுக நோக்கிச் செல்க என விடுமே!"

விளக்கம்

இவளது துணிவான செயல் கடுமையானது. இவள் மூதில் (வேட்டுவர் ) மகளிருள் ஒருத்தியாக இருத்தல் வேண்டும். இவளது கடுமையான எண்ணம் கெட்டொழியட்டும். நேற்றைக்கு முந்தைய மேனாள் நடந்த போரில் இவளது அண்ணன் பகைவரின் யானையை வீழ்த்திய போரில் போர்க்களத்திலேயே மாண்டான். நேற்று நடந்த போரில் இவளது கணவன் பகைவரின் அணிவகுப்பு பிளவுபடும்படி விலக்கிக்கொண்டு முன்னேறி அங்கேயே மாண்டான். இன்றும் போர்ப்பறை ஒலி கேட்டவுடன் ஏதாவது செய்யவேண்டும் என்னும் ஆவலுடன் எண்ணிப்பார்த்து, தன் ஒரே ஒரு மகனை, இளம் பிள்ளையை, பரந்துகிடந்த அவன்

தலைமுடியை எண்ணெய் வைத்துச் சீவி முடித்து, வெண்ணிற ஆடையை உடுத்திவிட்டு, வேலைக் கையிலே கொடுத்து, "போர்க்களம் நோக்கிச் செல்க" என்று கூறி அனுப்பவைக்கிறாளே! இவள் சிந்தைத் துணிவு கெட்டொழியட்டும். மூதில் மகளிர் - மூத்த மறக்குடிப் பெண்டிர்.

வேட்டுவர் இனம் மொத்தமுமே ஒரு படையாகச் செயல்படும் என்பர். ஒரு குழுவினர் போரில் மாண்டுவிட்டால் அடுத்த குழுவினர் போருக்குத் தயாராகிவிடுவர். உடல் பலம் உள்ளோர் அனைவரும் போர் வீரர்களே. அதனால் வேட்டுவர்கள் அழிவே இல்லாதவர்களாக நிலைபெற்று இருந்துள்ளனர்.

**பாறை ஓவியத்தில் வேட்டுவர்**

ஆருக்னேசியன்ஸ் எனும் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் வரையப்பட்ட குகை ஓவியங்கள் சுமார் 1,00,00 முதல் 40,000 வருடங்கள் பழமையானவைகள் என்றும் கண்டறிந்துள்ளனர். இதற்கு சிறந்த உதாரணமாக குகை ஓவியங்களிலேயே காலத்தால் மிகப் பழமையானவைகளாக கருதப்படுபவைகளான (சுமார் 50,000 - 1,00,000 ஆண்டுகள் பழமையானவைகள்) இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்திலிருக்கும் பம்பெட்கா குகை ஓவியங்களைக் குறிப்பிடலாம். பண்டையக்கால ஒரு குகை ஓவியத்தில், பெரியதாக ஒரு கை மட்டும் வரையப்பட்டுள்ளது. அதாவது ஒரு பெண்ணின் கையை - குறிப்பாக வலக்கையை குறிப்பதாக அமைந்துள்ளது. கை என்பது சதிக்கல் வகையைச் சார்ந்த நடுகற்களில் காணப்படும் ஒன்று. இதனை வீரக்கை என்று தொல்லியல் சார்ந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பழனிக்கு அருகில் கிடைத்த பாறை ஓவியம் வேட்டுவர்களின் நடன நிகழச்சியை காட்டுகிறது இது 5000 ஆண்டுகள் பழமையானது. நினைவுச் சின்னம் (Monument) என்பது, குறிப்பிடத்தக்க மனிதர்கள், நிகழ்வுகளை நேரடியாக நினைவுகூர்வதற்கான அமைப்புகளாகும். இது, ஒரு சமூகத்தினருடைய கடந்தகால நிகழ்வுகளின் நினைவுகளைக் குறிக்கும் அமைப்பாகவும் இருக்கலாம்.

**நடுகல்லில் வேட்டுவர்**

*1) கரையவேட்டுவர் நடுகல்*

*கரைய குலம்*

*ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம்,*

*பழமங்கலம் நத்தக்காடு வேடன்கல். : கி.பி. 10ஆம் நூற்றாண்டு எதிர்த்த பகைவர்களைக் கொன்று வென்ற கரையகுலச் சொக்கன் வீரமரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் எடுத்துப் பீடும், பெயரும் எழுதப்பட்டுள்ளது. செய்தி வெண்பா வடிவில் எழுதப்பட்டிருப்பது வேறு எங்கும் இல்லாத சிறப்பாகும்.*

*இந்நடுகல்லும் இல் எடுத்தல் அமைப்பில் கோயில் போல அமைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு,*

*"வாய்த்தபுகழ் மங்கலத்து வந்துதிர்த மாற்றலரைச்*
*சாய்த்தமருள் வென்ற சயம்பெருக - சீர்த்தபுகழ்*
*நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான்*
*கரையகுலச் சொக்கனேந்த லேஉலகில் தான்*
*இக்கற்பொறி இரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் எந்தலைமேலே"*

*இக்கல்வெட்டு ப.லிட்., முதுகலைப் பாடத்திற்குப் பாடமாகப் பல ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தது.*

*கரைய வேட்டுவர் வேளான் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன்பேட்டை பிரமீசுரமுடையார் கோயில்.*

*காலம் : இராசகேசரி; கி.பி. 10ஆம் நூற்றாண்டு திருவக்கழிமங்கலம் கரைய வேட்டுவர் காளிப்பிடாரன் ஆன கரைய வேளான் பகைவர் கவர்ந்த ஊர் மாடுகளை மீட்டார். அதற்காக அவருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.*

*ஸ்வஸ்திஸ்ரீ கோபராசகேசரி பருமர்க்கு செல்லா ஆறாவது திருகழிமங்கலத்தில் சபையோம் மேற்படி ஊரோருக்கும் கரைய வேட்டுவர் காளி பிடாரநாந கரையவேளானுக்கு மாடு மீட்டதுக்கு சிறப்பு செய்த நிலமாவது வெள்ளல் மயிலாடி 8ரைக்குத் தெக்கும் கரை இட்டேரிக்கும் மேக்கும் சிறுக்கன் நஞ்செய் அறிதலுக்கு வடக்கும் மடைவ காட்டறிதலுக்கு கிழக்கும் திருவகழிமங்ககலத்து சபையோம் கரைய வேளானுரக்கு நிலம் அட்டிக் குடுத்தோம்.*

கொங்கு நாட்டின் பூர்வகுடிகளான வேட்டுவரிடையே எண்ணிறந்த குலப்பிரிவுகள் இருந்தன. அவற்றுள் கரையகுலமும் ஒன்று. புகழ்மிகுந்த இக்குலத்தை வேட்டுவர் கலிவெண்பா "பூமாரிக்கரைய குலம்" எனப் பாராட்டிப் பேசுகின்றது. கரையகுல வேட்டுவர் கொங்கு நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். இக்குலத்தைச் சேர்ந்தோர் சிறந்த வீரர்களாகவும் படைத்தலைவர்களாகவும். அரசியல் தலைவர்களாகவும் புலவர்களைப் போற்றிக்காக்கும் புரவலர்களாகவும், திருக்கோயில்களில் திருப்பணிகள் பல செய்த அறக்கொடையாளர்களாகவும் விளங்கினர். இக்குலத்தாரின் அருமை பெருமைகளையும் சாதனைகளையும் இங்கு காண்போம்.

கரையகுலத்தினர் ஈரோடு மாவட்டத்திலுள்ள கவுந்தப்பாடி, பொம்மன்பாடி, சலங்கபாளையம், பட்டயகாளிபாளையம், கவுண்டம்பாளையம் முதலான பகுதிகளிலும் நாமக்கல் மாவட்டம் வெப்படை வட்டாரத்திலும் மிகுதியாக வாழ்கின்றனர். அறச்சலூர், சோழசிராமணி பகுதிகளிலும் இவர்கள் வசிக்கின்றனர்.

குல தெய்வக்கோயில்கள் கோவை, ஈரோடு மாவட்டங்களில் உள்ளன. கவுந்தப்பாடி குருப்பணசாமி, அறச்சலூர் அறச்சாலையம்மன், பூசாரியூர் (அறச்சலூர் அருகே) முப்பாட்டு கருப்பணசாமி, சோழசிராமணி படைவெட்டியம்மன், அங்காளம்மன், சௌதாபுரம் காளியம்மன், சிங்காநல்லூர் (கோவை அருகே) அப்பிச்சிமார் ஆகியோர் இவர்கள் வழிபடும் குலதெய்வங்கள் ஆகும்.

இக்குலத்தைச் சேர்ந்த சொக்கன் தமிழக நடுகல் வரலாற்றில் தனக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளான். தனது ஊராகிய பழமங்கலத்தின் மீது படையெடுத்து வந்த பகைவர்களை இவன் போர்க்களத்தில் வெட்டி வீழ்த்தித்தானும் இறந்துபட்ட செய்தியை, ஈரோடு வட்டம் பழமங்கலம் நத்தக்காடு வேடன் கல் உயிரோட்டமாகச் சித்தரிக்கின்றது. இந்நடுகல் கல்வெட்டு வெண்பா வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது என்பதும் இதனைப் போன்ற வெண்பா வடிவிலான நடுகற்கல்வெட்டு தென்னிந்தியாவில் வேறெங்கும் காணப்படாத ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. கரையகுலச் சொக்கனின் இந்நடுகல்லின்

வாசகம் கிழவனையும் குமரனாக மாற்றும் ஆற்றல் பெற்றது. இதோ அக்கல்வெட்டு "வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச் சாய்த்தமருள் வென்ற சயம் பெருக - சீர்த்தபுகழ் நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச் சொக்கனேந்த லேஉலகில் தான், இக்கற்பொறி ரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் எந்தலை மேலே"

இக்கரைய வேட்டுவன் தன் எதிரிகளை வாழை மரங்கைகள வெட்டிச் சாய்ப்பது போல் சாய்த்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. புகழ்மங்கலம் என்பது இன்றைய பழமங்கலம் ஆகும்.

கரையகுலத்தில் தோன்றிய மற்றுமொரு மாவீரன் காளிபிடாரன் ஆவான். திருவக்கழிமங்கலத்தின் ஊர்த்தலைவனான இம்மாவீரன் எதிர்கள் கவர்ந்து சென்ற ஊர்மாடுகளை, அவர்களுடன் கடுமையாகப் போரிட்டு அவற்றை மீட்டுக் கொண்டு வந்த பெருமைக்குரியவன். இக்கரைய வேட்டுவனின் ஒப்புயவர்வற்ற வீரத்தை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் கொக்கராயன்பேட்டை பிரமீசுவரமுடையார் கோயில் கல்வெட்டு வியந்து போற்றுகின்றது. இக்கல்வெட்டு கி.பி.பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழவேந்தன் இராசசேகரரியின் ஆறாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது.

இக்கரைய வேட்டுவனின் வீரத்தைப் பாராட்டும் வகையில் திருவக்கழிமங்கலத்துச் சபையார் இவ்வீரனுக்கு நிலதானம் செய்துள்ளனர். கரைய குல வேட்டுவனான இவன் வேளாளனாக மாறினான் என்பதனை "மேற்படி ஊர்யிருக்கும் கரைய வேட்டுவன் காளி பிடாரநாத கரைய வேளாளனுக்கு மாடு சிறப்புச் செய்த நிலமாவது..." எனும் கல்வெட்டு வாசகம் சான்றாகத் திகழ்கிறது.

வீரத்தில் மட்டுமின்றி, ஈகையிலும் இவர்கள் சிறந்திருந்தனர். குமாரவலசு கரைய வேட்டுவர் குமார சின்னைய கவுண்டர், தீரன் சின்னமலையின் தந்தை இரத்தினச் சர்க்கரைக்கு நிலதானம் செய்தார் என்பதனை தீர்த்தகிரி சர்க்கரைப் பட்டயம் பதிவு செய்துள்ளது.

வேட்டுவகுலப் பெருமக்கள் திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் அளிப்பதிலும் சிறந்து விளங்கினர். கரைய குல வேட்டுவர்களும் இறைப்பணியில் விளங்கினர். இதனைக் கீழ்க்காணும் செய்திகளால் அறியலாம்.

திங்களூரைச் சேர்ந்த கரைய வேட்டுவன் சமைய மந்திரி சிறுபிள்ளை எனும் பக்திமான் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூரில் எழுந்தருளியுள்ள சந்திரபுரீஸ்வரர் திருக்கோயிலில் விநாயகப் பெருமானுக்குப் பீடம் ஒன்றினைச் செய்து கொடுத்து தன் இறையன்பை உலகிற்கு உணர்த்தினான். இத்திருக்கோயில் திருநடைமாளிகையில் இவன் வினாயகப் பிள்ளையாருக்கு பீடம் அமைத்ததனை இத்திருக்கோயிலில் காணப்படும் விக்கிரம சோழனின் இரண்டாம் ஆட்சியாண்டு (கி.பி.1275) பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டின் ஒரு பகுதியை இங்கு காண்போம்.

"குறுப்பு நாட்டுத் திங்களூரிற் கரைய வேட்டுவந் சமைய மந்திரி சிறுபிள்ளையேன் உடையார் சந்திரமுடையார் திருநடை மாளிகையில் வினாயகப் பிள்ளையார் ஸ்ரீபபஞ் செய்வித்தேன் "

**கரைய வேட்டுவன் செய்யான் பல்லவரையன்**

கி.பி.14ஆம் நூற்றாண்டில் அறச்சலூர் பகுதியில் கரைய வேட்டுவர் ஆட்சித்துறையில் சிறப்புடன் விளங்கினர். எடுத்துக்காட்டாக கொங்கு நாட்டில் போசளரின் ஆதிக்கம் ஏற்பட்ட காலத்தில் கரைய குலத்தைச் சேர்ந்த காளியப்ப கவுண்டர். செய்யான் பல்லவரையன் முதலானோர் அரசியல் வானில் தம் முத்திரையைப் பதித்துள்ளனர். கரையூர் இக்குலத்தின் பெயரால் அமைந்ததுவே. கரைய குலத்து வேட்டுவத் தலைவரான காளியப்ப கவுண்டர் என்பார் ஈரோட்டை அடுத்துள்ள ஊசிப்பாளையம், அறச்சலூர்க் காணியாளராகத் திகழ்ந்தார். இவருக்கு முன்பும் வேட்டுவத்தலைவர்களே (சாந்தப்படை வேட்டுவர்) இப்பகுதிகளின் காணியாளர்களாகத் திகழ்ந்து வந்தனர்.

காளியப்ப கவுண்டர் அறச்சலூரில் அம்மனுக்குக் கோயில் எடுப்பித்து, கும்பாபிஷேகம் செய்தான். அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரர் ஆலயம் நிர்மாணித்து கொண்டு திருக்கோயிலில் பூசைகள் குறைவற நடைபெற பெருந்துறை வடிவேல் அய்யனை அமர்த்தினான்.

காளியப்ப கவுண்டரின் மகனான காணியாளன் செய்யானுக்கு, போசள மன்னனான மூன்றாம் வீரவல்லாளன் உயர்மட்ட அலுவலர் பதவியளித்து பல்லவராயர்' எனும் சிறப்புப் பட்டமும் அளித்துப் பெருமைப்படுத்தினான். இச்செய்யான் பல்லவரையன் அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரர் மீது அளவற்ற பக்தி கொண்டவன். எனவே, இத்திருக்கோயில் திருப்பணியின் போது இவன் திருநிலைகாலும். படியும் அமைத்துக் கொடுத்துத் தன் இறையன்பை வெளிப்படுத்தினான்.

அறச்சலூர் கரைய வேட்டுவன் செய்யான் பல்வரையனின் இப்புனிதச் செயலை அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரர் திருக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள போசள வேந்தன் மூன்றாம் வீரவல்லாளனின் கல்வெட்டு (கி.பி.1335) எவ்வாறு பதிவு செய்துள்ளது என்பதனைக் காண்போம்.

“மேல்கரைப் பூந்துறை நாட்டு அறைச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவரையனேன் இவ்வூர் உடையார் புற்றிடங்கொண்ட நாயனார். கோயிலில் திருக்கட்டளையில் திருநிலைகாலும் படியும் செய்வித்தேன்”.கரைய வேட்டுவர்களான காளியப்ப கவுண்டர் செய்யான் பல்லவரையன் ஆகிய இருவரைப் பற்றியும் ஊசிப்பாளையம் செப்பேடு குறிப்பிடுகின்றது. ஊசிப்பாளையம் செப்பேட்டை வெளிக் கொணர்ந்த பெருமை கொட்டாரத்தோட்டம் அமரர் ஒ.எஸ்.துரைசாமி (முன்னாள் எம்.எல்.சி.) அவர்களையே சாரும். காதல் பிரபந்தத்தின் தலைவன் கரைய வேட்டுவனான நல்ல மாகாளி என்பானின் மகன் முத்தணன் மீது பரமுத்து வைள்ளைக் கவியராயர் காதல் பரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளார். இதனால் இக்கரைய வேட்டுவன் நீ சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப்பட்டான் என்பது புலனாகும்.

### 2) புல்லை வேட்டுவர்

வேட்டுவரின் குலப்பிரிவுகளுள் பிள்ளை வேட்டுவரும் ஒன்றாகும். இவர்கள் பில்ல வேட்டுவர் எனவும் புல்லை வேட்டுவர் எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளனர். புல்லை வேட்டுவரில் சிலர் சிறந்த ஆட்சியாளர்களாகவும் அரசியல் அதிகாரிகளாகவும் புகழ்பெற்று விளங்கினர். இவர்களுள் சிலர் கொங்கு நாட்டில் பாண்டியரின் மேலாண்மையை விரிவு படுத்துவதில் துணை புரிந்துள்ளனர். எனவே, மன்னர் இவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்தான். இவர்கள் இறையன்பில் மேம்பட்டு விளங்கியதுடன் சில திருக்கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டு அறப்பணி புரிந்துள்ளனர்.

புல்லை வேட்டுவனான வானவதரையன் வலங்கை வாழவந்தானான சுந்தரபாண்டிய வீரசிங்கதேவன் என்பான் வீரபாண்டியனின் ஆட்சிக்காலத்தில் பெருந்தரத்து அதிகாரியாகப் பணிபுரிந்தான். வரி வசூல் செய்யும் அதிகாரியாகப் பதவியேற்றான். அப்போது வெங்கம்பூரில் வசூலாகும் தரகுப்பணத்தை வீர செயங்கொண்ட சோழீச்சுரமுடையார்க்கும் சிவகாமி அம்மைக்கும் அமுதுபடிக்கு வழங்கியுள்ளார். இவரது இறைப்பணியைப் பாராட்டி வீரபாண்டிய மன்னன் இவருக்கு மேல் கரை நாட்டிலுள்ள வெங்கம்பூரைத்தானமாக வழங்கினார்.

இதனை ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் சோழீசுவரர் கோயிலின் முன்புறம் கிடக்கும் வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.1267) உணர்த்துகின்றது. இப்புல்லைவேட்டுவத் தலைவனுக்கு மன்னன் வீரபாண்டியன் "வானவதரையன்" எனும் சிறப்புப் பட்டமளித்துப் பெருமைப் படுத்தினான்.

கூத்தாடும் தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன் எனும் புல்லை வேட்டுவன் நாமக்கல் வட்டம் ஏழூர் பிள்ளையார் கோயில் திருப்பணியின் போழ்து தூண் ஒன்றினைத் தானமாக அளித்தான். அடுத்து இத்திருக்கோயிலுக்குப் பெருந்திருவாசலும் கட்டிடக் கல்லும் போதிகையும் உத்தரமும் வடகரை ஆற்றூர் புல்லை வேட்டுவன் வளர்ந்த அம்மத திருநாடாழ்வான ஆகிய வீரசிங்கன் என்பான் தானமாக அளித்தான். இப்புல்லை வேட்டுவனுக்குப் பாண்டிய வேந்தன் "நாடாழ்வான்" எனும் விருது வழங்கிச் சிறப்பித்தான்.

இதனை ஏழூர் பிள்ளையார் திருக்கோயிலின் முன்புள்ள இரண்டு தூண்களிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. அடுத்து புல்லை வேட்டுவனான நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப் பிறந்தான் மும்முடிச் சோழச்சக்கரவர்த்தியான அரங்கராயர் எனும் தலைவன் நாமக்கல் வட்டத்திலுள்ள அரங்கநாதப் பெருமாள் கோயிலில் வேதநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்தான். அதன் வழிபாட்டிற்கு நில தானமும் அளித்தான். இதனை இராசராச தேவனின் 30ஆம் ஆட்சியாண்டினதான (கி.பி.1246) அரங்கநாதப் பெருமாள் கோயில் கல்வெட்டால் அறியலாம். இதோ அக்கல்வெட்டு:

1.ஸ்வதி ஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு 30 வது புல்லை வேட்டு

2.வரில் நற்காவிரி நாடாழ்வான தேசி ஆளப்பிறந்தான் மும்முடி சோழச் சக்கரவர்த்தி ஆன அரங்கராயரே

3 ந் நான் உகந்தருளுவித்த வேதநாயகப் பெருமாளுக்குப் பவித்தர மாணிக்கத்தில் புதுக்குளத்தில் வடக்...

4.ரம்பில் வழிடை காணியில் தன்ம சங்காதி கோலால் 1/4 இக்காலுக்கு...

மேற்கூறியவற்றான் கி.பி.13ஆம் நூற்றாண்டில் வேட்டுவத்தலைவர்கள் அரசாட்சியில் பல உயர் பதவிகளைப் பெற்று மன்னனால் பெரிதும் மதிக்கப்பட்டனர் என்பது புலனாகும். வீரசிங்கன் திருநாடாழ்வான் என்றும் அரங்கராயர் 'நாடாழ்வான்' மும்முடிச் சோழச்சக்கரவர்த்தி என்றும் போற்றப்பட்டமை இதற்குச் சான்றாகும். இவற்றால் வேட்டுவத்தலைவர்களின் சிறப்பும் பெருமையும் உணரப்படுகின்றது.

**வணங்கும் தெய்வங்கள் :** புகழ்மிகு பில்ல வேட்டுவ குலத்தினர்க்குக் கொங்கு நாட்டில் குலதெய்வக் கோயில்கள் பல உள்ளன. அவற்றுள் அக்கரைப்பட்டியில் உள்ள முத்துசாமி, ஜேடர்பாளையத்திலுள்ள பொன்காளியம்மன், முத்தூரிலுள்ள அழகுநாச்சியம்மன், வல்லியெரிச்சலில் சொலக்காட்டு கருப்பண்ணசாமி, வெங்கம்பூரில் (கொடுமுடியருகே) பொன்காளியம்மன். தண்ணாசியப்பன். கொடையூர் குங்குமக்காளியம்மன். கலியனூரில் கரடிப்பட்டி) ராஜகாளியம்மன். இராக்காகோயில். இளம்பல்லியில் சின்னபேச்சி, பெரிய பேச்சி, பத்ரகாளியம்மன். சோழசிராமணியில் சௌந்தர நாயகியம்மன், குன்னமலையில் அப்பிச்சிமார்கோயில் ஆகியவை குறிப்பிடத்தகவையாகும்.

பில்ல வேட்டுவ குலத்தைச் சேர்ந்த வேட்டுவப் பெருமக்கள் ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். 'பஞ்சவர்ணராஜ காவியம்' எனும் நூல் 'நல்லுருக்கா நாட்டில் புல்ல வேட்டுவர்' என்று குறிப்பிடுவதும் இங்கே நினைவு கூறத்தக்கது.

தென்னிலைச் செப்பேட்டில் முக்கியஸ்தர்களாகக் குறிக்கப் பெற்றுள்ளோருள் பில்லை வேட்டுவ சம்பந்தராயக் கவுண்டனும் ஒருவன் என்பது பில்லை வேட்டுவருக்குப் பெருமை சேர்ப்பதாகும்

**3) கரடி வேட்டுவார் நடுகல்**

*இடம் : கரூர் மாவட்டம், வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில்.*

*காலம் : வீரராசேந்திரசோழனின் 41ஆம் ஆட்சியாண்டு; கிபி.1248*

*செய்தி : கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவரையர் கோயிலில் கல்வெட்டு*

*ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராசகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் சிரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு 41வது வீரசோழ மண்டலத்து வெங்கல நாட்டு திருவெஞ்சமாக்கூடல் கறடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவரையன் பிள்ளைத் திருவெண் உடையார் வெஞ்சமாக் கூடல் ஆளுடையார் விகிர்தர்க்கு நான் வை - தீத சந்தியாதீபம் ஒன்றுக்குக் குடுத்த பொன் கழஞ்சு இப்பொன் 1 .ழஞ்சுங் கைக்கொண்டோங் காணி.யுடைய சிவப்பிராமணன் நாயகன் திருவாளனான எதிரிலி சோழ பட்டன் உள்ளிட்டாரும் வடுகன் ஆண்டானான திருஞானசம்பந்த பட்டனும் இ(வ்)வனைவோமுஞ் சந்திராதித்தவரை குடங்கோறி குச்சிகொண்டு புகுவான் ஒரு விளக்கெ.ரிப்பதாக சம்மதித்து கல்வெட்டிக் குடுத்தோம் இ(வ்)வனைவோமும்*

*2) இடம் : கரூர்மாவட்டம், கரூர் வட்டம், வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில். காலம் : கி.பி.13ஆம் நூற்றாண்டு*

*செய்தி : அரசன் வெஞ்சமாங்கூடல் ஊரைக் கோயிலுக்குக் கொடுத்த கொடை ஆவணத்தில் வேட்டுவர்குலப் பெருமக்கள் அலுவலராகக் கையெழுத்திட்டுள்ளனர்.*

கல்வெட்டு: ஸ்வஸ்திஸ்ரீ கோநேரின்மை கொண்டான் ஆளுடையார் திருவெஞ்சமாங்கூடல். ஆளுடையார் தேவகன்மிகளுக்கு நம் ஓலை குடுத்த பரிசாவது திருவெஞ்சமாங்கூடல் ஆளுடையார்.க்குத் திருவெஞ்சமாங்கூடலைக் குடுத்தோம் இவ்வூர்க்குளக் கட்டுகளும் ........... வசெட்டிக்குளம் மடை அடைச்சு வாய்க்கால் பாஞ்சு விளையக் கடவதும் (குளம் அமைத்து நீர்ப்பாசனம் அமைத்து கொடுத்தனர்) மேல்கரையில் நெடுங்குழியிலணையுள்பட்ட விளைவதுவும் தெலப்பாடி கிழக்கும் நாகபள்ளி இலந்தை மடையும் கல்லா . டத்துக்குத் தெற்கும் வீரபாண்டியன் கிணற்றுக்கு மேற்கும் பறப்புத்துறைக்கு வடக்கும். இன்னான் கெல்லைக்குட்பட்ட புற்றும் தெற்றியும் உடும்போடி ஆமை தவழியும் மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் ஆளுடையார் திருவெஞ்சமாங் கூடல் உடையார்க்கு

9. குடுத்தோம் இவ்வூராலுள்ள இறைபுரவு சிற்றாயம் எலவை உகவை மற்றும் எப்பேற்

10. பட்டதுவும் மன்றுபாடு கற்றுப்புற்போகா முற்றூட்டும் ஆளுடையா

11.ர் திருவெஞ்சமாங்கூடல் உடையார்க்குக் தெண்டங்குற்றம் குடுத்தோம் நந்தமரானார் பாற்படுத்திக்

12. குடுக்க இப்படிக்கு ஓலையில் நம் எழுத்திட்டுக் குடுத்தோம் இப்படி சந்திரா

13. தித்தவல் செல்வதாக செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்க

14. இப்படிக்கு இவை விலாடத்தரையன் எழுத்து இப்படிக்குக் காடு வெட்டி எழுத்து

15. வேட்டுவரில் கரடி குல சிறுவந் சிறுவனான மேனாட்டரையனும் வெளி கொச்சந் பெரியான்

16.கூடல்............ வேட்டுவரில் செங்காலன்.

3) இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம், புட்பவன முடையார் கோயில் முன்மண்டப மேல்புறச்சுவர்.

காலம் : விக்கிரம சோழதேவனின் 14ஆம் ஆட்சியாண்டு; கிபி. 1287

செய்தி : வேட்டமங்கலம் கோயிலில் நடுவிற்சேரிக் கரடி வேட்டுவர்

செய்யபிள்ளை சந்தியா தீபம் வைத்தார். கல்வெட்டு 1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 14வது கிழங்கநாட்டு வேட்டமங்கலத்து நடுவிற்சேரிக் கறடி வேட்டு வரில் செய்யபிள்ளை செய்யபிள்ளையேன் வேட்டமங்கலத்தில் நாயனார் புட்பவனமுடையார்க்குச் சந்தியாதீப விளக்கொன்றுக்கு நான் இக்கோயிலில் பிராமணர்க்குக் குடுத்த பழஞ்சலாகை அச்சு ஒன்றுக்கும் சந்திராதித்தவரை குடங்கொடு கோயில் புகுவான் எரிக் 10.கக் கடவான் இது பன்மாகேசுவரர் ரட்சை

வேட்டுவ சமுதாயப் பிரிவுகளுள் கரடியும் ஒன்றாகும். இவர்களது குலச்சின்னம் கரடி ஆகும். இவர்கள் தொடக்க காலத்தில் கரடியை வளர்த்தவர்களாகவும் இருக்கலாம். கொங்கு நாட்டில் இவர்கள் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் கரூர்ப் பகுதியில் உள்ள சேமங்கி, முத்தனூர், மறவாபாளையம், குந்தானிபாளையம், நொய்யல், வேட்டமங்கலம், ஆவுடையார் பாளையம் ஆகிய இடங்களில் இக்குலத்தினர் செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். நாமக்கல், ஈரோடு மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இவர்கள் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

நொய்யல் செல்லாண்டியம்மன். ஏழூர் பண்ணையம்மன், பொன்னம்பாளையம் கருப்பண்ணசாமி முதலான குலதெய்வங்களை இவர்கள் வழிபடுகின்றனர்.

கரடி குலமக்கள் இறையன்பில் சிறந்து விளங்கினர். திருக்கோயில்களில் பூசனைகள் தொடர்ந்து நடைபெற அறக்கொடைகள் அளித்துள்ளனர். இக்குல நாயகன் மானாபரணன் சோழர் ஆட்சிக்காலத்தில் பல்லவரையன் பட்டத்துடன் சிறந்து அட்சியாளனாகத் திகழ்ந்தான். இவன் கரூர் மாவட்டம் வெஞ்சமாங்கூடல் விக்ர்தீசுவரர் திருக்கோயிலில் சந்தியாதீபம் ஒன்று எறிக்க ஒரு கழஞ்சு பொன் தானம் செய்துள்ளான். இதனை வீராசேந்திர சோழனின் 41ஆம் ஆட்சியாண்டினதான (கி.பி.1248) விகிர்தீசுவரர் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கரூருக்கு மேற்கே ஈரோடு சாலையில் அமைந்துள்ள வேட்டமங்கலம் புட்பவனமுடையார் திருக்கோயிலில் சந்தியாதீபம் ஒன்று வைக்க நடுவிற்சேரிக் கரடி வேட்டுவன் செய்ய பிள்ளை என்பான் தானமளித்துள்ளான். விக்கிரம சோழதேவனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி.1287) கல்வெட்டின் மூலம் இச்செய்தி

அறியப்படுகின்றது. சில அறக்கொடைகளும் அளித்துள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் திருவெஞ்சமாக்கூடல் சிவன் கோயிலுக்கு மன்னன் திருவெஞ்சமாக்கூடலையே தானமாக அளித்துள்ள கொடை ஆவணத்தில் வேட்டுவப் பெருமக்களும் அலுவலர்களாகக் கையெழுத்து இட்டுள்ளனர். அவர்களுள் கரடிகுல சிறுவந்சிறுவனான மேனாட்டு அரையனும் ஒருவன் என்பது பெருமைக்குரியது. கரடிகுல வேட்டுவர் நினைவாக கொங்கு நாட்டில் சில ஊர்கள் உள்ளன. அவற்றுள் கரடியூர், கரடி கோயில் குறிப்பிடத்தக்கன.

**4) கிழங்கு வேட்டுவர் நடுகல்**

கிழங்க வேட்டுவர் இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி கவுண்டம் பாளையம், நத்தக்காடு.

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : தலையநல்லூரில் இருந்த கிழங்க வேட்டுவரில் பெரிய கிழங்கன் போரில் வீரமரணம் அடைந்தார். அவருக்கு எடுக்கப்பட்ட நடுகல் (இப்போது இந்நடுகல் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது). கல்வெட்டு ஊரில் கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன். (கொங்கு 24 நாடுகளில் ஒன்றான கிழங்க நாடு கிழங்க வேட்டுவர் ஆட்சி செய்த நாடாகும்)

**5) முன்னை (மின்ன) வேட்டுவர் நடுகல்**

“சீருலவும் முன்னை குலன்” என்று ‘வேட்டுவர் கலிவெண்பா’வில் சிறப்பித்துக் கூறப்பெறும் முன்னை வேட்டுவ குலம் கொங்கு நாட்டின் பூர்வகுடியினைச் சார்ந்த குலம் ஆகும். முன்னை என்பது முந்தைய, முந்திய, முதல் - அதாவது ஆதிகுலம் ஆகும்.

இது மின்னகுலம் எனவும் மருவி வழங்கப்பெறுகின்றது. “மின்ன வேட்டுவம்பாளையம்” எனும் பெயர் கொண்ட ஊர் இக்குலப் பிரிவின் நினைவாக அமைந்ததேயாகும். இவ்வூர் சலங்கபாளையத்தின் அருகில் அமைந்துள்ளது. மின்னப்பள்ளி என்ற ஊரும் மின்ன வேட்டுவரை நினைவுபடுத்துகின்றது.

இம்மின்னப்பள்ளி வேட்டுவரின் காணியுரிமையில் இருந்த ஊராகும். கரூர் அருகிலுள்ள ஆத்தூர் சோழியம்மன் பட்டயத்தில் இடம் பெறும் அளவிற்கு முன்னை வேட்டுவன் றாய பூசாரிக் கவுண்டன் புகழ்பெற்று விளங்கிய காணியாளன் ஆவான். இக்காணியாளன் தென்னிலைச் செப்பேட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளான். தென்னிலைப் பட்டயத்தில் சாட்சிக் கையெழுத்து இட்டவர்களுள் முன்னை வேட்டுவன் அல்லாளிக் கவுண்டனும், துக்காச்சி முன்னை வேட்டுவன் காளியப்பகவுண்டர் இங்கே நினைவு கூர்தற்குரியது.

முன்னை வேட்டுவக் காணியாளர்களுள் கோசணம் காணியாளர் மிகவும் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார். இவர் பருவாச்சி அய்யருக்கு கறவைப்பசு ஒன்றைத் தானமாக அளித்துள்ளார். இதனை ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் கோசணத்தில் நடப்பட்டுள்ள குத்துக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு உணர்த்துகின்றது.

மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் கொங்கு நாட்டின் சில பகுதிகளில் நாயக்கர் ஆதிக்கம் ஏற்பட்டது. அப்போது காரியகர்த்தராக விளங்கியவர் ஸ்ரீ லட்சுமனாயக்கரய்யன் ஆவார். அதுபோழ்து மின்ன வேட்டுவரில் பொன்ன கவுண்டர் மகனும் காளியப்ப கவுண்டரின் பேரனும் காளியப்ப கவுண்டர் என்பார் ஒடுவங்க நாட்டிலுள்ள நல்லூர் எனும் பதியில் தன் குலதெய்வமான கரியகாளியம்மனையும் கண்ணப்பநாயனாரையும், கருப்பணசாமியையும் எழுந்தருளுவித்தார். அடுத்து அவர் அங்கு பெரிய திருக்கோயிலையும் கட்டுவித்து, அங்கு நித்திய பூசனைகள் தினமும் நடைபெற நிலதானமும் பசுதானமும் அளித்தார். இச்செய்தியினையும் அறச்செயலையும் நல்லூர்ப் பட்டயம் பாராட்டிப் பேசுகின்றது. இதன் காலம் 1717 ஆகும். இச்செப்பேட்டில் காளியப்பகவுண்டன் முன்னோரின் பெருமை சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. இவன், அவனிகாத்த அருக ராசாக்கள் வமிசத்து குறுபரம்பறை சீர்முன் காளத்தி கண்ணப்பி ராயினான் வமிசத்தில் பிறந்து வேடன் காணி வேட்டுவன் கொண்ட ஆண்டு அனுபவித்து வருகிற மின்ன வேட்டுவரில் காளியப்ப கவுண்டன் மகன் பொன்ன கவுண்டன் மகன் காளியப்ப கவுண்டன் என்று குறிக்கப் பெற்றுள்ளான்.

முன்னை வேட்டுவரின் குலதெய்வம் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் உள்ளன. அவற்றுள் ஈரோடு மாவட்டம் சோளங்கபாளையம் அருகிலுள்ள கிளாம்பாடி சொக்கநாச்சியம்மன். தாண்டாம்பாளையம் கன்னிமார், சத்தி வட்டம் கெஞ்சனூர் கவுந்தப்பாளையம் அருகில் நல்லூர் கரியகாளியம்மன், வாழ்வந்தி மாரியம்மன், காட்டுப்பாளையம் மசரியாத்தா, அப்பிச்சிமார். திருசெங்கோடு வட்டம் முளசி அருகே இறையமங்கலம் பத்ரகாளியம்மன், கருப்பண்ணசாமி, பிரிதி அத்திபாளையம் வீரமாத்தி, கருப்பண்ணசாமி. தாசம்பாளையம் கருப்பராயசாமி, மணியம்பாளையம் (கவுந்தப்பாடி, பட்டயகாளிபாளையம் அருகே) ராக்கியண்ணன் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

முன்னை வேட்டுவர் கோசணத்தின் காணியாளர்களாகவும் விளங்கினர். மின்ன வேட்டுவர் நினைவாக ஈரோடு மாவட்டம் சலங்கபாளையம் அருகில் மின்ன வேட்டுவம்பாளையம் அமைந்துள்ளது. கரூருக்கு அருகில் மின்னாம்பள்ளி உள்ளது. தென்னிலைச் செப்பேடுகள் மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆத்தூர்ச் செப்பேட்டில் வேட்டுவப் பெருமக்கள் காணியுரிமையில் “மின்னப்பள்ளி” இருந்ததாகக் குறிப்பிடும் இவ்வூர்ப் பெயர்கள் அனைத்தும் மின்ன வேட்டுவரை நினைவுபடுத்துகின்றது.

**6) சிறுத்தலை வேட்டுவர்**

கொங்குநாட்டில் புகழுடன் வாழ்ந்த குலங்களுள் சிறுத்தலை வேட்டுவர் குலமும் ஒன்று. பண்டைக்காலத்தில் சிறுத்தலையான் எனும் பெயரில் மாவீரன் ஒருவன் இருந்தான். “கபிலர் மலை முதல் கைதீண்டாப்பாழி வரையும் ஆனைமலை முதல் ஆண்டாங்கோயில் வரை ஆண்டான் சிறுத்தலையனே” என்று கொங்கு நாட்டுப் பழம்பாடல் ஒன்று சிறுதலையனின் ஆட்சி பற்றிக் குறிப்பிடுகின்றது. இப்பாட்டினைக் கரூர் கட்டபொம்மை என்பாரும் நம்பிராஜன் எனும் சின்னத்தம்பி என்பாரும் இசையுடன் பாடக் கேட்டு மகிழ்ந்தேன். சிறுத்தலையன் ஆண்டு வந்த அரசின் கோநகர் மணநாட்டைச் சேர்ந்த தென்னிலை ஆகும். கரூரின் எல்லைப் பகுதியில் சிறுத்தலையனின் நிலைப்படை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஈடு இணையற்ற சிறுத்தலையனின் கால் வழியினர் சிறுத்தலை குலத்தவர் என்றும் சிறுத்தலை வேட்டுவர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் வீரத்திலும் வெற்றியிலும் மேம்பட்டு விளங்கினர். எனவேதான் வேட்டுவர் கலிவெண்பாவும் இவர்களை 'வீரன் சிறுத்தலை குலத்தோன் என்று சிறப்பித்துப் பேசுகின்றது. கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முன்பே சிறுத்தலை வேட்டுவன் சிறந்த வீரனாகவும் ஆற்றல்மிகு ஆட்சியாளனாகவும் விளங்கினான் எனத் தெரிகிறது.

கி.பி.10ஆம் நூற்றாண்டு தொடங்கி 13-ஆம் நூற்றாண்டு முடிய சிறுத்தலை வேட்டுவர்கள் கீழ்க் கொங்கில் பெரும் புகழ் பெற்று விளங்கினர். கரூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் சிறுத்தலையனின் வழிவந்தோர் சிறந்த ஆட்சியாளர்களாகவும் படை வீரர்களாகவும் விளங்கினர். இவர்கள் இறையன்பில் மேம்பட்டு விளங்கியதால் பல கோயில்களுக்கு விளக்கெரிக்க அறக்கொடைகள் அளித்துள்ளனர். இவர்களது அறக்கொடைகள் சிலவற்றை இங்கே காணலாம்.

குலோத்துங்க சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1162) தென்கரைக் கொடிவேரி சிறுத்தலை வேட்டுவரில் தாமன் தாமனான இருக்கோளன் என்பான் கொடிவேரி முன்ணையிசுவரர் கோயிலில் இரண்டு சந்தியா தீபம் வைக்கப் பனிக்கொடை அளித்துள்ளான். இது ஈரோடு மாவட்டம், கோப வட்டம் கொடிவேரி சிவன் கோயிலில் காணப்படும் கீழ்க்காணும் கல்வெட்டுப் பதிவு செய்துள்ளது.

"வடபரிசார நாட்டில் தெந்கரை கொடுவேலியிருக்கும் சிறுத்தலை வேட்டுவரில் தாமந்தாம நாந இருங்கோளனேன் ஆளுடையார் திரு முன்னை ஆண்டாற்கு வச்ச சாந்தியாதீப விளக்கு இரண்டுக்கு ஸ்ரீபண்டாரத் தொடுக்கிற ஆ னை அச்சு ஸ்ரீ அக்கி புதுச்சலாகை..."

அடுத்து இதே திருக்கோயிலுக்கு கொடிவேரி சிறுத்தலை வேட்டுவனான இருங்கோளன் கந்தமன் என்பான் பதினைந்து அச்சு பணம் கொடுத்து சந்தியா தீபம் ஒன்றினை நிறுவினான். இதனை வீர ராசேந்திர சோழனின் 22-ஆம் ஆட்சியாண்டினதான (கி.பி.1229) கொடிவேரி முன்னையீசுவரர் கோயில் கல்வெட்டு அறிவிக்கின்றது.

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் பொய்மான் கரடு பாறையில் காணப்படும் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டின் மூலம் மற்றொரு சிறுத்தலை வேட்டுவனின் அறச்செயல் தெரிய வருகிறது. சிறுத்தலை வேட்டுவனான கோடாலி மீண்டான் என்பான் இத்தர்மத்தைச் செய்துள்ளான் என்பதே கல்வெட்டுச் செய்தி. இதோ அக்கல்வெட்டு :

“கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு பெருநரில் சிறுத்தலை வேட்டுவன் கோடாலி மண்ணுக்கு மீண்டான் தன்மம் ” தம் அறக்கொடைகளால் புகழ்பெற்று விளங்கும் சிறுத்தலை வேட்டுவப் பெருமக்கள் ஈரோடு மாவட்டம் காஞ்சிக் கோயில் எனும் ஊரில் எழுந்தருளியுள்ள பூதேவி அம்மன், ஸ்ரீ தேவி அம்மன் ஆகியவற்றைத் தம் குல தெய்வமாக வழிபடுகின்றனர். ஆரம்பகால முதற்கொண்டே கன்னிமார் எழுவரை இவர்கள் வணங்கி வருகின்றனர்.கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த சோழர் பாண்டியர், கொங்குச் சோழர் கொங்குப் பண்டியர் ஆகியோரது ஆட்சியின் போது சிறுத்தலை வேட்டுவர்கள் அரசியல் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர். தென்னிலைப் பட்டயத்தில் சாட்சிக் கையொப்பமிட்டவர்களுள் சிறுத்தலை வேட்டுவன் காசியப்ப கவுண்டனும் சிறுத்தலை வேட்டுவன் பெருமாள் கவுண்டனும் இடம் பெற்றுள்ளதால், இவர்கள் உயர் பதவியில் இருந்துள்ளமை புலனாகும். தென்னிலைப் பட்டயம் இரண்டில் தென்னிலைக் கிராமத்தில் வெங்கச்சி வேட்டுவன் குட்டைக் கவுண்டன் கோயில் மும்பாடு ராச முப்பாடு பெற்றதில் சாட்சியாக நின்றவருள் சிறுத்தலை வேட்டுவன் மாகாளி வேட்டுவனும் குறிக்கப் பெற்றுள்ளான். ஆத்தூர்ப் பட்டயத்திலும் சிறுத்தலை வேட்டுவன் காசியப்பன் குறிப்பிடப்பட்டுள்ளான். மேற்கூறியவற்றான் கொங்குச் சமுதாயத்தில் சிறுத்தலை வேட்டுவப் பெருமக்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தனர் என்பது புலனாகும். சிறுத்தலை வேட்டுவருள் வடமலை ராயக்கவுண்டன் என்பான் புகழ்மிகு பட்டக்காரானாகத் திகழ்ந்தான். இவன் மணநாட்டில் அமைந்துள்ள தென்னிலையைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கு காவல் மிகுந்த கோட்டை கட்டி ஆண்டான். முப்புரிமலை வெங்கடரமணசாமி கோயில் இவர்களது முக்கியமான வழிபாட்டுத்தலமாகும்.

**7) பாண்டிய வேட்டுவர்**

*1) இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஒலகடம், ஒலகீசுவரர் கோயில்.*

*காலம் : வீரராசேந்திர சோழனின் 23ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1230*

*செய்தி : வடகரை நாட்டுப் புன்னம் ஊராளி பாண்டிய வேட்டுவர் மகள் பாண்டாண்டி கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.*

*கல்வெட்டு 1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்து மூன்றாவது 2. வடகரை நாட்டில் புன்னத்திருக்கும் பாண்டியவேட்டுவரில் புன்னத்தூராளி மகள் பாண்டாண்டியேன் 3. உடையார்க்குக் குடுத்த அச்சுக்கொண்டு அன்றாடு குடங்கொடு கோயில் புகுவான் சந்தியாதீப விளக்கும் 4, இட்டுப் பூசிப்பான் சந்திராதித்த பலம் உள்ளவதனையும் செல்வதாக இத்தன்மம் பன்மாகேஸ்வர ரகைஷ.*

*2) பாண்டிய வேட்டுவர்*

*இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு அண்ணன்மார் கோயில்.*

*காலம் : 20ஆம் நூற்றாண்டு*

*செய்தி : அண்ணன்மார் கோயில் 2 குதிரைகள் மாதுபட்டி, குட்டி மேக்கிப்பட்டி, புள்ளிபாளையம் பாண்டிய வேட்டுவர் அமைத்தது கூறப்படுகிறது. கல்வெட்டு அண்ணன்மார் சுவாமி துணை : மாதுபட்டி குட்டிமேக்கிபட்டி புள்ளிபாளையம் பாண்டிய வேட்டுவர் இரண்டு குதிரை உபயம்*

*3 பாண்டிய வேட்டுவர்*

*இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப் பள்ளி சீகாழிநாதர் கோயில்.*

*காலம் : வீரராசேந்திர சோழனின் 23ஆம் ஆட்சியாண்டு; கி.ப. 1230*

*செய்தி : பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன் திருக்கோயிலைப் புதுப்பித்தார். கல்வெட்டு ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க வீர ராசேந்திர தேவற்கு யாண்டு 23 ஆ வது நாடாழ்வார் நாட்டுப் பருத்திப் பள்ளி தேவகோ யில் திருக்கற்றளி பொதுக்கினேன் பருத்திப் பள்ளியூராளி பாண்டிய*

*வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கனேன். (பொதுக்குதல் - உள்ள கற்களை மட்டும் பயன்படுத்தித் திருப்பணி செய்தல் புதுக்குதல் - புதிய கற்களையும் பயன்படுத்தித் திருப்பணி செய்தல்.) (தகவல் - காரைக்குடி அறிஞர் சா. கணேசன்).*

**வேங்கை வேட்டுவர்**

*இடம் : நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், கைலாசநாதர் கோயில் அன்னபூரணி அம்மன் சன்னதி.*

*காலம் : சுந்தரபாண்டியன், 13ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1298.*

*செய்தி : வெங்கை வேட்டுவர் என்ற குறிப்பு மட்டும் உள்ளது.*

*கல்வெட்டு 1. சக ஆண்டு 1220 திரிபுவனச் சக்கரவர்த்*
*2. திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு*
*3. யாண்டு 13வது வடகரை நாட்டு*
*4. ப வெங்கை வேட்டுவர் .......*

*மதுரை புலிக்கவுண்டர் வேங்கை வேட்டுவார் ஆவார்*

**பூவாணி வேட்டுவர் வேளான்**

*இடம் : கரூர் மாவட்டம், கரூர் பசுபதீசுவரர் கோயில், இரண்டாம் பிரகாரம் நுழைவாயில்*

*இடப்புறம். காலம் : மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியாண்டு 25; கி.பி. 1203*

*செய்தி : புன்னத்துப் பூவாணி வேட்டுவரில் வேளான் கரியான் ஆன மருதங்க வேளான் கரூர் சிவாலயத்துக்கு 3 கழஞ்சு பொன் கொடை கொடுத்தார். தேவணப்பள்ளி ஊர்ச் சபையார் அப்பொன்னைப் பெற்றுச் சில நிலங்களை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்தனர். கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஈழமும் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கருவூரும் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது சோழ கேரள மண்டலத்து வெங்கால நாட்டு கருவூரான முடிவழங்கு சோழபுரத்து உடையார் திரு ஆநிலை ஆளுடையார்க்கு இம்மண்டலத்து இந்நாட்டு புன்னத்து பூவாணிய வேட்டுவரில் வேளான் கரியானான மருதங்க வேளான் இந்நாயனார் ஸ்ரீபன் டாரத்துக்கு ஒடுக்கின பொன் காசுகல்லால் துளைநிறை செம்பொன்*

முக்கழஞ்சு இப்பொன் முக்கழஞ்சும் இம்மண்டலத்துத் தட்டையூர் நாட்டு தேவணப்பள்ளி ஊரோம் வினியோகத்துக்குக் கொண்ட பொன் முக்கழஞ்சும் மூலபருத்தியரான ஸ்ரீ சண்டேஸ்வரதேவர் ஸ்ரீ ஹஸ்தத்தால் இப்பொன் முக்கழஞ்சும் கைக்கொண்டு தேவதானம் திருநாமத்துக்காணியாக விற்றுக் குடுத்த நிலம் மேல்ப்புலத்து ஆலோடு போயிலால் நீர் பாயும். நிலம் பாடிகாப்பான்செய் என்னும் பேருடை நிலம் பெரும்படி அரைமாவும் இதுக்கெல்லை கீழ்ப்பாற்கெல்லை நொம்பலூர் நத்தத்துக்கு மேற்கும் வடபாற்கெல்லை விருத்திக்குத் தெற்கும் மேல்பாற் கெல்லை தெக்கு நோக்கி நீர் பாய்கிற கவருக்குக் கிழக்கும் தென்பாற்கெல்லை அணுக்க நம்பி செய்க்கு வடக்கும் இப்பெருநான்கெல்லைக் குள்பட்ட இவ்வரைமா நிலமும் இறையிலி .. முற்றூட்டாக இந்நாயனார்க்கு தேவதானமாவதாகவும் இந்நிலத்தால் வந்த இறை வரி சிற்றாயம் எற்ச்சோறு கூற்றரிசி எப்பேர்ப்பட்டனவும் ஊரோமே ஏறநிட்டுக் கொண்டு இந்நிலம் அரைமாவும் இறையிலி. தேவதானமாகக் குடுத்து செந்நீர் வட்டி செய்யக் கடவதில்லை யாகவும் புந்நீர் விட்டுப் பாய்ச்சிக் கொள்வதாகவும் இப்படி சம்மதித்து இறையிலி தேவதானமாகக் கல்வெட்டிக் குடுத்தோம் தேவணப்பள்ளி ஊரோம்

**மன்னன் வெஞ்சமன்**

**சங்க காலம் :**

தமிழரின் தங்க காலமான சங்க காலத்திலேயே வேட்டுவர் சிலர் குறுநில மன்னராகத் திகழ்ந்தனர். இவர்களுள் கடிய நெடு வேட்டுவன், வல்வில் ஓரி, ஆய் அண்டிரன், ஆய் எயினன் அன்னி, அறுகை, தோட்டிமலையை ஆண்ட கண்டீரக் கோப் பெருநற்கிள்ளி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். அடுத்து சங்க காலப் புலவர்களுள் எயிற்றியனார், இளவெயினனார், எயினந்தையார், எழுஉப்பன்றி நாகன் குமரனார் போன்றவர்களும், வெறிபாடிய காமக்கண்ணியார், கழாரர் சீரன் எயிற்றி முதலான பெண்பாற்புலவர்களும் வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவராவர். 15:2, 153,158,159, 189, 202, 204, 247, 324 எண் கொண்ட புறநானூற்றுப் பாடல்கள் வேட்டுவ வேந்தரின் சிறப்பைப் பேசுகின்றன.

எனவே தான் வி. இராமமூர்த்தி அவர்களும் சிலப்பதிகார காலத்திற்கு முன்னதாகவே வேட்டுவ மக்கள் தமிழகத்தில் அதுவும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலே மறவர்களாக வாழ்ந்த போதிலும்

நாகரிகம் பெற்ற மக்களாகச் சிறந்த பண்பாடு உடையவர்களாக வாழ்ந்தமை பற்றி சங்க இலக்கியங்களே பலபடக் கூறுகின்றன

**வெஞ்சமன் :**

வெஞ்சமன் வேட்டுவ மரபுகளான காவலியர், மாவலியர், பூவலியர், வேட்டுவர் எனும் பிரிவினுள் பூவலியர் மரபைச் சேர்ந்தவன். இளமைக்காலத்திலேயே வாள்வித்தை, வில்வித்தை, குதிரை ஏற்றம், போர்ப்பயிற்சி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று மிகப்பெரிய வீரனாகத் திகழ்ந்தான். நீச்சல் கலையிலும் இணையற்று விளங்கினான். உரிய வயது வந்தவுடன் இளவரசுப் பதவிபெற்றான். இளவரசனாக இருந்த காலத்திலேயே தனது தந்தையின் படைகளுக்குத் தலைமைதாங்கிச் சென்று பல வெற்றிகளைப் பெற்றான். ஆட்சித்துறையிலும் இவன் நல்ல தேர்ச்சி அடைந்தான்.

இளமைக் காலத்திலிருந்தே இவன் சிவபக்தி மிகுந்தவனாக வளர்க்கப்பட்டான். தனது முன்னோனும் குல தெய்வமுமான திருக்கண்ணப்பர் ஈடுபட்டான். சைவ பூசையில் நெறி தழைக்க இவன் தனது தந்தையாருடன் இணைந்து குல தெய்வத்திற்கு ஆண்டுவிழாக்கள் எடுத்து அன்னதானம் செய்து வந்தான்.

**அரண்களை வலுப்படுத்துதல் :**

தனது தந்தையின் இறப்பிற்குப்பின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டான். தனது நாட்டின் படைபலத்தைப் பெருக்கினான். எல்லைப் புறங்களில் வலிமை மிக்க படைகளை நிறுத்தி வைத்தான். படைகளுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தான். காடுகளால் சூழப்பட்டிருந்த தனது தலைநகரத்தில், கோட்டை கட்டினான், மலையரண்களைச் செப்பனிட்டான்: அகழிகளை ஆழப்படுத்தினான்; மதிற்சுவர்களைப் புதுப்பித்தான்.

**நாட்டை வளப்படுத்துதல் :**

காட்டாறுகளான குடவனாறு, சிற்றாறு ஆகியவற்றில் அடிக்கடி வெள்ளம் பெருக்கெடுத்து நாட்டில் அழிவுகளை ஏற்படுத்தின. எனவே வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அணைகளைக் கட்டினான். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கக் கால்வாய்களும், ஏரி, குளங்களும், கிணறுகளும் வெட்டினான் இதன் விளைவாக

வேளாண்மை பெருகியது. காட்டை அழித்துப் புதிய சாலைகள் அமைத்தான்; உள் நாட்டு வணிகம் வளர்ந்தது; இதனால் நாட்டில் வளம் பெருகியது. இன்று ராஜாப்பட்டி என அழைக்கப்படும் இடத்தில் அரண்மனைகள் கட்டினான். இவ்வேந்தனது புகழும் நாலா பக்கங்களிலும் பரவியது. இவன் சங்ககாலக் கரிகால் சோழனுக்கு இணையாக நாட்டை வளப்படுத்தினான் என்றால் மிகையாகாது.

**திருக்கோயில்கள் அமைத்தல்:**

திருவெஞ்சமாக்கூடலில் சிவன் கோயில் ஒன்றினைக் கட்டினான். அதில் அம்மனுக்கும் தனிச் சந்நிதி அமைத்தான். இறைவர் விகிர்தீஸ்வரர் என்றும் அம்மை பண்ணேர் மொழியம்மை (மதுரபாஷினி) என்றும் அழைக்கப்பட்டனர். திருக்கண்ணப்பருக்கும் தனிச்சந்நிதி நிறுவினான். வேட்டுவரின் குல தெய்வமான காளிக்கும் கோயில் சுட்டினான். இதுவே பொன்பரப்பி அம்மன் என அழைக்கப்பட்டது. மிகவும் சக்தி வாய்ந்த பொன்பரப்பி அம்மனுக்கு மாசி மகத்தின் போது திருவிழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

திருக்கோயில்களில் வழிபாடுகள் குறைவற நடைபெற பல அறக்கட்டளைகள் விடப்பட்டன. வேட்டுவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த திருவெஞ்சமாங்கூடல் பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் அம்மன் (துர்க்கை) விழா சிறப்பாக நடைபெற்றது.

“ வேடர் விரும்பிவாழ் வெஞ்சமாக்கூடல் ”

என்று சுந்தரர் பாடுவதால் இப்பகுதியில் வேட்டுவர் நிறைந்திருந்தமை புலனாகும். திருவெஞ்சமாக்கூடல் கோயில் கல்வெட்டுக்களில் வேட்டுவரின் இனப்பிரிவினர் (குலங்கள்) பலர் குறிப்பிடப் பெற்றிருப்பதாலும் வேட்டுவர் இப்பகுதியில் அதிகமாக வாழ்ந்தமை புலனாகும். எடுத்துக்காட்டாக காட்டு வேட்டுவர், கரடி வேட்டுவர், கருவண்ட வேட்டுவர், பெருமாள் வேட்டுவர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அடுத்து காடுவெட்டி, தலையூர் நாட்டு அரையர்கள், தென் கரைநாட்டு மணலூர் நாட்டு, அரைய நாட்டு அரையர்கள். தலையூர் உறுப்படை அரையர்களில் பாணிப் பெருமாள் போன்ற வேட்டுவரைக் குறிக்கும் சொற்களும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. அரையர் என்பது போர் வீரரைக் குறிக்கும்.

வெஞ்சமனின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியரது செல்வாக்கு குறைந்தது. களப்பிரரின் கோரப்பிடியில் தமிழ்நாட்டின் பெரும்பகுதி தத்தளித்தது. தமிழ் வேந்தர்கள் தோற்கடிக்கப்பட்டனர். சைவ சமயம் செல்வாக்கு இழக்கத் தொடங்கியது. சமணமும் பௌத்தமும் தலையெடுத்தன. சேர, சோழ, பாண்டியர் எனும் முடியுடை மூவேந்தரும் களப்பிர வேந்தர்களால் சிறையில் அடைக்கப்பட்டனர்.

களப்பிரர் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். சமணப் படைகளைப் புறங்கண்டவன் வெஞ்சமன் என்று கூறப்படுகிறது. இவனால் வெல்லப்பட்ட சமணப்படை களப்பிரர்களின் படையாகவே இருத்தல் வேண்டும். திரு. வி. இராமமூர்த்தி அவர்கள் வெஞ்சமன் கொங்கனி அரசனின் படையை வென்றவன் ஆதல் வேண்டும் என ஊகிக்கிறார். இவ்வெஞ்சமன் சிவபெருமான் அருளால் தம்மீது போர் தொடுத்த வலிமை மிக்க சமணப் படைகளைப் புறங்காட்டி ஓடச் செய்து புகழ் பெற்றானாம். இந்தச் சமணப் படையினர் யாராக இருத்தல் கூடும்? இதற்கு இரண்டு வகையில் விடை கூறலாம். கொங்கனி வமிச அரசர்கள் சமண சமயத்தைப் பரப்பும் ஒப்பந்தத்துடன் அரசு ஏற்படுத்திக் கொண்டு சமண சமயத்தவர்களாகவே விளங்கியதால், இக் கொங்கனி அரசன் ஒருவனுடைய படையையே எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக்கூடும் அல்லது சமணச்சார்புடைய களப்பிர அரசர்களுள் ஒருவனது படையை எதிர்த்து வெற்றி பெற்று இருக்கக் கூடும். களப்பிரர்கள் சமண சமயத்தவர்களே என்பதைக் கல்லாடம் எனும் தமிழ்நூல் கூறும். எனவே சமண சமயத்தவர்களாகிய களப்பிர அரசர்கள் படையையே வெஞ்சமன் தாக்கி வெற்றி பெற்றிருத்தல் கூடும் என்பதே பொருத்தமானது என்று இராமமூர்த்தி கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

வெஞ்சமனின் களப்பிரர் வெற்றியை நாம் வேறு விதமாகவும் கருத இடமுண்டு. குறிப்பு நாட்டுச் செப்பேடு குருகுலத்து வேட்டுவ ராசாக்கள் களப்பிர அரசர்களை வென்று, சிறைப்பட்டிருந்த மூவேந்தரையும் விடுவித்தனர் என்றும், இதனால் மகிழ்ந்த மூவேந்தர் தமக்கு உதவிய வேட்டுவ ராசாக்களுக்கு கருவூர்ப் பசுபதியீசர் திருக்கோயிலில் முடிசூட்டி, அவர்களைக் கொங்கு

நாட்டின் அதிபதிகளாக ஆட்சிபுரியச் செய்தனர் என்றும் கூறுகிறது. இந்நிகழ்ச்சி காஞ்சிபுரம் செப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளது. களப்பிர அரசர்களை வென்ற வேட்டுவ அரசர்களுள் வெஞ்சமனும் ஒருவன் எனக்கொள்வது நலம். குறிப்பு நாட்டுச் செப்பேட்டைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

அடுத்து ஆதித்த சோழன் ராஜா வேடர்களை வென்று, கொங்கு நாட்டைக் கைப்பற்றினான் என்று கொங்கு தேச ராஜாக்கள் கூறுவதனையும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே முடிசூடப்பெற்ற வேட்டுவர்கள் கொங்கு நாட்டின் கரூவூரில் பகுதிகளில் சில நூற்றாண்டு காலம் ஆட்சி புரிந்தனர் எனக் கொள்வது பொருத்தமே.

தனது கோநகரில் கோட்டை கட்டி, திருக்கோயில்கள் அமைத்து, அணைகள் கட்டி, கால்வாய்கள் வெட்டி, கிணறுகளும் குளங்களும் வெட்டி, எதிரிகளை வென்று, நாட்டு மக்களைப் பேணிக் காத்த வேட்டுவ மன்னன் வெஞ்சமனுக்கு நாட்டு மக்கள் திருவுருவச்சிலை அமைத்து வழிபட்டனர். இங்குள்ள இறைவரை வழிபட்டுப் பேறு பெற்ற இவ்வேந்தனுக்கு, பொங்கல் வைத்து பூசை செய்து திருவிழா எடுக்கின்றனர். இவ்வேந்தனது பெயரால் இந்நகரம் வெஞ்சமாங்கூடலூர் எனப்பெயர் பெற்றது.

**குறிப்பு நாட்டுப் பட்டயச் சுருக்கம்**

பெருமலை நாட்டு மன்னர்களான மிருகராஜன், களப்பாளன், அச்சுததன், பரதன், உத்தண்டன் ஆகியோர் தமிழ் நாட்டை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவரையும் வஞ்சகத்தால் தோற்கடித்துச் சிறையிட்டு கற்கோட்டையில் அடைத்து விட்டனர். பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து மூவேந்தரின் குமாரர்கள் தங்களது தந்தையரை மீட்கப் பல வகையில் முயன்றனர், முயற்சிகள் தோல்வியுற்றன.

வேட்டுவ ராஜாக்களின் வீரத்தையும் வெற்றியையும் கேள்வியுற்ற இக்குமாரர்கள், இறுதியாக உடுப்பூர் சென்று வேட்டுவ ராஜாக்களைச் சந்தித்து முறையிட முடிவு செய்தனர். எனவே உடுப்பூர் சென்று வேட்டுவ ராஜாவின் கொலுமண்டபத்தில் நுழைந்து, தனது வேண்டுகோளை மன்னனிடம் பணிவுடன்

வைத்தனர். வேட்டுவ மன்னர் தனது சகோதரர்களும் அமைச்சர்களும் புடை சூழமண்டபத்திற்கு வந்து, சிம்மாசனத்தில் அமர்ந்தனர். மூவேந்தரது குமாரர்கள் தமக்கு நேர்ந்த இன்னலை எடுத்துக்கூறி மூவேந்தரை விடுவிக்க உதவும்படி விண்ணப்பித்துக் கொண்டனர். வேட்டுவராஜனும் தங்களால் இயன்ற உதவியைச் செய்வதாக வாக்களித்தான்.

அடுத்த நாள் காலை வேட்டுவ ராஜனும், சகோதரர்களும் கொங்கு நாட்டு, வேட்டுவர் படையுடனும், வீரர்களும் முப்பத்திரெண்டு பட்டவர்த்தனர்களும் சகல படைகளும் புடை சூழ, குல தெய்வமாம் காளி தேவிக்குப் பூசையிட்டு, மலரடி வணங்கினர். பின் தன்வம்ச குருவின் பொற்பாதம் பணிந்து, ஆசி பெற்று போருக்குப் புறப்பட்டனர்.

அணி வகுத்த வேட்டுவர் படை காளஹஸ்தி நாட்டை விட்டு பொன்முகலி நதியைக் கடந்து, பெருமலை நாட்டை அடைந்தனர். ஆங்கு தனது தூதுவர்களைப் பெருமலை ராஜனிடம் அனுப்பி மூவேந்தரையும் விடுதலை செய்ய ஆணை பிறப்பக்கும்படி ஓலை அனுப்பினர். மிருகராஜன் இதற்கு மறுப்புக் கூறவே, வேட்டுவராஜாக்கள் மிருகராஜனிடம் போருக்குத் தயாராக இருக்க அறைகூவல் விடுத்தனர். வேட்டுவப் படையின் வலிமையை அறியாத மிருகராஜனின் படைகள் கொக்கரித்தன. திட்டமிட்ட படி அடுத்த நாள் இருபடைகளும் போர்க்களத்தில் சந்தித்தன. வேட்டுவப்படை வெண் சங்கநாதம் முழங்கி, வாகை மாலை அணிந்து, பஞ்சகல்யாணிப் புரவிகள் பூட்டிய தேர்களில் ஏறி, புலிக் கொடி பறக்க வஞ்சினம் கூறி போரில் குதித்தனர். வேட்டுவப்படை எதிரிகளின் தலைகளை வெட்டி வீழ்த்தின. வில்லாளிகள் பகை மன்னர்களின் தலைகளுக்குக் குறி வைத்து அவர்களை வீழ்த்தினர்.

அப்போது பூவிலவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தேரில் அமர்ந்திருந்த மிருகராஜனின் முடியையும் கொடியையும் பற்றி இழுத்து, நாசப்படுத்தினான். மிருகராஜன் கைது செய்யப்பட்டான். மிருகராஜனை வேட்டுவராஜன் கைப்படியாகப் பிடித்து, கைதியாக கோட்டைச் சிறைக்கு அழைத்துச் சென்று, அவனது கையாலேயே சிறைக்கதவுகளைத் திறக்கச் செய்தான். மூவேந்தர் விடுதலை செய்யப்பட்டனர். மூவேந்தர் கைகளில் இருந்த விலங்குகளைக்

கொண்டு மிருகராஜனையும் அவனது சகோதரர்களையும், பிணைத்துச் சிறையில் அடைத்தனர். ஒரு நன்னாளில் கரூருக்கு மூவேந்தர் வேட்டுவராஜரை அழைத்து, அவர்களை அதிகாலையில் ஆண்பொருனை நதியில் நீராட்டி, பசுபதியீசர் ஆலயத்தில் சிவனுக்கு எண்ணெய் காப்பு சாற்றி, சகல அபிஷேகங்களும் செய்து, தரிசித்துப் பின்னர் சன்னதியிலேயே கலியுகம் 4175 (4175 - 3101 = கி.பி. 1074) ஆங்கிரச வருசம் ஆடி மாதம் 8ஆம் தேதி சுக்கிரவாரம் தசமி திதி அவிட்ட நட்சத்திரம் சேர்ந்த சுபநாளில் குருகுல மன்னர் ஐவருக்கும் நரசிங்கராயர், சந்தனராயர், பல்லவராயர், பூவலராயர், ராயர் எனும் விருதுகளை வழங்கி, கொங்கு நாடுகளையும் 24 பாரம்பரியமாக ஆண்டு கொள்கவென செப்பேட்டுப் பட்டயமும் எழுதி பசுபதியீசர் முன்பு வேட்டுவ ராஜனுக்கு முடிசூட்டினர். மற்ற நால்வருக்கும் இளவரசுப் பட்டம் கட்டினர். அன்று முதற்கொண்டு கொங்கு மண்டலத்தை ராஜநீதி சிறிதும் வழுவாது வேட்டுவ ராஜாக்கள் அரசாண்டு குடிகளிடம் கொஞ்சம் கடமை பெற்று எதிரிகளிடமிருந்து நாட்டு மக்களைக் காத்து வந்தனர்.

இப்பட்டயம் கூறுகின்ற ஆண்டுக்கணக்கு ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று. கி.பி.1074இல் களப்பிரர் ஆதிக்கம் இல்லை, சேர, சோழ, பாண்டியரும் சிறையில் அடைக்கப்படவில்லை. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் நடந்த இந்நிகழ்ச்சி கால வெள்ளத்தில் மாறி வழங்கப் படுகிறது. இதன் மூலக் கருத்து யாதெனில் வேட்டுவ மன்னர்கள் களப்பிரர்களை வென்றனர் என்பது தான். அடுத்து வேட்டுவ மன்னர்கள் கரூரில் கொங்கு நாட்டு அதிபதிகளாக முடிசூட்டப்பட்டனர். களப்பிரரை ஒழித்த வேட்டுவருள் வெஞ்சமனும் ஒருவனாக இருத்தல் கூடும்.

(இப்பட்டயத்தின் செய்தியை விளக்கிய பெரியவர் கக்கராம்பட்டி கணக்கப்பிள்ளை அமரர் க. பழனிச்சாமிக் கவுண்டர் அவர்கட்கு நன்றி)

**நீர்வளம் பெருக்கிய வேட்டுவர்**

நீரை நிலத்தோடு சேர்ப்பார் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று குடபுலவியனார் என்ற சங்கப் புலவர் பாடினார். அதற்கேற்ப நீர்வளம் பெருக்கிய வேட்டுவர் சமூகத்தார் பலர் இலக்கியங்களிலும் செப்பேடுகளிலும் புகழப்படுகின்றனர்.

மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் வடகரை ஆற்றூரில் அல்லாளன் இளைய நாயக்கர் என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவர் வேட்டுவர் சமுதாயத்தில் பரமத்திச் சீமை மூள வேட்டுவர் குலம் சேர்ந்தவர் என்று செப்பேடு கூறுகிறது. நாயக்கர் என்பது மதுரை நாயக்கர் அளித்த பட்டப்பெயர். காவிரியாறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் அந்த ஆறால் கொங்கு நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை. கொங்கு நாட்டில் காவிரி பள்ளத்தில் ஓடுகிறது. நிலம் மேடாக உள்ளது. யார் முயன்றும் காவிரி நீரைக் கொங்கு நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்த முடிய வில்லை. ஆனால் அல்லாளன் இளைய நாயக்கர் காவிரியின் கிழக்குக் கரையில் சேடர்பாளையம் என்னும் இடத்தில் காவிரி நீரைப் பாய்ச்சும் வகையில் அணை கட்டி வாய்க்கால் வெட்டி ஏற்பாடு செய்தார். அந்த வாய்க்கால் ராசவாய்க்கால் என்னும் பெயரில் இன்றும் நல்ல பயன்பாட்டில் உள்ளது. ராசாவாக ஆட்சியுரிமை பெற்று ஆட்சி செய்த அல்லாளன் இளையநாயக்கர் பணி காரணமாக இன்றும் அவ்வாய்க்கால் ராசவாய்க்கால் என்ற பெயரோடு விளங்குகிறது. அவர் செய்த பெரும் பணியைக் "கொங்கு மண்டல சதகம் "

"வடமுக நின்றும் வருகா விரியின் வளத்தை
என்றும் திடமுறு கொங்கினும் பாசன மாகச் செலப்பரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம்
அமைந்துவளர் வடகரை ஆற்றூர் திகழ்வது வும்
கொங்கு மண்டலமே" என்று புகழுகிறது (78)

மற்றொரு தனிப்பாடலும் அல்லாளன் இளையா நாயக்கர் புகழைப் பலபடப் பாராட்டிக் கூறுகிறது.

"மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும்
அரசிருந்த முன்னையோர்க்கும் தேவருக்கும்
திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண்டாயே பூவிருக்கும்
உரமாயன் கடலடைத்தான் அவன்
வேடம் புனைந்தவாறோ யாவருக்கும்
இளையானே அல்லாளன் திருமலையா ஈகையோனே"
என்பது அப்பாடலாகும்.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையும் இவர் புகழ் பாடுகிறது. அல்லாளன் இளைய நாயக்கருக்கு முன்னரே கொங்கு நாட்டில் பல வேட்டுவர் சமுதாயப் பெரியவர்கள் மக்கள் நலம் பேண நீர்நிலை ஏற்படுத்தியுள்ளனர்.

மோடமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் வடபரிசார நாட்டுக் கப்பலன் கிடாரன் என்னும் ஊரில் குளம் ஒன்றை வெட்டி அதற்குத் "தாமரைக்குளம்" என்று பெயரிட்டார்.

குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் குளம் ஒன்றை வெட்டி நீர்ப்பாசனம் செய்ய வாய்க்கால்களும் அமைத்தார்.

முளையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் கிணறு ஒன்றை வெட்டி வைத்தார்.

பெரிய விலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவர் சிலம்பன் ஒரு குளம் வெட்டி அதற்கு "அக்கசாலை கங்கை" என்று பெயரிட்டார்.

வாழவந்தி இரும்புளை வேட்டுவரில் வடசேரி ஆறங்காடி குளம் ஒன்றை வெட்டினார். இவ்வாறு நீர் நிலை தந்த வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் பலராவர்.

**நல்வாளை வேட்டுவர்**

*இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பள்ளைமதில் ஆற்றோரப் பாதையில் உள்ள கல்.*

*காலம் : 13ஆம் நூற்றாண்டு*

*செய்தி : முளையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் நாயன் என்பவர் கிணறு வெட்டிக் கொடுத்தார். கல்வெட்டு ஸ்வஸ்திஸ்ரீ முளைஊரான அஞ்சாத கண்ட நல்ஊர் கிணறு மணலூர் கிழவன் சோ ழகோன் நல் வாளை வேட்டு வந் நாயன் தன்மம்.*

**பாத வேட்டுவர் இடம் :**

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருகில் பூலாம்பட்டி வரந்தரும் பெருமாள் கோயில்.*

காலம் : சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டு; கி.பி. 1292

செய்தி : குளக்குறிச்சி ஊராளிகளில் ஒருவராகிய பாதவேட்டுவரில் பிள்ளப்பன் உடையான் தன் ஏரிப் பாசனத்தில் ஒரு தடி நிலம் வரந்தரும் பெருமாளுக்குக் கொடையாகக் கொடுத்தது கூறப்படுகிறது. கல்வெட்டு பன்மரான திருபுவனச்சீ (ககர) வத்திகள் சிறி சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ஏழாவது தென் பூவாணிய நாட்டில் குளக்குறிச்சியில் ஊராளிகளில் பாதவேட்டுவரில் பிள்ளப்பன் உடையாநேன் என் ஏரியில் வயலில் ஒரு தடி நிலம் வரந்தரும் பெருமலுக்கு குடிநீங்கா திருவிடையாட்டமாக குடுத்தேன்.

**சுண்டை வேட்டுவர் இடம் :**

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், மல்லூர் அருகே மூக்குத்திபாளையம் மோழப்பாறை

காலம் : கி.பி.13ஆம் நூற்றாண்டு

செய்தி : பெரிய விலங்கி சுண்டை வேட்டுவர் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராதபள்ளை என்பவர் “அக்கைசாலை கங்கை” என்ற பெயரில் குளம் அமைத்தது கூறப்படுகிறது.

கல்வெட்டு ஸ்வஸ்திஸ்ரீ எழுகரை நாட்டு அக்கை சாலை கங்கை என்று பேரிட்டு இக்குளம் அட்டினேன் பெரியவிலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராத பிள்ளையேன் பெருமலைக்கு எல்லை... (அக்கசாலை - நாணயம் தயாரிக்கும் இடம்)

(வேட்டுவர் டிவியில் இந்த கல்வெட்டு செய்தி வந்துள்ளது )

**இரும்புளை வேட்டுவர்**

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குட்டலாம் பாறை எனுமிடத்தில் உள்ள பாறை.

காலம் : இராமச்சந்திர நாயக்கர் காலம்; கி.பி. 1645

செய்தி : இராமச்சந்திர நாயக்கர் சொல்ல வாழவந்தி இரும்புளை வேட்டுவர் வடசேரி ஆறங்காடி நயறலியார் குளம் ஒன்றைப் புதியதாக அமைத்தார். இக்குளம் சருவநாயகர் என்னும் சிவன் கோயிலுக்காக அமைக்கப்பட்டிருக்கலாம்.

செய்தி : கல்வெட்டு பார்த்திப வருஷம் தை மாதம் 10ல் ஸ்ரீ மது இராமச்சந்திர நாயக்கரய்யனவர்கள் காலத்தில் வாழவந்தியில் ஔகுபாறை சறுவநாய....... குளம் காடு கொண்டு.......... கரையில் அதுக்கு இந்தக்குளம் இராமச்சந்திர நாயக்கரய்யனவர்கள் கட்டுவிக்கச் சொல்லுகையில் வாழவந்தியில் இருக்கும் வேட்டுவரில் இரும்புளை வேட்டுவர் வடசேரி ஆறங்காடி நயறலியார் நவமாகக் கட்டுவித்தார்.

**ஆ கோள் பூசல் கல்வெட்டு**

**வேட்டுவ இளவரசர்**

இடம் : தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சின்னான்குப்பம் வேடியப்பன் நடுகல் காலம் : கி.பி. 8ஆம் நூற்றாண்டு செய்தி : வீர சேனாதிபதியார் என்பவர் வேட்டுவ இளவரசன் சேனையோடு போரிட்டு வீர மரணம் அடைந்தார்

விஜையார் .. கங்கர்

ள் மக்கள் வீரச்சேனாபதியாரு பருவான வேட்டுவ இளவரைசர் சேனை எறிந்து பட்டார் கல்.

**ஆநிரை மீட்டதற்கு நிலக்கொடை கல்வெட்டு**

கரைய வேட்டுவர் வேளான்: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன் பேட்டை பிரமீசுரமுடையார் கோயில்.

காலம் : இராசகேசரி; கி.பி. 10ஆம் நூற்றாண்டு திருவகழிமங்கலம் கரைய வேட்டுவர் காளிப்பிடாரன் ஆன கரைய வேளான் பகைவர் கவர்ந்த ஊர் மாடுகளை மீட்டார். அதற்காக அவருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.

ஸ்வஸ்திஸ்ரீ கோபராசகேசரி பருமர்க்கு செல்லா ஆறாவது திருகழிமங்கலத்தில் சபையோ ம் மேற்படி ஊரோருக்கும் கரைய வேட்டுவர் காளி பிடாரநாந கரையவேளானுக்கு மாடு மீட்டதுக்கு சிறப்பு செய்த நிலமாவது வெள்ளல் மயிலாடி 8ரைக்குத் தெக்கும் கரை இட்டேரிக்கும் மேக்கும் சிறுக்கன் நஞ்செய் அறிதலுக்கு வடக்கும் மடைவ காட்டறிதலுக்கு கிழக்கும் திருவகழி மங்ககலத்து சபையோம் கரைய வேளானுரக்கு நிலம் அட்டிக் குடுத்தோம்

**ஆநிரை மீட்டு வீரமரணம் அடைதவருக்கு நடுகல்**

**வேட்டுவ அதியரையர்**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அய்த்தாம்பாளையம் வேடியப்பன் கோயில் :

பரகேசரியின் நான்காம் ஆட்சியாண்டு; கி.பி. 911 வேட்டுவ அதியரையர் ஆளும் மேநற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிப்பாடியில் வாழும் ஆந்தை பொன்னி என்பானின் மகன் மோடையன் பகைவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டு வீரமரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் நடப்பட்டுள்ளது. கல்வெட்டு கோப்பரகேசரி பன்மர்க் கு யாண்டு நான்காவது வாண கோரையர் வேட்டுவதியரையரான மேற்கோவலூர் நாட்டு அளவிப்பாடி உடைய ஆந்தை பொன்னி மகன் மோடையன் தொறு மீட்டுப் பட்டான் கல்

**வெண்மறுக்கோட்டு வேட்டுவர்**

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், தாழையூத்து வேடியப்பன் கோயில். காலம் : நந்திவர்மனின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 8ஆம் நூற்றாண்டு

செய்தி : வேணாட்டு வெண்மறுக்கோட்டு வேட்டுவர் தாழையூரில் ஆநிரைகளைக் கவர்ந்தபோது தாழையூரைச் சேர்ந்த வண்ணக்கன் கண்ணயனார் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்தார். அவருக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு கோவிசைய நந்திபன்மரையர்க்கு யாண்டு இரண்டாவது ஊணமிறையார் வேணாடாள வெண் மறுக்கோட்டு வேட்டுவர் தாழைஊர் தொறுக் கொண்ட நான்று தாழைஊருடைய வண்ணக்கன் கண்ணயனார் தொறுப்பட்டார்.

**நடுகல்**

இடம் : விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், எடுத்தவாய் நத்தம் ஆத்துக்காடு காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : கம்பாடரு மகன் சாமி என்ற வேட்டுவகுல வீரர் ஆநிரை கவரும் போரில் இறந்ததற்காக எடுக்கப்பட்ட நினைவுக்கல் (நடுகல்). கல்வெட்டு கடை வெண் மலைக்கோட்டு வேட்டுவரு இரு வாய் தொறுக் கொளுட் பட்டான் கம்பநாட்டரு மகன் சாமி கல்

**போரில் இறந்ததற்காக எடுத்த நடுகல்**

குன்னம் வேட்டுவர்

*இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இராச பாளையம் அப்பிச்சி கோயில் அருகில் பாறை காலம் : பிரசோத்பத்தி வருடம்; 16ஆம் நூற்றாண்டு செய்தி : தந்தை குன்னத்தூர் குன்னம் வேட்டுவர் ஆவுடைக் கவுண்டர் போரில் இறந்ததற்காக மகன் வட்டமலைக்கவுண்டர் எடுத்த நடுகல். கல்வெட்டு பிரசோற்பதி வருஷம் ஆவணிமாதம் 5 தேதி குன்னத்தூர் கிறாமத்திலிருக்கும் குன்னம் வேட்டுவரில் பெரிய கவுண்டன் மகன் ஆவுடைக் கவுண்டன் கருகஞ் சண்டையில் பட்டதுக்கு அவன் மகன் மலைக் கவுண்டன் உபையம்*

**ஊர் காக்கும் போரில் வீர மரணம் அடைந்தான் கல்**

வேட்டுவ ஐயன் இடம் :

*திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கருங்காலிப் பாடிப்பட்டி வேடியப்பன் கோயில். காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு*

*செய்தி : தென் வேணாட்டு மேலைக் கருங்காலிப்பாடியை சிலகில் கா வேட்டுவையன் நிர்வாகம் செய்தார். அவருடைய அடியான் பன்றயன் புளியன் ஊர் காக்கும் போரில் வீர மரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது. கல்வெட்டு தென் வேணாட்டு மேலைக் கருங்காலிப்பாடி சிலகில்கா வேட்டுவையன் அடியேன் பன்றயன் புளியனேன் ஊரழியப் போகேனென்று பட்டான்.*

**நடுகற்கள் குறித்தப் பாடல்கள்**

*“நட்டபோதும் நடாஅ நெடுங்கல்*
*மறவர் பகழி மாயத்தென ” (அகம்., பா.26)*

*“மருங்குதல் நுணுகிய பேஎம்முதிர் நடுதல்” (அகம்., பா.297)*

இவ்விருப் பாடல்களும் நடுகற்களைப் பற்றியும், நெடுங்கல் வழிபாட்டினைக் குறித்தும் கூறுகின்றன. குன்றுகளுக்கு நடுவில் நடுகல் போல இயற்கையாகவே நிற்கும் ஒரு கல்லின் அகலமான இடத்தில் உயிர்துறந்த வீரனின் வடிவங்களைச் செதுக்கினர்

என்பதனை முதல் பாடலும், பாலையில் ஆங்காங்கு நடுகற்கள் உள்ளதையும், அவற்றில் இறந்தோரின் பெயர், பெருமை எழுதி வைக்கப்பட்டுள்ள செய்தியையும் இரண்டாவது பாடல் விளக்குகின்றது. இதனையே தொல்காப்பியர் நடுகல் வழிபாட்டிற்கு இலக்கணமாக வகுத்து,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பற பெரும்படை வாழ்ந்ததலென
றீருமூன்று விகையிற் கல்லொடு"

(தொல். பொருள். 60. நூ.அடி.19-21) என்கிறார்.

மேலும் நடுகல் அமைப்பதற்குரிய வினையமைகள் ஆறினையும் குறிப்பிட்டுள்ளார். புறநானூற்றில் மூன்றாவது மற்றும் 264ஆவது பாடல்களில், கள்வர்களால் கொலைச் செய்யப்படுவதற்கு மட்டுமல்லாமல் கறவையும் கன்றையும் கொணரச் சென்ற கரந்தை வீரனுக்கும் பதுக்கையுடன் கூடிய நடுகல் எடுத்துள்ளனர் என்பதையும், இங்கு பதுக்கையுடன் கூடிய நடுகல் எடுக்க வேண்டியதன் நோக்கம், கரந்தை வீரன் கறவையும் கன்றையும் கவரச் செல்லும்போதோ அல்லது மீட்கும்போதோ இறந்துவிடுகிறான் என்றால் அவன் இறந்த அந்த இடத்திலேயே அவனைப் புதைத்துள்ளனர்.

தொறுப்பூசலில் ஈடுபட்டு இறந்த மறவர்களுக்கு நெடுநிலை நடுகலுடன் கூடிய கற்பதுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. (தொல்லியல் நோக்கில் சங்க காலம்., பக். 31) க.ராஜன் அவர்களின் கூற்று இதனை மெய்ப்பிப்பதாக அமைகின்றது. தற்போது கண்டறியப்பட்டுள்ள பதுக்கைகள் பலவற்றில் கிழக்குப் புறத்தில் ஒரு மனிதன் நுழையும் அளவிற்கு இடைவெளி காணப்படுகின்றன. இங்கு இறந்தவனின் ஆத்மா தனக்கு வேண்டும்போது வெளியே சென்று வரவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அந்த இடைவெளி அமைக்கப்பட்டுள்ளன. பதுக்கையில் காணப்படும் இத்தகைய துளைகளைப் பற்றிய குறிப்புகள் ஏதும் புறநானூற்றிலும் இல்லை.

நார்வேயின் பனிக்கட்டிகளிலிருந்து தமிழ்நாட்டின் வெப்பமண்டல சமவெளிகள் வரையிலும் ஆதிகால வரலாற்றுக்குரிய கலாச்சாரங்களின் குறிப்பிடத்தக்க பொதுவான அம்சங்கள் அதிகமாக இருக்கத்தான் செய்கின்றன. வரலாற்றில் ஒரே சகாப்தத்தில் கல்லால் ஆன மீப்பெரும் கட்டமைப்புகளை

உருவாக்குவதற்கான யோசனை அவர்கள் அனைவருக்கும் ஒருசேர தோன்றியிருப்பதை நம்மால் வெளிப்படையாக உணர முடிகின்றது. இந்த நினைவுச் சின்னங்கள், மனித உயிர்க்காப்பின் நினைவுச்சின்னங்கள்.

பெருங்கற்படைகள் என்பது உயிரற்ற உடல் புதைக்கப்பட்ட இடங்கள் அல்லது நினைவுச்சின்னங்கள். கல்லால் ஆன பெட்டி வடிவ கல்லறை, வரையறுக்கப்பட்ட கருவூலங்களைக் கொண்ட கல் வட்டங்கள் மற்றும் கேரளாவில் காணப்படும் தனித்தன்மையான காளான் வடிவிலான புதைசேற்று அறைகள் ஆகிய கட்டமைப்புகள் இவற்றுள் அடங்கும். வெண்மையான அல்லது சர்க்காஃபாகுஸ் இன வழக்கமாக டெர்ரக்கோட்டாவினால் உருவாக்கப்பட்டிருந்த கட்டிட அமைப்புடன், மரபணுவின் எச்சங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் கல்லறைகளும் இதில் அடங்கும்.

இந்த நினைவுச்சின்னங்கள் பழங்கால கலாச்சாரம் என்று அறியப்பட்ட இயல்பான குணநலன்களை இன்றைய மக்களுக்கு எளிதாகப் புரியச்செய்பவை. மனிதரின் தொழில்நுட்ப வளர்ச்சியில், கற்காலத்தில், பழைய கற்காலத்துக்கும், புதிய கற்காலத்துக்கும் இடைப்பட்ட காலகட்டத்தைக் குறிக்கும். இடைக் கற்காலத்திலிருந்து ஆரம்பகால வரலாற்று காலத்திற்கு (கி.மு.2500 முதல் கி.பி.200 வரை) இட்டுச் செல்லும் வழமை உலகம் முழுவதிலும் நீடித்தன. இந்தியாவில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கற்காலத்தின் (கி.மு. 1500 முதல் கி.மு. 500 முதல் 1500 வரை) பெருங்கற்படைகள் நினைவுச் சின்னங்களை பெருமளவில் கண்டுபிடித்துள்ளனர். எனினும் சில தளங்கள் கற்காலங்களுக்கு முன்பே கி.மு. 2000 வரை பரவியது.

சிறிது காலமாக, விஞ்ஞான கருத்தொற்றுமையின் ஊடாக, ஒரு ஒற்றை கலாச்சார மையத்திலிருந்து தோன்றிய கருத்துகளுடன், கலாச்சாரப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதன் மூலம் இவை உலகெங்கிலும் பரப்பப்பட்டது. மரபணுச் சோதனைகள், பரிணாம வளர்ச்சிக்கூறுகள், கலாச்சார மாற்றங்கள் போன்ற அனைத்தையும் கண்காணிக்க நவீன ஆராய்ச்சிகளுக்கு இதன் மூலம் அடிப்படை வழியமைக்கும் என்ற ஆக்கப்பூர்வமான சிந்தைகளும் அதிகரிக்கின்றன. மிகவும் சிக்கலான வழக்குகளுக்கும் சில ஆய்வுகள் மூலம் ஒற்றுமை, வேற்றுமைகளின் கண்டறிதல் சிறந்த

தீர்வாகவும் அமைந்து திடுக்கிடச் செய்வதும் உண்டு. அந்த வகையில் இன்றைய விஞ்ஞானிகளும் அன்றைய இந்த நினைவுச் சின்னங்களின் கட்டமைப்புகளை வரவேற்பதோடு மீண்டும் இதே வகையிலான நினைவுச் சின்னங்கள் பல்வேறு விதங்களிலும் எழுப்பப்படுவதும் ஆரம்பித்திருக்கின்றன என்கின்றனர் கட்டிடக்கலை வல்லுநர்கள்.

மகாராஷ்டிரா மாநிலங்களில் (முக்கியமாக விதர்பாவில்), கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் அதிகளவில் குவிந்திருந்தாலும், இந்திய துணைக்கண்டத்தில் இந்த பெருங்கற்படைகள் பரவியிருந்துள்ளன.

தொல்பொருள்துறை ஆய்வாளர்கள் ஆர்.கே. மொஹந்தி மற்றும் வி. செல்வகுமார் ஆகியோர் இந்திய தீபகற்பத்தில் சுமார் 2,200 பெருங்கற்படைத் தளங்கள் காணப்படுகின்றன என்றாலும் அதைப் பற்றி பெரும்பாலானோர் ஏதும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இன்றும்கூட, மத்திய இந்தியாவின் காண்ட்ஸ் மற்றும் மேகாலயாவின் காசிஸ் போன்ற சில பழங்குடியினர் மத்தியில் இந்தவகை கல்லறைக் கலாச்சாரம் நீடித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் உண்மையில் பெருங்கற்படை மக்கள் யார்? அவர்களுடைய மத நம்பிக்கைகள் என்ன? அவர்களுடைய சமுதாயம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டது? இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்று கதைக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? போன்ற வினாக்களும் எழத்தான் செய்கின்றன.

பெருங்கற்படை கல்லறைகள் சாதாரண மக்களுக்குக் கட்டப்படவில்லை. ஆளும் வர்க்கம் அல்லது உயரடுக்கின் தலைமைகளான வேட்டுவர்கள் போன்றவர்களுக்காக மட்டுமே கட்டப்பட்டிருருந்தது என்று அறியலாம்.

ஆன்மிக நம்பிக்கையின் அடிப்படையில், மனிதன் இறந்த பின்பும் அவன் ஆன்மா அழிவதில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருப்பதையும், மீண்டும் மறுபறவி உண்டு என்ற நம்பிக்கையும் பற்றி குறிப்பிடுகிறார். “சில சந்தர்ப்பங்களில் இறந்த உடலில் இருந்து பற்கள் வெட்டி எடுக்கப்பட்டு, அவை அடுத்த பிறவியில் பயன்படுத்த தேவைப்படும் என்ற நம்பிக்கையில் புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறுபவர்களையும் கண்டிருக்கிறோம்,” என்று கூறுகிறார்.

3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று சின்னங்கள் காலம் காலமாக இப்பகுதியில் வாழும், தண்டிக்குடி எனும் இம்மண்ணின் மலைவாழ் மக்களால் 3500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தங்கள் முன்னோர்களின் ஈமச் சின்னங்களான ஈமக்குழிகளும் முதுமக்கள் தாழிகளும் கற்திட்டைகளும் கற்பதுக்கைகளும் பாதுகாக்கப்படுகிறது.

நான்கு புறமும் தட்டையான பெரிய கற்களால் தடுப்பு அமைத்து அதற்குள் இறந்தவர்களின் உடலை வைத்து மூடுகல் கொண்டு மூடி வைப்பது கல் திட்டைகள் எனப்படுவது. இதே போன்று சற்று ஆழமாகத் தோண்டி அதனுள் தாழிகளில் உடல்களை வைப்பது கல்பதுக்கை. இறந்தவர்களின், அவரவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் ஆபரணங்களையும், அவர்களுக்குத் தேவை என்ற நம்பிக்கையில் தானியங்களையும் உள்ளே வைத்து படைத்திருக்கிறார்கள்.

2,500 ஆண்டுகளுக்கு முன் வணிக பெருநகரமாக விளங்கிய திருப்பூர்-ஈரோடு மாவட்ட எல்லையிலுள்ள கொடுமணல் பகுதியில், மொத்தம் 50 ஏக்கர் பரப்பளவுள்ள வாழ்விட பகுதியில் 9 அகழாய்வு குழிகளும், 100 ஏக்கர் பரப்பளவுள்ள ஈமக்காட்டில், நடுகல், வட்ட கல் என 100 ஈமச்சின்னங்கள் உள்ளன. இதில் ஒரு ஈமச்சின்னமும் தோண்டப்பட்டுள்ளது. இதில், மூன்று அறைகள், வடமேற்கு மூலையில் உயர் வெண்கல குவளை, கீழ் பகுதி சல்லடை போல் அமைப்பும் இருந்தது. வணிகர்கள் அதிகளவு வந்து தங்கியிருந்ததும் 1912ம் ஆண்டு, ஐந்து கல் தொலைவில் உள்ள கத்தாங்கண்ணியில் கிடைத்த ரோமானிய நாணயக் குவியலும், வணிக தொடர்புகளை உறுதிப்படுத்துகின்றன. தமிழ் பிராமி எழுத்து பொறித்த மண்பாண்டங்கள் கிடைத்ததும், எழுத்து இலக்கணப் பிழையில்லாமல் உள்ளதால் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் கல்வி அறிவை விளக்குகிறது. வடக்கத்திய கருப்பு வண்ணம் மெருகேற்றப்பட்ட மண்பாண்டங்கள் பிராகிருத மொழியில் பெயர் பொறித்து ஆட் பெயர்கள், பெருங்கற்படை சின்னங்கள், இனக்குழு சார்ந்த வாழ்வியலையும், அவர்களுக்கு தேவையான உணவு உற்பத்திக்கு வேளாண் தொழில் மேற்கொண்டதற்கான உழவு, அறுவடைக்கான உபகரணங்கள், சேமிப்பு கிடங்குகள், கால்நடை எலும்புகள் அதிகளவு கிடைத்துள்ளதால் கால்நடை வளர்ப்பும் சிறந்து விளங்கியுள்ளது தெரியவருகிறது.

கல்லறையில் புதைக்கப்பட்ட நபருக்கு மரியாதை நிமித்தமாக உள்ளே வைக்கப்படும் பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்தவோ அல்லது திருடிச் செல்லவோ எவரும் முனையவில்லை. ஆன்மாவின் மீது கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடுகளாகவே இத்தகைய மனநிலைகளைக் காணமுடிகின்றது. இறந்தவர்களை புதைக்கப்பட்ட இடங்கள் சிலவற்றில் நெற்களஞ்சியம் காணப்படுகிறது. அவர்களது இறப்பிற்குப் பின்னும் அவர்தன் ஆன்மாவிற்கு வசதியானதொரு வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் இதுபோன்ற கல்லறைக் கலாச்சாரங்கள் அதிகளவில் பரவியிருந்ததையும் அறிய முடிகிறது.

கி.மு.700-800 காலத்தின் விதர்பாவில் சில புதைகுழி கண்டுபிடிப்புகளில் குதிரைகளின் மண்டை ஓடுகளும், குளம்பு எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன. அருணாசல பிரதேசத்தில் ஓரிசா மற்றும் மிதுன் பழங்குடி இன மக்களிடையே சடங்கிற்காக எருமைகளை பலி கொடுத்த பின்னர் அதை உண்ணும் வழக்கம் இருந்துள்ளதைக் குறிப்பிடுகிறார்கள்.

“நண்பர்கள், உறவினர்கள் போன்றவர்களை வெளி கிராமங்களிலிருந்தும், வேற்று சாதியினரையும் அழைத்து கல்லறை வளாகத்தில் அல்லது நினைவுச்சின்னத்தின் கல்லை நிறுவுகிறார்கள். பின் ஆட்டுக்குட்டிகளையும், ஆட்டுக்கிடாய்களையும் கிராம தெய்வங்களுக்குப் பலி கொடுத்து, முன்னோர்களுக்கும் படையல் வைத்துவிட்டு அந்த மாமிச உணவை எல்லோருக்கும் வழங்கி கௌரவிக்கிறார்கள். இந்த சடங்கில் கொல்லப்பட்ட மிருகங்கள் ஆவி உலகத்தில் இறந்தவர்களின் சொத்துகளாக மாறும் என்றும் நம்புகிறார்கள். அதோடு இந்த விழா ஏற்பாடு செய்யாவிட்டால் அவர்கள் ஆண்டு முழுவதும் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்ளுவார்கள் என்றும் நம்புகிறார்கள். ”

மீட்கப்பட்ட இரும்புப் பழங்காலத் தொகுதிகள், பெருங்கற்படைக்கால மக்கள் பெருமளவிலான தொழில்களை மேற்கொண்டனர், தச்சர்கள், சப்பாத்து தயாரிப்பாளர்கள், செருப்பு தைக்கும் தொழிலாளர்கள், மூங்கில் கைவினைஞர்கள், ரத்தினங்கள், செம்பு, தங்க, ஆபரணங்கள் செய்யும் ஆசாரிகள், பொற்கொல்லர்கள் மற்றும் சிக்கலான சமூக அமைப்பின் ஏனைய ஆதாரங்கள் ஆகியவற்றையும் குறிக்கும். பல்வேறு விலையுயர்ந்த கற்கள் மற்றும்

மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரின் பகுதிகளின் அகழாய்வுகளில் எருமை, ஆடு, புலி மற்றும் யானைகள் போன்ற விலங்குகளின் வெண்கல சிலைகள் புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

குறிப்பிடத்தக்க வகையில், தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் உள்ள சில பெருங்கற்படை புதைகுழியில் உரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சொல்லப்போனால், பழங்கால தமிழ் சங்க இலக்கியத்தில் பல பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக குத்துக்கல் என்பதை நடுகல் வகை என குறிப்பிடப்படுகிறது.

நினைவுச் சின்னம் என்பது, குறிப்பிடத்தக்க மனிதர்கள், நிகழ்வுகளை நேரடியாக நினைவு கூர்வதற்கான சாதனமாகக் கொள்ளலாம். ஒரு சமூகத்தினருடைய கடந்தகால அனுபவங்களின் நினைவுகளின் எச்சமாகக் காணமுடிகின்றது. குறிப்பிட்ட அந்த நபரின் பாரம்பரியம், பொருளாதாரம், சமூக நிலை போன்றவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு அதன் அழகை மேம்படுத்திக்காட்டவும் இதுபோன்ற அமைப்புகள் பயன்படுகின்றன.

**கற்பதுக்கை**

கற்பதுக்கை சங்க காலம் என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி.மூன்றாம் நூற்றாண்டுவரை எனத் தொல்லியல் ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் தமிழகத்தில் பல போர்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அக்கால இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். அப்போர்களில் பலர் வீரமரணம் அடைந்தனர். அவர்களைப் புதைத்த இடங்கள் ‘பதுக்கை’ எனப்பட்டன. இதைப் பெருங்கற் காலப் பண்பாடு என்றும் கூறுவர்.

“பதுக்கையில் கல்நடல் அல்லது அந்தப் பதுக்கைகள் மீது கல்நட்டு அதில் அவர்கள் உருவத்தைச் செதுக்கி, அவற்றில் அவ்வீரர்களின் பெருமைகளையும், பெயரையும் பொறித்து வைத்தனர். வீரர் நினைவாக நட்டகல் என்பதால் அது நடுகல்” எனப்பட்டது. இதனை,

“அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை’
பதுக்கை சேர்த்தி
பீடும் பெயரும் எழுதி
இனி நட்டனரே கல்லும்” எனச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்நடுகற்கள் வீரர்களுக்கான வீரக்கல், நினைவுக்கற்கள் என்றும் கூறப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் எழுத்துடைய பல நடுகற்கள் இருந்தன என்ற குறிப்புகள் கிடைக்கப் பெற்றாலும், எழுத்துடைய சங்ககால நடுகற்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. அகழாய்வுகளில் பல பெருங்கற்படைச் சின்னங்களைத் தோண்டியெடுத்து ஆய்வு செய்துள்ளனர்.

இறந்தவர்களின் ஆன்மா வெளியே வந்து செல்லும் என்ற நம்பிக்கையில் பக்கவாட்டில் துளையிடப்பட்டுள்ள கல்திட்டை சேலம் அருகே மல்லச்சத்திரம் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நாய்தானே என்று அநாவசியமாக நினைக்காமல் அந்த உயிரின் மீதும் அன்பு வைத்து வாழ்ந்த வீரர்களும் அரசாண்ட அந்த காலத்திலேயே இருந்துள்ளனர். கி.பி.949-ல் கன்னரதேவன் என்ற மன்னன் சோழ மன்னனிடம் போரிட்டு வெற்றி கொண்டான். அந்தப் போரில் அவன் படையை சிறப்பாக வழி நடத்திய தளபதிக்கு மன்னன், காளி என்ற தன்னுடைய அருமையான வேட்டை நாயைப் பரிசாக அளித்தான். தளபதி அந்த நாயின் மீது மாறாத அன்பு கொண்டு வளர்த்தான். ஒரு வேட்டையின்போது அந்த காளி கொல்லப்பட்டது. அந்த நாயைப் புதைத்த இடத்தின் நடுகல்லுக்கு வழிபாடு நடத்த ஒரு பூசாரியை நியமித்து, அந்த செலவுக்கு ஒரு வயலையும் தானமாக அளித்தானாம். சிவன் கோவில் வளாகத்திலேயே தன் அருமை நாய்க்கு இடம் அளித்து, நடுகல் அமைத்த ஒரு தளபதி!

திருப்பூர் - ஈரோடு மாவட்ட எல்லையில், நொய்யல் ஆற்றின் கரையிலுள்ள கொடுமணல் கிராமத்தின் அகழாய்வில் மொத்தம் 50 ஏக்கர் பரப்பளவுள்ள வாழ்விட பகுதியில், 9 அகழாய்வு குழிகளும், 100 ஏக்கர் பரப்பளவுள்ள ஈமக்காட்டில், நடுகல், வட்டக்கல் என 100 ஈமச்சின்னங்கள் உள்ளன. இதில், ஒரு ஈமச்சின்னமும் தோண்டப்பட்டுள்ளது. இதில், மூன்று அறைகள், வடமேற்கு மூலையில் உயர் வெண்கல குவளை, கீழ் பகுதி சல்லடை போல் அமைப்பும் இருந்தது. 2500 ஆண்டுகளுக்கு முன் சிறந்து விளங்கிய நகர், தோண்டி எடுக்கப்பட்டுள்ள நிலையில், கல்மணி அணிகலன்கள் மற்றும் உலோக அணிகலன்கள், சங்கு அணிகலன்கள் தயாரிப்பில் சிறந்து விளங்கியதை அறியமுடிகிறது.

பச்சைக்கல், நீலக்கல், பளிங்கு, சூதுபவளம், சேசுபர், அகேட், குருந்தம், வைடூரியம், மாவுக்கல் முதலிய அரிய கற்களைக் கொண்டு மணிகள் செய்யும் தொழில் சிறப்பாக நடந்து வந்துள்ளது எனவும், மேற்கூறியவற்றில் வைடூரியம், சூதுபவளம், அகேட் போன்றவை மூலப் பொருட்களாக இந்தியாவின் பிற பகுதியிலிருந்து தருவிக்கப்பட்டு இங்கு ஆபரணங்களாக உருவாக்கப்பட்டுள்ளன . மயிரிழை அளவு துளைகள் கொண்ட மணிகள் கொடுமணலில் கிடைப்பதால், தமிழர்கள் தொழில்நுட்பம் நன்கு அறிந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இத்தொழில் சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கியதோடு, பெருமளவு அந்நியச் செலாவணியையும் தமிழகத்திற்கு ஈட்டித் தந்துள்ளதும் அறியமுடிகிறது.

தமிழகத்தின் வடமேற்கு பகுதியில் பெருங்கற்படை சின்னங்களும், தென்கிழக்கு பகுதியில் (ஆதிச்ச நல்லூர்) முதுமக்கள் தாழிகளும் தமிழகத்தின் இரும்புப் பண்பாட்டு காலச் சின்னங்களாக உள்ளன. தக்காணத்தில் உள்ள வடபகுதி பெருங்கற்படைச் சின்னங்களின் அகழாய்வு கொண்டுதான் தென்னிந்திய இரும்புக் காலப் பண்பாடு கி.மு. 1200 எனக் கொள்ளப்படுகிறது. ஆனால் தமிழகத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஆதிச்சநல்லூரில் இது வரை 1%க்கு குறைவான அகழாய்வே நடத்தப்பட்டுள்ளது (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்-கா.ராஜன், பக்:26).

தமிழக பெருங்கற்கால குறியீடுகள், பிற தொன்மையான நாகரிகங்களின் குறியீடுகளோடு ஒப்புமை கொண்டிருப்பது, பண்டைய தமிழகத்திற்கும் பிற தொன்மையான நாகரிக நாடுகளுக்கும் இடையே இருந்த வணிகப் பண்பாட்டுத் தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

**நவகண்டம் - அரிகண்டம்**

‘நவகண்டம்’ என்பதன் பொருள் நவம் - ஒன்பது, கண்டம் -துண்டங்கள். ஒரு வீரர் தம் உடலை 9 துண்டங்களாகத் தாமே வெட்டிக்கொண்டு உயிர் துறப்பது.

‘அரிகண்டம்’ என்றால் ஒரு வீரன் தம்மைத்தாமே வாளால் கழுத்தை அறுத்துக்கொண்டு உயிர்த்தியாகம் செய்வது. தலையை ஒரு கையால் பிடித்துக் கொண்டோ, தலையை ஓரிடத்தில் இழுத்துக் கட்டியோ மறுகையால் வாள் கொண்டு கழுத்தினை அறுத்து பலி கொடுப்பது. பழங்காலத்தில் மன்னர்கள் போரில் வெற்றிபெறவும்,

அவர்கள் நலம் பெறவும், தாங்கள் எடுத்துக்கொண்ட முக்கிய நலப்பணித் திட்டங்கள் எவ்விதத் தடங்கலுமின்றி நடந்தேறவும் போர்வீரர்கள் கொற்றவை தெய்வத்தின் முன், தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்துள்ளதை சிற்பங்கள், நடுகற்கள், கல்வெட்டுகள் போன்ற ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. கொற்றவைக்கு அவ்வாறு பலியிட்டுக் கொள்பவர்கள் கூரிய வாளால் தங்கள் உடலை ஒன்பது பாகங்களாக, அதாவது கை, கால், வயிறு ஆகிய பகுதிகளை அரிந்துகொண்டு இறுதியாகத் தன் தலையைத் தானே அறுத்துக்கொள்வர். இதனை வெளிப்படுத்தும் ‘நவகண்ட சிற்பங்கள்’ தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணமுடிகிறது. குறிப்பாக பழம்பெரும் நாடான கொங்கு நாட்டில் மிக அதிகமாகக் காணப்படுவதை அறியமுடிகிறது.

அரச விசுவாசிகளான படை வீராகள் தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்வதற்கான பலிபீடங்கள் பட்டினப்பாக்கத்தில் இருந்தமையை இளங்கோவடிகளின் கீழ்கண்ட பாடலின் மூலம் அறியமுடிகிறது:

“வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலியூட்டி”

( இந்திர விழவூரெடுத்த காதை 85-88 )

மேற்கண்ட அடிகள் மூலம் வீரா்கள் தமது தலையைத்தாமே வெட்டி பலிபீடத்தில் வைப்பதைக் குறிப்பிடுகின்றன.

மேலும் கொற்றவைக்கு தலையை அரிந்து கொடுக்கும் சிற்பங்களை மகாபலிபுரம் - திரௌபதி ரதத்திலும் சிங்கவரம் குன்றத்திலும் திருவானைக்காவிலும் காணலாம்.

கம்பவர்மன் காலத்து நடுகல் ஒன்றில் இதைப்பற்றி சிறப்பாகக் கூறுவதைக் காணலாம்.

“ஸ்ரீகம்ப பருமற்கி யாண்டு இருபதாவது
பட்டை பொத்தவனுக்கு ஒக்கொண்ட நாதன்
ஒக்கதிந்தன் பட்டை பொத்தன் மேதவம்
புரிந்ததென்று பிடாரிக்கு நவகண்டம் குடுத்து
குன்றகத் தலை அறிந்துப் படலிகை மேல்
வைத்தானுக்கு”

என்பது அந்தக் கல்வெட்டு வாசகம்.

**நவகண்டச் சிற்பங்கள் - தலைபலி சிலைகள்**

*கொங்கு நாட்டுச் சிவன் கோவில்களில் நவகண்டச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வேட்டுவர்கள் கொற்றவையின் பல புகழையும் கூறிப் பரவி, விறல் வெய்யோன் வெட்சி சூடுக எனத் தம் அரசனை வாழ்த்தினர். வேட்டுவவரி சித்தரிக்கும் கொற்றவையின் தோற்றத்தில் வைதீகச் சார்பு மிக்கிருந்தாலும் எயினர்களின் கொற்றவை வழிபாடு பழைய வேட்டைச் சமூக மரபுகளையே அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளமை சிலப்பதிகார வேட்டுவவரியின் தனிச் சிறப்பாகும்.*

*இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது*
*சுட்டுத் தலைபோகாத் தொல் குடிக் குமரியை-*
*சிறு வெள் அரவின் குருளை நாண் சுற்றி*
*குறு நெறிக் கூந்தல் நெடு முடி கட்டி,*
*இளை க்ஷழ் படப்பை இழுக்கிய ஏனத்து*
*வளை வெண் கோடு பறித்து, மற்று அது*
*முளை வெண் திங்கள் என்னச் சாத்தி;*
*மறம் கொள் வயப் புலி வாய் பிளந்து பெற்ற*
*மாலை வெண்பல் தாலி நிரை பூட்டி;*
*வரியும் புள்ளியும் மயங்கு வான் புறத்து*
*உரிவை மேகலை உடீஇ; பரிவொடு*
*கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்*
*திரிதரு கோட்டுக் கலைமேல் ஏற்றி;*
*பாவையும், கிளியும், தூவி அம் சிறைக்*
*கானக்கோழியும், நீல் நிற மஞ்ஞையும்,*
*பந்தும், கழங்கும், தந்தனர் பரசி;*
*வண்ணமும், சுண்ணமும், தண் நறுஞ் சாந்தமும்,*
*புழுக்கலும், நோலையும், விழுக்கு உடை மடையும்,*
*பூவும், புகையும், மேவிய விரையும்,*
*ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின் வர;*

*ஆறு எறி பறையும், சூறைச் சின்னமும்,*
*கோடும், குழலும், பீடு கெழு மணியும்,*
*கணம் கொண்டு துவைப்ப; அணங்கு முன் நிறீஇ*
*விலைப்பலி உண்ணும் மலர் பலி - பீடிகை,*
*கலைப் பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி-*

*2. வேட்டுவ வரி 20 - 40*

இராமாயண காலத்தில் இலங்கையில் இந்த வழக்கம் இருந்ததை இராவணன் புதல்வர்களான மேகநாதன், இந்திரசித் ஆகியோர் பயங்கரமான நிகும்பளா குகையில் நடத்திய சடங்குகள் காட்டுகின்றன.

பொதுவாக நாட்டுப்புறப் பாடல்கள், வில்லுப்பாட்டுகள், கும்மிப் பாடல்கள் போன்றவைகள் பத்ரகாளியம்மனை சிவபெருமானின் துணைவியாக, பராசக்தியின் அம்சமாகவும், திருமாலின் இளைய சகோதரியாகவும் குறிக்கப்படுவதால் சைவம், வைணவம் என இரண்டையும் பாலமாக இணைக்கும் தெய்வம் அன்னை பத்ரகாளி எனக் கருதலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். தாய்த்தெய்வம் என்று மக்களால் அன்பாக போற்றப்படும் பத்ரகாளியன்னை, மாகாளி, ஓம் காளி, கொற்றவை, எல்லைப் படாரி, பத்ரகாளி என பல்வேறு திருநாமங்கள்கொண்டு போற்றப்படுகிறாள். காளி என்றால் கறுத்தவள் என்றும் பொருள்படும். பீடையை அறுப்பவள் பிடாரியானாள். தீமைகளை, தீயவர்களை, தீய எண்ணங்களை அழித்து நல்லவைகளை நிலைநாட்டுபவர்கள் பேராண்மை பெற்று விளங்க எண்ணுவோர் காளியை வழிபடுகின்றனர். அதாவது அன்னை அருள்வடிவாய் காட்சியளிக்கும்போது பவானியாகவும், ஆண் சக்தியாக அருள்பாலிக்கும்போது துர்க்கையாகவும் விளங்குகின்றாள் என்கின்றனர் ஆன்றோர். அந்த வகையில் பழம்பெரும் நகரமான அந்தியூர் எனும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பத்ரகாளியம்மன் சகல செல்வங்களும் அருளும் வடிவுடை அன்னையாகத் திகழ்கிறாள். இவள் வீற்றிருக்கும் ஆலயமோ ஆயிரம் ஆண்டுகள் பழமையானது!

ஈரோட்டிலிருந்து வடக்கு புறம் 35 கி.மீ. தொலைவில் உள்ளது அந்தியூர். செல்லீசுவரர் திருக்கோவில் மற்றும் அழகராசப் பெருமாள் திருக்கோவிலும் அருகிருக்க இக்கோவில் அந்தியூர் கோட்டையின் உட்புறத்தில் மேற்குப் புறமாக அமைந்துள்ளது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடன், கொங்கர்களும் தனியாட்சி செய்துவந்த நாடு கொங்கு நாடு என்பது. 24 உட்பிரிவுகள் கொண்ட கொங்கு நாட்டில், பவானி ஆற்றின் வடபுறம் உள்ள வடகொங்கு வடகரை நாடு என்பதும் ஒன்றாகும். இந்த வடகரை நாட்டின் தலைநகராக இருந்தது அந்தியூர்.

கொங்கு நாட்டின் வடக்கு எல்லையாக இருப்பது பர்கூர் மலைத்தொடர். சங்க காலச் சிறப்புமிக்க நகரங்களில் முக்கியமானது அந்தியூர். அகநானூறு எனும் சங்க இலக்கியத்தின் 71-ஆம் பாடலைப் பாடிய 'அந்தி இளங்கீரனார்' என்ற புலவர் அந்தியூரைச் சேர்ந்த அந்தி வேட்டுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து இவ்வூரின் பழமையை அறிய முடிகிறது. பண்டைக் காலத்தில் மூன்று சுற்றுகளுடன் அகழிப்பாதுகாப்பும் கொண்ட, வராக நதிக்கரை ஓரத்தில் அமைக்கப்பட்டிருந்த மண்கோட்டை இன்று அழிந்துவிட்டாலும் கோவில்கள் இவ்வூரின் பழம்பெருமையை எடுத்துரைக்கின்றன.

அந்தியூரின் தென்கிழக்கு மூலையில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது இவ்வாலயம். கோவிலின் முன்புறம் அறுபது அடி நீளமுள்ள குண்டம் காணலாம். குண்டத்தின் மேற்குப்புறம் கம்பீரமான வடிவுடைய பெரியதொரு கணபதியைக் காணலாம். திருக்கோவில் வாயிலில் அழகும், அச்சமும் ஒருங்கே அமையப்பெற்ற கம்பீரத் தோற்றத்துடன் இரண்டு பூதகணங்கள் காவல்புரியும் காட்சி மெய்சிலிர்க்கச் செய்பவை. மகாமண்டபத்தில் முருகன் மற்றும் பிள்ளையார் திருவுருவங்கள் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளனர்.

**களப்பலி வீரர் சிற்பம்! - நவகண்டம்**

மூதுபுகழ் கொண்ட கொங்கு நாட்டில் வீரப்பெண்மணிகளின் வரலாறு எண்ணற்றவை. தங்கள் நாட்டு மன்னன் போரில் பகைவர்களை அழித்து வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தங்கள் தலையை வெட்டி வெற்றித் தெய்வமாகிய காளி அன்னைக்கு காணிக்கையாக்கும் வழமை இருந்துள்ளது. கி.பி. 1265-1285 காலத்திய ராஜகேசரிவர்மன் என்கிற வீரபாண்டித் தேவரின் கல்வெட்டுகள் இதற்கு ஆதாரமாக உள்ளன. அவ்வழக்கத்தின்படி பெண் வீரர்களும் தங்களையே களப்பலி கொடுத்துள்ளனர் என்பதற்கு ஆதாரமாக அந்தியூர் ஸ்ரீபத்திரகாளியம்மன் திருக்கோவிலில் தமது தலையைத் தாமே வெட்டிக்கொண்டு பலி கொடுக்கும் வீரப்பெண்மணிகளின் சிலைகள் உள்ளன. மேலும் ஒரு நவகண்ட வீரர் சிற்பம், இடப்புறம் மனைவியுடனும், வித்தியாசமான ஆடை, ஆபரணங்கள் அணிந்தவாரும் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இன்றும் ஈரோடு, சென்னிமலை, திருச்செங்கோடு, கபிலர்மலை, மதுரை, திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் சாவான் சாமி" கோயில்கள் உள்ளன. சேலத்தில் எடப்பாடி, புதுப்பாளையம், தாரமங்கலம், அத்தனூர், மணப்பள்ளி, கல்யாணி, சிங்களாந்தபுரம் ஆகிய ஊர்களில் நவகண்ட சிற்பங்கள் உள்ளன.

காரைக்குடிக்கு மேற்கே 9.கி.மீ. தொலைவில் உள்ளது குன்றக்குடி. இங்குள்ள குடைவரைக் கோயிலிலுள்ள கொற்றவை சிற்பம் எழில்மிக்கது. கொற்றவையின் வலப்புறத்தே வீரன் ஒருவன் நவகண்டம் அளிக்க, தன் வலக்கையால் வாளை ஏந்தி அடிக்கழுத்தில் நெடுஞ்சிரத்தை அரியும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. இதேபோல கொற்றவைக்கு தலையை அரிந்து கொடுக்கும் சிற்பங்களை மகாபலிபுரம் - திரௌபதி ரதத்திலும், சிங்கவரம் குன்றத்திலும், திருவானைக்காவிலும் காணலாம்.

அத்தனூர் அம்மன் கோவில் (ராசிபுரம்), சிங்களாந்தபுரம் சந்தைப்பேட்டை, புதுப்பாளையம் முப்பீஸ்வரர் கோவிலில் மூன்று நவகண்ட சிற்பங்கள் (எடப்பாடி), தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்திலிருந்து கிழக்கே 4 கி.மீ. தொலைவிலுள்ள பெண்ணேசுவரமடம் கோயிலின் முன்புறம் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நவகண்ட சிற்பம் என பல்வேறு சிற்பங்களைக் காணமுடிகிறது. திருவான்மியூரிலுள்ள கி.பி.889ஆம் ஆண்டு கல்வெட்டொன்று பட்டிப்பொத்தன் என்பவன் நவகண்டம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. அம்பலக் கூத்தன் என்ற வீரன் தன் படைத் தலைவனின் நோய் குணமாக நவகண்டம் கொடுத்துள்ளதை முதலாம் குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. கல்வெட்டு பொறிக்கப்படாத நவகண்டக் கற்கள் கரூர், பேரூர், அவினாசி, ஆறூர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. கொற்றவை வழிபாட்டு மரபில் நவகண்டம் என்னும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

இந்த சிற்பங்கள் ஒன்றிலும் எழுத்துக்கள் இல்லை என்பதால் அவர்கள் யார் என்றும் அவர்களின் வரலாறு என்னவென்றும் அறிந்து கொள்ள முடியவில்லை.

கி.பி. 1600 ஆம் ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய பேரரசு பாண்டிய மன்னர்களின் மெய்காவலர்களாக இருந்தவர்கள் பண்டாரம் இனத்தைச் சார்ந்த வைராவி மட்டுமே. மன்னருக்காகத்

தங்கள் இன்னுயிர் கொடுப்பவர்கள் வைராவிகள் மட்டுமே. யுத்தத்திற்கு முன்னால் ஒரு இராச இரத்தத்தை பலியாக கொடுத்தால் காளிதேவி வெற்றிக்கு உதவுவாள் என்பது ஐதீகம்.

கலிங்கத்துப்பரணியில் சோழ அரசின் வெற்றிக்காக இப்படி தலையை அறுத்து பலிகொண்ட வீரனைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. இது போலவே தண்டனையாகவும் தன் தலையைத் தானே அறுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சி ஒரு பெரிய விழா போன்று நடத்தப்படும். நவகண்டம் / அரிகண்டம் கொடுப்பதற்கு முன் உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுவர். நவகண்டம் கொடுப்பவர் இடையில் உடைவாளும், மார்பில் கவசமும் தரித்து போர்வீரன் போல் போர்க்கோலம் பூண்டு இருப்பார். கொற்றவைக்கு பூசை முடித்து பின்பு, தனது இடது கையினால் முடியைப் பிடித்து வலது கையினால் கழுத்தை வெட்டிக் கொண்டு இறப்பர்.

**நவகண்டம் கொடுப்பதற்கான காரணங்கள் :**

வலிமையான எதிரி நாட்டுடன் போர் புரிய நேரும் போது, வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்ற தருணங்களில் தெய்வத்தின் அருளை நாட வேண்டியுள்ளது. துர்க்கைக்குப் பலி கொடுத்தால் தெய்வத்தின் அருள் கிட்டும் என்ற நம்பிக்கையில் நவகண்டம் கொடுக்கப்பட்டது. உடல் ஆரோக்கியம் கெட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கும் அரசனுக்கு, அவன் நலம் திரும்ப அவரது விசுவாசிகளால் நவகண்டம் கொடுக்கப்பட்டது.

கடுமையான நோய் தாக்குதலால் சாவை எதிர் நோக்கி காத்திருக்கும் ஒருவர் வீர சொர்க்கம் அடைய விரும்பி நவகண்டம் கொடுத்துக் கொள்வது.

குற்றவாளி ஒருவன் தான் செய்த குற்றத்தினால் மரண தண்டனைக்கு உள்ளாகும்போது, அவ்வாறு சாகாமல் அரசன் அனுமதியுடன் நவகண்டம் கொடுத்துக் கொண்டு வீர சொர்க்கம் அடைவது.

மற்றுமொரு சுவையான செய்தி - ஒருவன் போர்க் காயத்தினாலோ, நோயினாலோ சாகும் தருவாயில் அவனுக்கு

முடிக்க வேண்டிய கடமைகள் பாக்கி இருக்குமாயின் தனது இறப்பைத் தள்ளிப் போடுமாறு இறைவனிடம் வேண்டுவர். அந்த கடமை நிறைவேறியதும் நவகண்டம் கொடுத்துக் கொள்வர். பெரும் அவமானத்தைப் பெற்றபின் அதற்கு மேல் வாழ விரும்பாமல் சாக விரும்புபவன் கோழையாக இல்லாமல் வீரச்சாவை விரும்பி நவகண்டம் கொடுத்துக் கொள்வர்.

சோழர்களுக்கு "வேளக்கார படைகள்" மற்றும் பாண்டியர்களுக்கு "தென்னவன் ஆபத்துதவிகள்" போன்ற தற்காப்புப் படைகள் இருந்தன. அரசர் உயிருக்கு ஆபத்து நேர்கையில் கொற்றவையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாகிவிடுவர்.

உலகின் உயிரினங்கள் அடைந்த வளர்ச்சியினை உணர்த்தும் காலக் கண்ணாடி வரலாறு என்பது. வீரதீரச்செயல் புரிந்தவர்களின் வரலாற்று அடையாளமாகவே இந்த நவகண்டச் சிற்பங்கள் உள்ளன. இவை பல இடங்களில் கால வரலாற்றைக்காட்டும் முக்கிய ஆவணங்களாகவே விளங்குகின்றன.

**வேட்டுவர் கலி வெண்பா**

இந்நூல் வேட்டுவ சமுதாயக் குலங்களையும் அதன் பெருமைகளையும் தொகுத்துக் கூறுகிறது. பாடலுக்குப்பின் இதில் கூறப்பட்டுள்ள குலங்கள் அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

திருக்கச்சனுட திருக்குலங்கள் ஏதோ என்றால் பெருக்கமுடன் கேளும் அவர் பிரபலத்தை - உருக்கமுடன் மாவலன் தன்குலமும் வல்லதிரு வேடாதிரை காவலன் தன்குலமும் காசினியில் - மாலனம் மலையரையன் அக்கினியோன் மாமலையர் வேட்டுவனாம் புலிமுகவேட்டுவராயன் புட்பகுலன் - சிலதுரைகள் அந்திகுலன் அம்பகுலன் அனாதிஅதி முக்குலத்தோன் அந்துவ வேட்டுவராயன் அமரகுலன் - சுந்தரஞ்சேர் கொந்துலவும் சாக்கைகுலன் கூறும் கடம்பகுலன் பைந்தமிழ்சேர் அமராபதிகுலத்தோன் - விந்தைசெறி சந்திரகுல வேட்டுவனும் தவணர்குல வேட்டுவனும் தேவேந்திரன் எனுங்குலத்தோன் - சிந்துரம்சேர் குறுமுனிவன் தன்குலமும் குயில்குலன் அகத்தியனும் ஆறுமுகவேட்டுவராயன் அகோரகுலன்

- சருவர்புகழ் அருணைகுலன் அரிகுலத்தோன் அந்திரவானந்தகுலன் கருணைகுலன் கணபதிநற் கரியகுலன் - இரணகுலன் வடமலைவேட்டுவராயன் மகாமுனி வேட்டுவனும் குடதிசையில் மந்திர குலதிலதன் நடனமிடும் பேருவுலங் கீர்த்திகொண்ட பரபலவான் காளாச்சிகுலன் ம் வாருவுலவும் சுண்டைகுலன் மகாவீரன் - சீருலவும் முன்னை குலன் முசுட்டைகுலன் முளைகுலன் மோக்காளி புன்னைகுலன் மாச்சாடி மும்மடிகுலன் - அன்னைகுலன் கொம்மடிமேல் சாந்தைகுலன் தன்மகுலன் நரியகுலன் இம்மடி வில்லிகுலம் வல்லகுலம் - மும்முடிவேள் முடக்காளி வேட்டுவனும் மூவுலகும் கீர்த்தி பெற்ற முடக்கடிவேட்டுவராயன் மூத்தகுலன் - தடக்கையஞ்சூழ் சர் கட்டாரி வேட்டுவனும் கரடிகுலன் கட்டிகுலன் பட்டாலி வேட்டுவனாம் பங்கயத்தோன் - மட்டாரும் காட்டுவெகு லேந்திரதுரை காசினியில் உடும்பைகுலன்

**நாட்டுவர் குலேந்திரன் எனும் நற்பாலன் – தீட்டு புகழ்**

கிழங்கைகுலன் கீரந்தை கீழ்முகவேட்டுவராயன் தளபதிகூச் சந்திகுலன் சமரர்குலன் - நளினமுள்ள கோமாளி வேட்டுவனும் கொடும்பரிவேட்டுவராயன் பூமாரிக் கரையகுலன் புல்லைகுலன்-கோமாரிகுலன் குண்ணாடி கூகைகுலன் கொல்லிகுலன் கொன்னைகுலன் புன்னாடி காவலர் பூலுவகுலத்தோன் - மண்ணாளும் கவுதாரி வேதாரி காடைகுலன் செங்கண்ணும் அவுதானன் கொடுமுடியோன் நவகுலத்தோன் - பவம்அகற்றும் இணையில்லா வேட்டுவரும் ராசகெம்பீரதுரை கணை தொடுக்கும் வல்லவன் காளகத்தி குலன் - மணியகுலன் சத்திகுலன் சாடிகுலம் சாந்தப்படை சக்கைகுலன் பத்திகுலன் சத்திரியகுலன் பனையகுலன் - புத்தியுள்ள கமலாலயகுலத்தோன் கருங்கண்ணும் கீழ்ச்சாத்தை குமரர் எனும்குலத்தோன் குடுமிகுலன் - சமரில்வரும் கச்சிகுலன் கொச்சிகுலன் கரும்பூளை செம்பூளை நச்சுழிவேட் டுவராயன் நம்பகுலன் மெச்சிவரும் இலங்கைகுலன் விதரிகுலன் எரிமுகனும் சிறுபூளை நலம்புகழும் கெம்பீர ராயகுலன் -குலங்களிலே குக்கவேட்டுவராயன் குருகுலவேட் டுவகுலத்தோன் துர்க்கைகுலன் துக்காச்சி வேட்டுவனும் - மிக்கபுகழ்

பரிப்படையோன் கடும்பரியான் படைத்தகன

வேட்டுவராயன் கரிப்படையோன் தன்குலத்தில் காசிபனும் - செருக்களத்தில் தோராத வேட்டுவனும் தூரைகுலன் தேரைகுலன் பாராளும் பாண்டியகுலன் பதாகுலன் - சீரான உரிமைப்படை வேட்டுவனும் உயர்குடி வேட்டுவனும் பெருமைபெறும் பானுகுலன் பொன்னைகுலன் - பருவமுடன் பார்வதிதன் குலத்தில் வரும் பகவதிதன் மூளைகுலன் சீர்பெறும்தண் ணம்பகுலன் தென்குலத்தோன் - பார்புகழும் பிள்ளகுலன் பறையகுலன் பறட்டைகுலன் புளியகுலன் கள்ளகுலம் பூவாணி வெங்கச்சிகுலம் - வெள்ளைகுலன் வேந்தகுலம் வேங்கைகுலம் வீரன்சிறுத் தலைகுலத்தோன் சாந்தணியும் பீச்சைகுலன் சதாசிவத்தோன் - காந்திபெறும் பரிமளசம் பந்தகுலம் பற்பகுலன் கற்பகுலன்.

இரணகுலன் நாரணனும் இமையகுலன் - கருணைபெறும் செம்பகுலன் வாசகுலன் தீர்க்கமுள்ள தூவைகுலன் கெம்பீர ஆவைகுலன் தும்பைகுலம் - சம்பரமிகு

உத்தரகுலன் வேம்பகுலன் உண்மைபெறும் விளக்கைகுலம் பத்திரம்சேர் மயிலகுலன் பரமகுலன் - வெற்றிபெறும் தற்காக்கும் விளியகுலன் சமையகுலன் உமையகுலன் விற்காமன் எனும்வீர சங்கிலிகுலத்தோன் - நற்காமன்

வில்வகுலம் நான்முகனும் வீரியவாள் சர்ப்பகுலன் செல்வன் எனும் தனஞ்செய சேவகத்தோன் - கல்வியெனும் அம்பிகாபதி குலத்தோன் அரிச்சந்திர வேட்டுவனும் கும்பமுனி சாம்பவி கோதண்டகுலம் - சம்பரமிகு தொய்யகுலன் காரைகுலன் சுப்பரமண் ணியகுலத்தோன் துய்யபுகழ் காந்திகுலன் சுந்தரகுலம் - வய்யகத்தில் பெருந்தலைவேட்டுவராயன் பேருலகும் கீர்த்திபெற்ற கரும்புளிய வேட்டுவனும் கருங்காலி - துரந்தரனாம் சுறட்டைகுலன் கட்டைகுலம் தொக்ககுலம் உத்தகுலம் முறட்டைகுலன் காஞ்சிகுலன் முல்லைகுலன் - பரட்டைகுலம் த பண்ணைகுலன் பண்பான் காடைகுலன் கண்ணகுல வேட்டுவனாம் கரியகுலன் - பண்ணரிய சிவக்காடை வேட்டுவனும் சீரும்வீ ராந்திகுலம் தவத்தால் அரியசிவ தவங்கள்பெற்றோன் - நவக்காலம்.

சிறந்தபுள் ளந்தைகுலன் சிறியவகை பெரியவகை அறம்தழைக்கும் பூபாலர் அநேகமுண்டாம் நிறைந்தபணி பூணாரம் பூணுகின்ற பரமகுலன் கோபாலர் சோணாச்சல குருவாம் சுக்கிரவர்

- கோணாத அங்கிகுலன் திங்கள்குலன் அச்சுதனாம் பண்ணைகுலன் இங்கிதவேள் சூரியகுலன் ராசதுரை - எங்கும் அருள் பெற்றிடும் குபேரகுலன் பிரபுடிகன் சர்க்காரன் கற்றகவி வாணர்புகழ் கவிராசன் - சற்றும் புரைக்கவடில் லாததுரை பூவுலகில் பலகைகுலன் அவனருளால் சிறைமீட்ட அய்வர்குலம் - தெரிதமிழால் உரைத்தேன் அவர்பெருமை உத்தமனே நித்தமவர் தரிப்பாரே பூஷணமும் தனவர்க்கை - கரியபோர்வை போற்றும் தயாபரனைப் பூசிப்பார் நேசமுடன் மாற்றும் கலியகற்றும் மகராசர் - நாற்றிசையும் தனஞ்செயனும் சுக்கிரகுலன்யிதில்வீர உக்கிரகுலன் லம் தனம் பெரிய விக்கிரமசர்க் காரன்குலன் - தனஞ்செறிந்த திருக்கச்ச யானதுரை தீரன்ஐவர் தன்குலத்தை தருக்கயன்மால் தேடரிய சதாசிவனார் - பெருக்கமான் இத்தனைபேர் என்றுசொல்ல எவராலும் முடியாது சத்தி பத்ரகாளி சிவன்தான் சரணம்.

**ஆளும் தலைவர்கள் வேட்டுவர்**

வேட்டுவர் பெருமக்கள் பலர் ஆளும் தலைவர்களாகச் சிறப்புடன் விளங்கியுள்ளனர். அவர்கட்கு "ஊராளி", "நாடாழ்வான்", "கொங்காள்வான்", "கொங்குராயன்" போன்ற அடைமொழிகள் காணப்படுவது அதனை விளக்கும். சிலர் "அதிகாரன் " என்று அழைக்கப்பட்டுள்ளனர். "மன்றாடி" பட்டம் பெற்றவர் பலர், கொடிவேரி குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டைமான் பிள்ளன்ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்:

நாமக்கல் "புல்லை வேட்டுவரில் நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப்பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி அரங்கராயன் " வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் வளர்ந்த அம்மத திருவ நாடாழ்வான் வீரசிங்கன் துக்காச்சி ஊராளி வேட்டுவன் அழகன் காளி? கீரனூர் காவலன் மேலைக்கரையரில் சொக்கன் ஊராளி:

"பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்" பெரியவிலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் அமைத்த ஆராத பிள்ளை

பட்டில் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவர் பெரியதேவன் உலகவிடங்கம் கள்ளை வேட்டுவரில் ஊராளிகளில் கருஞ்சொக்கன்

வலிய சொக்கன் போன்ற பலர் ஊர், நாடு ஆட்சி செய்த அரசு அலுவலர்களாக இருந்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன. வேட்டுவகுலப் பெருமக்கள் பலர் மூவேந்தர்களால் "மன்றாடி" பட்டம் பெற்று ஊர் அதிகாரம் செய்ததை சோழன்பூர்வ பட்டயம் விளக்குகிறது.

பேரரசர்களால் பெற்ற பெரும் சிறப்பு வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் அரசு, அரையர், மந்திரி, நாடாழ்வான் என்ற சிறப்புப் பெற்றும் அதியமான், சேனாவரையன், காலிங்கராயன், தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பட்டும் பெரும் சிறப்புப் பெற்றுள்ளனர். பலருக்கு அரசர்கள் தங்கள் பெயர்களையே வைத்துக் கொள்ளும் உரிமையையும் கொடுத்துள்ளனர்.

12-14 ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் உயர்நிலையில் அவர்கள் இருந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. பெயர் அமைப்பே அதனை விளக்குகிறது.

"வெங்கம்பூர் புல்லை வேட்டுவரில் வானவதரையன் வலங்கை வாழவந்தான் ஆன சுந்தரபாண்டிய வீரசிங்கதேவன் காங்கயம் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரியதேவன் ஆன தொண்டைமான்"

"கீரனூர் வேட்டுவர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை திங்களூர் வேட்டுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன்"

"முளையூர் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் "

"பொழில்வாய்ச்சி பூலுவர் சிலம்பன் பிள்ளையான அதியன் காலிங்கராயன் "

"பருத்திப்பள்ளி ஊராளி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்"

வேட்டுவர் சமுதாயத்தில் பலர் சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன்! "

"பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன்? "

“முத்தூர் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் ”

“ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன் ”

“கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன் ”

“கவையன்புத்தூர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன் ஆன உத்தமசோழப் பல்லவரையன் ”

# துணைநின்ற நூல்கள்


1) தொல்குடி வேட்டுவர் வாழ்வும் வரலாறும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு - தொகுதி 1, தொகுதி 2

2) தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம் தமிழ்நாடு அரசு வெளியீடு.

3) வேட்டுவர் சமூக அவணங்கள் புலவர் செ.இராசு

4) சங்ககலமறவர் - செ.மா. கணபதி

5) அய்யன் சமூகம் தோற்றமும் வளர்ச்சியும்

6) தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வு களும் - க.சுபாஷினி.

7) அகநானூறு.

8) புறநானூறு.

9) மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி - ஆவணம் இதழ் 4

10) வேட்டுவர் சமூகம் ஓர் வரலாற்றுப் பார்வை - சிற்பி ராஜசேகரதங்கமணி.

11) அப்பிச்சிமார் காவியம் - புலவர் இராசு.

12) மா.ராசமாணிக்கனார் தாலி - சொற்பொருள் ஆராய்ச்சிக் கட்டுரை, (தினமலர் (11.03.2018) வாரமலர்

13) கொங்கு நாட்டுக்கவுண்டர்கள் - வீயாரம்.

14) பண்டைத்தமிழ்ச் சமூகம் வரலாற்றுப்புரிதலை நோக்கி - கார்த்திகேசு சிவத்தம்பி.

15) களப்பிரர் போர் தமிழ் வேட்டுவர் கன்னட வேட்டுவர் ஏ.கே. சந்திரசேகரன்.

16) பாட்டும்தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கம் ராஜ்கவுதமன்.

17) புராண இதிகாசங்களில் வேட்டுவர் வரலாறு - மூர்த்தி.

18) 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நிலம் தொல்லியல் நோக்கில் சங்ககாலம் நிலவரைபடம் சி இளங்கோ.

19) தமிழர் தளபதி - புலவர் கா கோவிந்தன்.

20) தமிழர் மானிடவியல்- பக்தவச்சல பாரதி.

21) ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும் ராஜ்கவுதமன்.

22) தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு சங்க காலம் ராஜ்கவுதமன்.

23) தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பு வரலாற்று வித்தகர் பேராசிரியர் இராசசேகரதங்கமணி.

24) வில்லோர் உழவர்கள் சங்க இலக்கியங்கள் புகழும் சங்க கால வேட்டுவர் வேளிர்கள் ஆசிரியை இறைவி எம்.ஏ.,பி.எட்.

25) கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில் தல வரலாறு வரலாற்று வித்தகர் பேராசிரியர் இராசசேகரதங்க மணி.

26) அரை நாட்டு மன்னன் அல்லாள இளையான் வெளியீடு அல்லாள இளையான் அறக்கட்டளை.

27) வேட்டுவ மன்னன் வல்வில்ஓரி - கவிதா வாழைபரமேஸ்வரன்.

28) தொல்குடிவேட்டுவர் ஆவணம் -பா. ஆனந்தகுமார்.

29) வேட்டுவர் சமூக ஆவணம் - புலவர் இராசு.

30) குருகுல காவியம்.

31) கொங்குமண்டலச்சதகம்.

32) கொங்குதேசராஜாக்கள்.

34) வடகரை நாட்டு வரலாறு - ஆய்வு நூல்

35) தலைய நாட்டு வரலாறு -ஆய்வு நூல்

## செப்பேடு

1) அல்லாளாஇளையான் செப்பேடு.

2) குறிப்பு நாட்டுப் பட்டயம்.

3) சோழர்கள் பூர்வ பட்டயம்.

4) ஊசிப்பாளையம் செப்பேடு.

5) கபிலர்மலைச் செப்பேடு



வேட்டுவ மறவர்களின் போர்த்தெய்வம்

# கொற்றவை



ஆநிரை கவர்தல் (வெட்சி)



ஆநிரை மீட்டல் (கரந்தை)